Deviyin KANMANI -Tamil Fortnightly DECEMBER-15, 2010 Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News paper: for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப்பற்றி...



'கண்மணி' வாசக நெஞ்சங்களுக்கு
வணக்கம்!

சென்ற முறை 'மாலைப்பொழுதின் மயக்கத்திலே...' நாவலுக்கு நீங்கள் அளித்த பேராதரவும், வரவேற்பும்... என்னை மகிழ்ச்சிக்கடலில் ...த்தளிக்க வைத்தன. 'ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா?...' 'என்ற நாவலின் மூலம் மீண்டும் உங்களை சந்திக்க வந்திருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கதாநாயகி சங்கமித்திரை ஒரு அழகுப் பெட்டகம்! அவளை உருகி மருகி நேசித்துக் கரம் பற்றிகிறான். முகில் கிரிதரன். அந்தக் கால காவிய நாயகி சகுந்தலையை... துஷ்யந்தன் மறந்து கைவிட்டதைப் போன்றே... முகிலும் மித்ராவை மறந்து கைவிடுகிறான்.

'ஒன்று சேர்ந்த அன்பு மாறாது. உண்மைக் காதல் மாறிப் போகாது' என்று கூறுவார்கள். சங்கமித்திரையும் முகில் கிரிதரனும் இறுதியில் இணைந்து விட்டார்களா? இல்லையா? என்பதை வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

அன்புடன்
லட்சுமி பிரபா.



# ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா?

பசுவின் மடி பீய்ச்சியடிக்கும் பாலைப் போல...

இளங்காலைக் கதிரவன் தன் ஒளியை பூமியில் பொழிய ஆரம்பித்திருந்தது. வெம்மை மிகாத பால் ஒளி!

நெடிய ரப்பர் மரங்களின் ஊடாய் வெளிச்சம் வழிந்த அழகை ரசித்தபடி நடந்தாள் சங்க மித்திரை.

அவளது அழகிய முகத்தில் பெருமிதம் ஒட்டிக் கொண்டு இருந்தது. நேற்று தான் தேர்வு முடிவுகள் வெளியாகியிருந்தன. பி.ஈ.கம்ப்யூட்டர் என்ஜினீயரிங் கோர்ஸில் முதல் வகுப்பில் அவள் தேறியிருந்தாள்.

அப்பா சக்கரவர்த்திக்கு அவள் மீது அதீத பாசம்.. அவர் தேவாரம் எஸ்டேட்டில் கணக்கராக பல ஆண்டுகள் உழைத்த பின்னர் இப்போது தான் தலைமை மேற்பார்வையாளர் பதவியை எட்டிப் பிடித்திருந்தார். கட்டும் செட்டுமாக குடும்பத்தை நடத்தி வந்த வருமானத்தில்... சங்கமித்திரையை தேனியில் உள்ள ஹாஸ்டலில் சேர்த்து விட்டு படிக்க வைத்தார்.

பிளஸ்டு-வில் அவள் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்ததால் பணத்திற்கு செலவில்லாமல் வெகு சுலபமாய் அவளுக்கு கல்லூரியில் சீட் கிடைத்து விட்டிருந்தது.

கண்ணும் கருத்துமாய் சிரத்தையாய் படித்ததில் ... நான்கு ஆண்டுகள் மாயமாய் பறந்து விட்டிருந்தன.

அப்பா சக்கரவர்த்தியையும், அம்மா தங்கத்தையும் நினைத்துப் பார்த்தாலே... அவளது உள்ளம் பெருமிதத்தில் பூரித்துப் போய்விடும். அம்மா தங்கம் வெகுளியானவள் 'குடும்பமே உலகம்' என்று வாழ்பவள். சூது வாது அறியாத அப்பாவி!

## லட்சுமி பிரபா



அப்பா சக்கரவர்த்திக்கு சுயநலமாய் சிந்திக்கவே தெரியாது. பற்றாக்குறை பட்ஜெட்டில் வாழ்ந்தாலும்... குணத்தில் அவர் ஒரு 'சக்கரவர்த்தி' யாகத்தானிருந்தார்.

குலதெய்வம் கோவிலுக்குச் சென்று திரும்பிய தங்கை சிவகாமியும் அவளது கணவரும் விபத்தில் அகால மரணமடைந்ததும்... தங்கை சிவகாமியின் இரு குழந்தைகளையும் சக்கரவர்த்தி தன் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டிருந்தார்.

தாய் மாமனின் வீட்டில் அடைக்கலமாய் தஞ்சம் புகுந்த செல்வத்திற்கும், தாராவிற்கும் ... ''பெற்றவர்களை இழந்து அனாதைகளாகி விட்டோமே'' என்ற தவிப்பே.. துளி கூட தோன்றவில்லை.

சக்கரவர்த்தியின் மனமறிந்து நடப்பவள் தங்கம். இருவரும் பாச மழை பொழிந்ததால் ... தாராவுக்கும், செல்வத்திற்கும் துக்கம் சிறிதளவு கூட தலை காட்டவே இல்லை. மனதளவில் சக்கரவர்த்தியையும், தங்கத்தையும் நடமாடும் தெய்வங்களாகவே பூஜித்து வந்தனர்.

செல்வம் சங்கமித்திரையை விட ஏழு வயது மூத்தவன். தாரா நான்கு வயது மூத்தவள்.

தாராவுக்கு படிப்பு மண்டையில் ஏறவில்லை. ஒன்பதாம் வகுப்போடு படிப்புக்கு முழுக்கு போட்டு விட்டு... தையல் கலை, சமையல் கலையைக் கற்றுக் கொண்டு... வீட்டில் வளைய வந்து கொண்டிருந்த தாராவுக்கு ... இரு ஆண்டுகளுக்கு முன்பு தான் திருமணம் நடந்தேறியது.

பத்து பவுன் போட்டு சீர் செனத்தி செய்து பெற்ற மகளைப் போன்றே தாராவை வழியனுப்பி வைத்த தன் தந்தையைக் கண்டு...சங்கமித்திரை பெருமிதத்தில் பூரித்துப் போனாள்.

செல்வம், பட்டப்படிப்பை முடித்த கையோடு...எஸ்டேட்டிலேயே சூப்பர்வைஸர் வேலையைத் தேடிக் கொண்டு ... சக்கரவர்த்தியை விட்டுப் பிரிய மனமில்லாமல் ... விசுவாசமாய் அந்த வீட்டில் ஒரு மகனைப் போல் வளைய வந்து கொண்டிருந்தான்.

சங்கமித்திரைக்கு அபாரமான படிப்பாற்றல் இருந்ததைக் கண்டு அடிக்கடி சக்கரவர்த்தி சிலாகித்துப் பேசுவார்.

''மித்ரா! நம்ம வம்சத்திலேயே யாருக்கும் உன் அளவுக்கு படிப்பு வந்ததில்லை... உன்னை அழகா படைச்ச கடவுள்... எவ்விக்கும் அழியாத கல்விச் செல்வத்தையும் வாரி வழங்கியிருக்காரு....

நீ எவ்வளவு வேணும்னாலும் படி!... நீ பொண்ணா பொறந்துட்டே....உனக்கொரு கல்யாணம் பண்ணி வைக்கணும்'னு ... மத்த பெத்தவங்க மாதிரி பேசி... உனக்கு நான் ஒருக்காலும் முட்டுக்கட்டை போடவே மாட்டேன்.

நீ நல்லா படிச்சு பெரிய உத்தியோகத்துக்குப் போகணும். நல்ல பதவியில் நீ உட்காரணும். கை நிறைய சம்பாதிக்கணும். என் மனக்கு திருப்தி படற வரை நான் படிச்சிட்டேன். இனிமே உங்க இஷ்

டன் அப்பான்னு ... நீ சொல்லணும்.

அதுக்கு அப்புறம் தான் நான் உனக்கேத்த வரனைத் தேட ஆரம்பிப்பேன். சந்தோஷம் தானே ராஜாத்தி?''

''உங்களுக்கு மகளா பிறக்க ... நான் குடுத்து வச்சிருக்கணும் அப்பா! தேங்க்ஸ் அப்பா!'' சந்தோஷமாய் பதிலளிப்பாள் சங்கமித்திரை.

''நல்லாயிருக்கே நீங்க பேசுறது?...உங்க பெண்ணை விட்டா நாற்பது வயசு வரைக்கும் படிச்சுக்கிட்டே இருப்பா...

காலாகாலத்துல நம்ம கடமையை நாம முடிக்க வேணாமா? நமக்கும் வயசாகிட்டே போகுது. நல்ல இடமா பார்த்து சீக்கிரமா இவளைக் கரைசேத்திட்டோம்னா... நாம நிம்மதியா மூச்சு விடலாமே?'' என்று புலம்புவாள் தங்கம்.

''ஏன் இப்படிப் புலம்பறே தங்கம்? நம்ம மித்ரா தங்கமான பொண்ணு! நாம்ப கிழிச்ச கோட்டை என்னிக்காவது அவ தாண்டியிருக்காளா?

நம்ம மித்ராவோட குணத்துக்கும், அழகுக்கும், படிப்புக்கும் எந்த மாப்பிள்ளை அமைஞ்சிட்டா... உடனடியா கல்யாணம் தான்...

நாம்ம எந்த முடிவெடுத்தாலும்... மித்ரா மீறவே மாட்டான்னு உனக்குத் தெரியாதா? எனக்கு மட்டும் அக்கறை இல்லையா என்ன?

அவளுக்கேத்த நல்ல வரன் அமையணுமேன்னு உள்ளூர எனக்கும் கவலையாத் தானிருக்கு. சில சமயம் இப்படிக்கூட தோணுது... கையில வெண்ணெயை வச்சுக்கிட்டு நெய்க்கு அலையற மாதிரியும் இருக்கு...''

''நம்ப செல்வம் அடக்க ஒடுக்கமான பையன். பணிவா பாசமா பதவிசா இருக்கான். அவன் கையில் மித்ராவைப் பிடிச்சுக் குடுத்தா... எந்த பிரச்சனையும் இல்ல... மித்ராவையும் நாம்ம பிரிய வேண்டியது இல்ல...''

''ஹாம்! அதுக்குத் தான் குடுப்பினை இல்லாம போச்சே தங்கம்! சின்ன வயசிலேருந்து ஒண்ணாவே வளர்ந்ததாலே... செல்வம் அந்தான் எனக்கு உறவு முறையில.... முறைப் பையனா இருக்கலாம்... ஆனா மனசளவிலே அவரை ஒரு அண்ணனாகத் தான் நான் பாவிக்கிறேன் அப்பான்னு... மித்ரா சொல்லிட்டாளே?

அவ பேசினதைக் கேட்டதுக்கு அப்புறம்... அந்த ஆசைக்கே நான் முழுக்கு போட்டுட்டேன். நாம ஆசைப்பட்டா முடியுமா?

இன்னாருக்கு இன்னார் தான்'னு...கடவுள் என்னிக்கோ முடிச்சு போட்டு வச்சிருப்பாரே? அதன்படி தானே வாழ்க்கை துணை அமையும்?''

''அம்மாடி மித்ரா! நீ ஹாஸ்டல்லே தங்கியிருக்கிறவ... லீவு கிடைக்கும் போது தானே... இங்க வர்றே?

இனிமே நீ இங்க வர்றப்போ எல்லாம்... தவறாம ஒரு காரியம் பண்ணும்மா...

நம்ம எஸ்டேட்டுல... ஆஞ்சநேயர் சன்னதி இருக்கு பாரு...அங்க போயி வேண்டிக்கிட்டு... நெய் விளக்கேத்தி வாலில் குங்குமம் பொட்டு வச்சுட்டு வாம்மா... நல்ல வேலை கிடைக்கும். நல்ல கணவர் கிடைச்சு உன் வாழ்க்கை அமோகமா இருக்கும். அந்த ஆஞ்சநேயர் ரொம்ப சக்தி வாய்ந்தவரும்மா நெனச்சது நடக்கும்... கேட்டது கிடைக்கும்... நான் சொன்னபடி செய்றியா மித்ரா?

''உங்க வார்த்தையைதான் என்னிக்கு மீறியிருக்கேன்? உங்க இஷ்டப்படியே செய்றேன் அப்பா!'' மித்ரா சம்மதம் தெரிவிப்பதற்குள் அவசரமாய் இடை புகுந்தாள் தங்கம்.

''அந்த இடம் ரொம்ப ஆபத்தானது ஆச்சே! ஆஞ்சநேயர் சன்னதிக்கு வெகு சமீபத்துல பெரிய அதல பாதாளம் இருக்கே! ஒட்டினாப் பல பெரிய மலைச்சரிவு... வேணாங்க... அங்க அப்பப்போ உயிர்ச்சேதாரம் ஆயிட்டிருக்கு... நம்ம வீட்டுல இருக்கிற சாமி படத்துக்கு குங்குமப்பொட்டு வச்சு விளக்கேத்தி வேண்டிக்கட்டும்...''

அம்மாவின் முகத்தில் படர்ந்திருந்த பீதியைப் பார்த்ததும் மித்ராவின் இதழோரம் புன்னகை மலர்ந்தது.

''எதுக்கு அம்மா இப்படி பயப்படறே? அந்த இடத்தைப் பத்தின விவரம் தெரியாதவங்க... இயற்கை அழகை ரசிக்கப் பார்க்க ஆர்வமா வந்தவங்க சில பேரு... ஆபத்துல மாட்டியிருக்கலாம்.

எனக்கு எல்லா விவரமும் தெரியுமே? நான் என்ன சின்னக்குழந்தையா? இந்த எஸ்டேட்டுல இருக்கிற எல்லாப் பகுதிகளும் எனக்கு அத்துப்படியாச்சே? எனக்கு ஒண்ணும் ஆகாது. நான் ஜாக்கிரதையா போயிட்டு வந்துடுவேன். சரியா?

அந்த ஆஞ்சநேயர் மிகுந்த வரப் பிரசாதியாச்சே? அவரு நம்மை காப்பாத்த மாட்டாரா?

அப்பா சொன்னதுமே... நான் உடனே ஒத்துக்கிட்டதுக்கு இன்

''நம்ம இன்ஸ்பெக்டர் சந்தோஷமாயிருந்தா... கபாலி வந்திட்டு போயிருக்கான்னு அர்த்தம்.''

''சோகமாயிருந்தா?''

''அல்வா கொடுத்திட்டு போயிருக்கான்னு அர்த்தம்.''

-தென்கரை.சி.சங்கர், வந்தவாசி.



ரொரு காரணமும் இருக்கும்மா"

"உன்னைப் பெத்தவ நான் உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா? அவ்வளவு கூடத் தெரியாதவள்னா பொண்ணு நீ! அந்த ஆஞ்சநேயர் சன்னதி உள்ள இடம்... இயற்கை அழகு கொட்டிக் கிடக்கிற பிரதேசமாச்சே... விளக்கேத்தற சாக்குல அடிக்கடி அந்த இடத்துக்குப் போகலாம்னு தானே... உடனே ஒத்துக்கிட்டே?"

"கரெக்டா சொல்லிட்டியேம்மா... இன்னிக்கு இருந்தே 'வெண்ணிலவை' தொடங்கிட வேண்டியது தான்"

சிரித்தபடியே சாமி மாடத்துக்குக் கீழே இருந்த அர்ச்சனைக் கூடையில்... செந்தூரத்தையும், கற்பூரம் ஊதுபத்தி சிறிய நெய் டப்பாவையும் எடுத்து வைத்தாள் சங்கமித்திரை.

"நானும் கூட வரேன் மித்ரா"

"வேண்டாம்மா... உனக்கு வீசிங் ட்ரபிள் வேற இருக்கு. வெளியே போயிட்டு வந்தா... மூச்சிரைப்பு ரொம்ப ஜாஸ்தியாயிடும்.

இது நம்ம ஊரு... போற வழியில தேயிலைத் தோட்டம், ரப்பர் தோட்டம், ஏலக்காய் தோட்டத்திலே ஆளுங்க வேலை பார்த்திட்டு இருப்பாங்க... பயப்படாதேம்மா... நான் பத்திரமா போயிட்டு வந்திடுவேன்"

அன்றிலிருந்து இதோ... இன்று வரை மித்ரா இங்கு வரும் போதெல்லாம் தவறாமல்... வெண்ணை உருண்டைப் பாறைக்கு சமீபத்திலுள்ள ஆஞ்சநேயர் சன்னதிக்கு சென்று கொண்டு தான் இருக்கிறாள்.

சங்கமித்திரை... ஒரு அழகுப் பெட்டகம்! அன்பின் உறைவிடம்! பணிவு, பண்பு, அடக்கம், பவ்யம், சகிப்புத் தன்மை, பொறுமை, மனிதநேயம், தியாக மனப்பான்மை போன்ற ஒட்டு மொத்த குணாதிசயங்களின் இருப்பிடம்...!

அழகு இருக்கும் இடத்தில்... ஆணவம் ஓடி வந்து ஒட்டிக் கொள்ளும் என்பார்கள்.

ஆனால் சங்கமித்திரையோ... காவிய கால நாயகியைப் போன்று தன்னிகரில்லாப் பேரழகுடன் மிளிர்ந்த போதும்...

அணுவளவு கூட அவளிடம் ஆணவம் எட்டிப் பார்த்ததில்லை என்பது நிஜம்.

'காதல்' என்ற வார்த்தையைக் கேட்டாலே.. அருவருப்பில் முகம் சுளிப்பவள் தான் சங்கமித்திரை.

தானுண்டு தன் வேலையுண்டு என்று பொறுப்புணர்ச்சியுடன் இருந்தவள் தான்!

'காதலுக்கு கண்ணில்லை' என்பார்கள். விதி சிரித்தது! சங்கமித்திரையை சங்கடத்தில் தள்ளி அலைக்கழிப்பதற்காக .... விதி. காதல் என்னும் சதி வலையை விரித்து வைத்து காத்துக் கொண்டிருந்தது.



# 2

'கண்டமனூர் ஜமீன் மாளிகை'

முதல் முறையாக ஜமீன் மாளிகையை எதிர்ப்பட்டுப் பார்ப்பவர்களின் விழிகள் வியப்பால் விரிந்து விடும்.

அந்த அளவிற்கு பிரமாண்டமாய் விஸ்தாரமாய் செல்வச் செழிப்பைக் கட்டியம் கூறும் விதமாய் கம்பீரமாய்... காண்போரை பிரமிக்க வைத்துக் கொண்டிருந்தது ஜமீன் மாளிகை.

உள்ளே பிரமாண்டமான ஹாலின் வலது பக்க சுவரில்... சந்தன மாலை சூட்டப்பட்டிருந்த ஆளுயர படத்தின் எதிரே நின்று கொண்டிருந்தாள் ஜமீன் தாரிணி ரத்தினம்.

வெள்ளிக் கிண்ணத்தில் நெய் மணக்கும் பாதாம் பால் அல்வாவை நிறைத்துக் கொண்டு வந்து... அந்த ஆளுயர படத்தின் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்தவளின் விழிகளிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அந்த ஆளுயர படத்தில்... நான்கு வயது மதிக்கத்தக்க சிறுமியின் உருவம்!

கருநீல வண்ணத்தில் பட்டுப் பாவாடை அணிந்து நெற்றி சுட்டி டாலடிக்க... செவிகளில் வைரக்கல் பதிக்கப்பட்ட குட்டி ஜிமிக்கிகளுடன் ...வைரப் பதக்கத்துடன் இணைந்த நீண்ட மாங்காய் டாலர் அணிந்தபடி... குட்டி தேவதை போல் ஜொலித்துக் கொண்டிருந்தாள் அந்த சிறுமி.

கருகருவென்ற கேசம், பிறைநெற்றி, கரு வண்டு கண்கள், எடுப்பான நாசி, மாம்பழக் கன்னங்கள், பால் வடியும் முகம்... அந்த ஆகாய வெண்ணிலாவிற்கு கை, கால் முளைத்து விட்டாற் போன்ற பேரழகு... அவளது பெயர் கூட வெண்ணிலா தான்.

"அம்மாடி வெண்ணிலா! பத்து வருஷமா குழந்தை இல்லாம தவமாய் தவமிருந்து உன்னைப் பெத்தெடுத்தேனே?

அந்த மகாலட்சுமியே குழந்தை ரூபத்துல பொறந்த மாதிரி... பொழுதோட நீ இருந்ததைப் பார்த்து... நானும் உங்கப்பாவும் பூரிச்சுப் போனோமே?

மழலையில் நீ கொஞ்சிப் பேசி என் கழுத்தைக் கட்டிக்கிற போதெல்லாம்... உலகத்திலேயே நான்தான் பாக்கியசாலின்னு பெருமிதப் படுவேனே?

எந்தக் கொள்ளிக் கண் பட்டதோ நிலைச்சு மாண்டு போயிட்டியோ? இன்னிக்கு உன்னோட நினைவு நாள்... உனக்கு பதிலா... அன்னிக்கே எமன் என்னைக் கொண்டு போயிருக்கக் கூடாதா?" - கதறினாள் ரத்தினம்.

"அம்மா! என்னம்மா நீங்க?" உரிமையுடன் அதட்டி வருணலைக் கேட்டு மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள்.

அவளது தோளில் ஆதரவாய் கை வைத்த படி ... ஆறுதலாக வாய் ஆறுதலில், உடைந்த கோதுமையின் நிறத்தில் கனை பொருந்திய முகத்துடன் வந்து நின்ற முகில் இந்திரனை நீர் நிரைவிட்டப்பட்ட விழிகளால் ஏறிட்டாள் நந்தினி.

"பி.பி., சுகர், கொலஸ்ட்ரால்னு எப்பட்ட வியாதிகளை நீ தூக்கி வைக்கு எடுத்துட்டு இருக்கிறது போதாதா? இப்படி அழுது டென்ஷன் பட்டா... உடம்பு என்னத்துக்கு ஆகும்?

அக்கா வெண்ணிலா தன்னோட நாலு வயசிலேயே இறந்து போயிட்டா... அது பெரிய இழப்பு தான்... இல்லேன்னு நான் சொல்லலை...

அதுக்கு அப்புறம் தான் பிறந்து... எனக்கே இப்போ இருபத்தஞ்சு வயசாகுதே? மனக்கவலையை ஆற்றும் சக்தி காலத்திற்கு உண்டு'ன்னு சொல்வாங்க...

ஆனா ... இத்தனை வருஷங்கள் கடந்தும் நீங்க இப்படி அழுறதைப் பார்த்தா... உங்க காயம் இன்னமும் ஆறலைன்னு நான் தோணுது..."

"இல்ல அந்தக் காயம் நாங்க சாகற வரைக்கும் ஆறவே ஆறாதுப்பா... மனைத் தேத்திவிருப்போம்.

ஆனா... நல்லா ஓடி விளையாடிட்டிருந்த குழந்தை... இரவு தூங்கப் போனவள் திரும்பக் கண்முழிக்கலை... உடம்பெல்லாம் நீலம் பாய்ந்திருந்தது...

பாம்போ... மத்த விஷ ஜந்துக்களோ அவளைக் கடிச்ச தடயம்... உடம்புல எங்கேயும் இல்ல...

நம்ம குடும்ப டாக்டர் வந்து பார்த்துட்டு ... கடுமையான விஷம் பாய்ஞ்சு குழந்தை இறந்துட்டதா சொன்னாரு...

ஒரு இளவரசி மாதிரி வளைய வந்தவளோட சாவில் ஏதோ ஒரு மர்மம் இருக்குன்னு ... சொல்லிட்டுப் போயிட்டாரு...

அதைக்கேட்டதும் அதிர்ச்சியில் நாங்க சுக்கு நூறா நொறுங்கிப் போயிட்டோம் தெரியுமா?" என்றார் அப்பா ராஜமார்த்தாண்டம்.

"அக்கா வெண்ணிலாவோட சாவுக்கு யார் காரணம்னு... இன்னமும் உங்களால கண்டு பிடிக்கவே முடியலையே?

அதைத்தான் என்னால தாங்கிக்கவே முடியலைப்பா...

அக்காவோட சாவைக் காரணம் காட்டி என்னை உங்க கூட வச்சுக்காம சின்ன வயசிலே வெளியூர்லே ஹாஸ்டல்லே சேர்த்து விட்டு படிக்க வச்சீங்க.

பெத்தவங்களோட பாச மழையில நனையறதுக்கு எனக்கு கொடுப்பினை இல்லைப்பா....

ரெண்டு வருஷத்துக்கு முந்திதான் ... வெளிநாட்டுலே எம்.பி.ஏ.



முடிச்சிட்டுத் திரும்பி வந்தேன். இனிமேலாவது உங்க கூட இந்த ஜமீன் மாளிகையில சேர்ந்து இருக்கலாம்னு நான் நெனச்சிட்டு வந்தேன். இன்னும் எத்தனை காலத்துக்கு நான் சென்னையில் தங்கியிருக்கிறதாம்?

புது சாப்ட்வேர் நிறுவனங்களை தேனி மாவட்டத்துல திறக்கணும். நிறைய சாதிக்கணும்னு நான் பிரியப்படறேன்.

நீங்க என்னடான்னா... மறுப்பு தெரிவிக்கிறீங்களேப்பா? எனக்கு ரொம்பவே ஏமாற்றமாவும், வருத்தமாவும் இருக்குப்பா"

முகில் இந்திரனின் குரலில் எத்திற்கும் வருத்தம் தொனித்தது.

"இரு என்னப்பா இது இப்படி பேசறே? பகவான் எங்களுக்கு புத்திசாலியான திறமைசாலியான புள்ளையைக் கொடுத்திருக்கான்னு ... அடிக்கடி சொல்லி நாங்க பூரிச்சுப் போறோம் தெரியுமா?

எல்லாம் தெரிஞ்சுமா நீ இந்த மாதிரி பேசறே?

தவமிருந்து பெத்த புள்ளையை விட்டுப் பிரிஞ்சு இருக்கிறது எவ்வளவு கொடுமையான விஷயம் தெரியுமா இரு?

எங்க மனசை நாங்க கல்லாக்கிட்டு தானே... உன்னை யாருக்கும் தெரியாம... தூர தேசத்துல சேர்த்து படிக்க வைச்சோம்.

வெண்ணிலாவை நாங்க பறி கொடுத்துட்டோம்.

உன்னையும் நாங்க பறி கொடுக்க தயாரா இல்ல...

எனக்கு பங்காளிங்க ஜாஸ்தி... எவனோ இந்த ஜமீன் சொத்துக்கு ஆசைப்பட்டு பத்து வருஷத்துக்கு அப்புறமா எங்களுக்கு பொறந்த வெண்ணிலாவை மர்மமான முறையில் சாகடிச்சிட்டான்.

சில பேரு மேல எனக்கு சந்தேகமா இருக்கு. ஆனா குறிப்பா... அந்தக் கொலையாளியை கண்டு பிடிக்க முடியலை.... அவனைக் கண்டு பிடிச்சு தண்டனை வாங்கிக் கொடுத்துட்டா... நாங்க நிம்மதியா மூச்சு விடுவோம்.

அதுக்கு அப்புறம் தாராளமா நீ எங்க கூடவே இருக்கலாம். அது

"நீ செஞ்ச குற்றத்துக்கு என்ன தண்டனை தெரியுமா?"

"அதை படிச்சிருந்தா நான் ஏன் இந்த தொழிலுக்கு வரப்போறேன்..!"

- ராஜிராதா, பெங்களூர்



வரைக்கும் நீ கொஞ்சம் பொறுமையா இருந்து தான் ஆகணும். உனக்கு ஆபத்து காத்திருக்குப்பா...

தேனி மாவட்டத்துல புதிய கனிவள நிறுவனங்களை நீ தாராளமா தொடங்கலாம். தேனி, கம்பம், குமுளி, கம்பம் மெட்டு, தேவாரம், கூடலூர், வருசநாடு, கருவி போன்ற இடங்கள்லே... நம்ம ஜமீனுக்குச் சொந்தமான எஸ்டேட் பங்களாக்கள் இருக்கு.

ஏதாவது ஒரு பங்களாவுல நீ தங்கலாம். அடிக்கடி நீ இடத்தை மாத்திடணும். நீ எங்கே இருக்கேங்கறது எங்களைத் தவிர யாருக்கும் வெளிய தெரியக்கூடாது. சரியா கிரி?''

''உயிருக்கு பயந்துகிட்டு கோழை மாதிரி மறைஞ்சு இருக்கணுமா? இன்னமும் எத்தனை காலத்துக்கு நான் இப்படி இருக்கிறதாம்?

ஆறிலும் சாவு நூறிலும் சாவுப்பா... நடக்கிறது நடக்கட்டும். எது வந்தாலும் பேஸ் பண்ணிக்கலாம்...''

''ஐயோ கிரி! அப்படி மட்டும் சொல்லாதேப்பா...

இது கோழைத்தனம் கிடையாது. சமயோசிதமா பதுங்கி தற்காத்துக்கிடறது தான் புத்திசாலித்தனம்! கண்ணுக்குத் தெரிஞ்ச எதிரியா இருந்தா... நாம்ப தாராளமா நேருக்கு நேர் மோதிப் பார்த்துடலாம்.

ஆனா... கண்ணுக்குத் தெரியாத எதிரி நமக்கு இருக்கிறப்போ ஒவ்வொரு நிமிஷமும் நாம ஜாக்கிரதையா இருந்து தான் ஆகணும் கிரி.

தயவு செய்து பிடிவாதம் பிடிக்காதே ராஜா! நீ இங்கயே இருந்தா... உங்கம்மாவும் நானும் திகில்லே பயந்தே செத்துடுவோம்.

நீ எங்களை விட்டுப் பிரிஞ்சு இருக்கிறது... எங்களுக்கு ரொம்பப் பெரிய வேதனை தான்...

ஆனா நீ பாதுகாப்பா பத்திரமா இருக்கிறேங்கிற நிம்மதி எங்களுக்கு இருக்கு தெரியுமா?''

''ச...சரி! உங்க இஷ்டப்படியே நடந்துக்கிறேன். வயசான காலத்துல இருக்கிற பெத்தவங்களை... நான் கிட்டக்க இருந்து கவனிச்சுக்கணும்னு உள்ளூர துடிக்கிறேன் அப்பா!

அதுக்கு நான் குடுத்து வைக்காத பாவியா இருக்கேனே?

''சோலைமலை'' மாமா இந்த வீட்டோட தங்கி உங்களுக்கு ஆதரவா அனுசரணையா இருக்கிறாரு...

அதை நெனச்சா... கொஞ்சம் ஆறுதலா இருக்கு... நீங்க எதுக்கும் ஜாக்கிரதையா இருங்கப்பா... உங்களுக்கும் ஆபத்து வர வாய்ப்பிருக்கே?''

''ஹுகும்... நாங்க காய்ஞ்ச சருகுங்க கிரி!

எங்களைத் தீர்த்துக்கட்டறதிலே... அவங்களுக்கு என்ன லாபம்?

ஜமீன் சொத்துக்களுக்கு வாரிசு இல்லாம பண்ணிட்டா காக்கா, கழுகுங்க மாதிரி இங்க வந்து சொத்தை உரிமை கொண்டாடலாமே?



ங்கிற பேராசை தான் அவங்களுக்கு...


அதனால நீ தான் ஜாக்கிரதையா இருக்கணும். நேத்து நைட்டுல தான் நீ வந்தே... முழுசா ஒரு நாள் கூட இருக்க விடாம... இன்னிக்கே உன்னை இந்த பங்களாவை விட்டு அனுப்ப வேண்டியிருக்கு.

கொஞ்ச நாளா எனக்கு கெட்ட கனவா வந்துட்டு இருக்கு... உங்கம்மா கூட தனக்கு வலது கண் துடிச்சுட்டே இருக்குன்னு சொல்லிட்டு இருக்கா...''

''சரிப்பா ... நான் உடனே கிளம்பறேன். போதுமா? இன்னமும் எத்தனை காலத்துக்கு இந்த அவஸ்தைப் படணும்னு தெரியலையே?'' முனகியபடி வாடிய முகத்துடன் முகில் கிரிதரன் வளைந்து வளைந்து மேலேறிச் சென்ற படிக்கட்டுகளில், தட தடவென்று கோபமாய் விரைந்தேறினான்.

ராஜ மார்த்தாண்டமும், ரத்தினமும் வைத்த கண் வாங்காமல் ... மகன் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

விதியும் வைத்த கண் வாங்காமல் முகில் கிரிதரனையே வெறித்துக் கொண்டிருந்தது. அவனை, எமலோகத்திற்கு அனுப்பி வைக்க ... தக்க தருணத்தை எதிர் பார்த்துக் கொண்டு இருந்தது.




**வா**னம் லேசாய் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தது. மந்த மாருதம் குளிராய் வீசி .. சிலிரென்று மெல்லத் தழுவியதில் தேகம் சிலிர்த்தாள் சங்கமித்திரை.

அப்பா சக்கரவர்த்தியின் வார்த்தையை அவள் என்றுமே மீறியதில்லை. தினமும் வெண்ணெய் உருண்டைப் பாறைக்கு அருகிலிருந்த ஆஞ்சநேயர் சன்னதிக்குச் சென்று நெய் விளக்கேற்றி வந்தாள்.

திடு திப்பென்று சாரலடிக்கத் தொடங்கி விட்டதோ வீட்டிற்குச் சென்றால் ...அம்மா கடிந்து கொள்வாளே?

இப்படி மழையில் நனைஞ்சுட்டு வந்திருக்கியே? உடம்பு என்னத்துக்கு ஆகும்? ஒன்னு குடையை எடுத்துட்டுப் போயிருக்கணும் இல்லன்னா... மழை பொழிகிற வரை எங்கே யாச்சும் ஒதுங்கி நனையாம நின்னுட்டு வந்துருக்கணும்.

உனக்கு அடர்த்தியான கூந்தல் வேற ... தலையில நீர் கோர்த்துக்கிட்டா... எவ்வளவு அவஸ்தைப் படணும் தெரியுமா? படிப்பை முடிச்சு என்ஜினீயராயிட்டே ... கூடிய சீக்கிரம் நல்ல வேலையில சேரப் போறே...

ஆனா இன்னமும் பச்சைக் குழந்தையாட்டம் மழையில் நனையறதுக்கு நீ ரொம்பவும் ஆசைப்படறியே? இது உனக்கே

நல்லாயிருக்கா மித்ரா? தனது முந்தானையால் மகளின் தலையைத் துவட்டியபடியே அம்மா தங்கம் புலம்பத் தொடங்கி விடுவாள் என்ற பயத்தில்... பன்னீர் புஷ்ப மரத்தின் அடியில் ஒதுங்கி நின்றாள் சங்கமித்திரை.

பன்னீர் புஷ்பங்கள் ஏராளமாய் உதிர்ந்து மண்ணில் அழகிய பூப் படுக்கையை உண்டு பண்ணியிருந்தன.

பன்னீர் புஷ்பங்களின் நறுமணம் காற்றில் கலந்து கும்மென்று நாசியை நிறைத்து, மனதை மயக்கியது.

இயற்கையை அணு அணுவாய் ரசிப்பவள் அவள். மெல்ல அண்ணாந்து மரத்தைப் பார்த்தாள்.

மனதில் குதூகலம் குமிழியிட்டது. மெல்ல எம்பி கைக்கு சிக்கிய கிளையைப் பற்றி இலேசாய் அசைத்தாள்.

மறுகணமே ... இலைகளில் தேங்கியிருந்த மழைத்துளிகளும், பன்னீர் புஷ்பங்களும் ஏக காலத்தில் உதிர்ந்து அவளை அர்ச்சிக்க ஆரம்பித்தன.

அதே நேரத்தில் ...

தேவாரம் எஸ்டேட் பங்களாவை நோக்கி ஜீப்பில் விரைந்து வந்து கொண்டிருந்தான் முகில் கிரிதரன்.

அப்பா ராஜமார்த்தாண்டத்தின் உத்தரவின் படி... இந்த எஸ்டேட் பங்களாவில் சில மாதங்கள் தங்கும் உத்தேசத்துடனும், விரக்தியுடனும் ஜீப்பை ஓட்டிக் கொண்டு வந்தவனின் பார்வையில் சிக்கினாள் சங்க மித்திரை சற்று தூரத்திலேயே சட்டென்று ஜீப்பை நிறுத்தி இமை தொட்டாமல் பார்த்தான்.

மழைத்துளிகளுடன் சில்லென்று பன்னீர் புஷ்பங்கள் தன் மீது உதிர்ந்ததும்... சங்க மித்திரை, அதீத மகிழ்ச்சியில் சிறு குழந்தை போல் தன்னையே மறந்து 'களுக்' என்று சிரித்தாள்.

அவள் மெல்ல எம்பி, கிளையைப் பிடித்து இலேசாய் குலுக்கிய போதே.. முகில் கிரிதரன் அவளைப் பார்த்து விட்டிருந்தான்.

பச்சைப் பசேலென்று கண்களைக் கவர்ந்த தேயிலைத் தோட்டத்தை வேடிக்கை பார்த்தபடி ஜீப்பை ஓட்டி வந்தவனுக்கு அவளைக் கண்டதுமே தூக்கி வாரிப்போட்டது.

'அட... யாரிந்த தேவதை? இளம் மஞ்சள் வண்ணக் காட்டன் புடவை கட்டி... அடர்ந்த நீண்ட கூந்தலைத்தளரப் பின்னி.. காதோரம் ஒற்றை மஞ்சள் ரோஜாவை செருகி இருக்கிறாளே?

மழைக்காக மரத்தின் அடியில் வந்து ஒதுங்கி நிற்கிறாள் போலும்...

தன் மீது பூ மாரிப் பொழிந்ததும் களுக் என்று நகைக்கிறாளே? சிரிக்கும் போது இவளது அழகு பன்மடங்காகிறதே?

இந்த எஸ்டேட்டில்.. இப்படியொரு பேரழகி இருக்கிறாளே?

சென்னையிலும் சரி.. வெளிநாட்டிலும் சரி.. நானும் எத்தனையோ அழகிகளைப் பார்த்திருக்கிறேன்.

அவர்கள் எல்லோருமே ஒப்பனை அழகிகள் தானே? ஆனால்... ஒரு வனதேவதையைப் போன்று ஒப்பனை சிறிது மின்றி ஒப்பற்ற பேரழகியாய் மிளிர்கிறாளே?

யாரிவள்? பார்த்தால்...படித்த பெண்ணைப் போல் தோன்றுகிறது.

இது வரை என் மனம் தெளிந்த நீரோடையாகத் தானே இருந்தது? இது வரை... எந்தப் பெண்ணையும் நான் ஏறெடுத்துப் பார்த்ததில்லையே? பார்க்கவும் விரும்பியதில்லையே?

என்னை ஒத்த இளைஞர்கள்.. அதுவும் என்னைப் போல் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர்கள்...' நதி கெட்டுப் போய் தடம் புரள்வதை' நான் கண் கூடாகவே பார்த்திருக்கிறேன்.

எத்தனையோ முறை அவர்கள் என்னை வற்புறுத்தியும்... நான் அந்த சேற்றில் அமிழ்ந்து போக விரும்பாமல்... மறுப்பு தெரிவித்திருக்கிறேன்.?

சதா ஜமீனைப் பற்றி.. அம்மா, அப்பாவைப்பற்றி... குடும்பத்தை விட்டுப் பிரிந்து வாழும் அவல நிலையைப் பற்றியே கவலைப்பட்டு.. என் மனம் எந்த சந்தோஷத்திலும் ஒட்டாமல் தானே இருந்தது? ஆனால் இன்று...

ஜீப்பை நிறுத்திவிட்டு... இவளையே கண் கொட்டாமல் பார்த்த வண்ணம் இருக்கிறேனே?

என்ன ஆயிற்று எனக்கு? தனக்குள் மெல்ல முணுமுணுத்தவன் சட்டென்று செல் காமிராவினால்... தான் ரசித்த காட்சியைப் படமாகப் பதிவு செய்தான்.

அதே சமயத்தில்... சங்கமித்திரை, விநோதமான ஒரு ஒலியைக் கேட்டு சுற்றும்முற்றும் பார்வையால் துழாவினாள்.

''ஏன் இவ்வளவு டென்ஷனா இருக்கீங்க?''

''நான் செஞ்சுக்கப் போற முதல் ஆபரேஷன். அதான்!''

''எனக்கு தான் இது முதல் ஆபரேஷன், நான் என்ன டென்ஷனாவா இருக்கேன், பாருங்க!''

-ஆர்.பிருந்தா, பெங்களூர்.



வலது கரத்திலிருந்த அர்ச்சனைக் கூடையைக் கீழே வைத்து விட்டு.. மரத்திற்குப் பக்கத்திலிருந்த புதரின் அருகே மெல்ல நடந்தாள்.

''ம்மே.. ம்மே... மே'' தீனமாக குரல் வந்த திக்கில் பார்வையை ஓட்டி குனிந்து பார்த்தாள்.

குட்டி வரையாடு ஒன்று வெடவெடவென்று நடுங்கியபடி ஒண்டிக்கொண்டிருந்ததைக் கண்டதும்... சங்கமித்திரையின் முகம் பூவாய் மலர்ந்தது.

''அட... வரையாட்டுக் குட்டி! இது எப்படி இங்க வந்துச்சு? வரையாடுகள் மந்தையா தானே மேயப் போகும்? இந்தக் குட்டி மட்டும் எப்படியோ வழி தவறி, தப்பி வந்துடுச்சு போலிருக்கே?

ஐயோ பாவம்! பயத்துல மிரண்டு மழையில நனைஞ்சு நடுங்குதே?

தாயை விட்டுப் பிரிஞ்ச தவிப்பு முகத்துல அப்பட்டமா தெரியுதே? இதை எப்படியாவது இதோட இனத்துல சேர்த்துடணுமே?''

தனக்குள் பேசியபடி குனிந்து அந்த வரையாட்டுக் குட்டியைத் தூக்கி தன் மார்போடு இறுக அணைத்து... புசுபுசுவென்றிருந்த அதன் தேகத்தை மெல்லத் தடவிக் கொடுத்தாள்.

அப்போது தான் அந்த வரையாட்டுக் குட்டியின் முன்னங்காலை கவனித்தாள்.

''அட.... கால்லே பலமா அடிபட்டிருக்கே? மலைச்சரிவுலே இலை தழையை மேயப் போனப்போ.. உருண்டு விழுந்து அடிபட்டிருக்குமோ?

கால்லே அடிபட்டு நடக்க முடியாம போனதால தான்... மந்தையை விட்டுப் பிரிஞ்சுடுச்சு போலிருக்கு...''

தன்னை வாரித்தூக்கி காலில் பட்ட காயத்தை கரிசனத்தோடு தடவி கவனித்த சங்கமித்திரையை நன்றி ததும்பப் பார்த்தது வரையாட்டுக் குட்டி.

உரிமையாய் பாதுகாப்பான உணர்வோடு அவள் மீது தலையை சாய்த்துக் கொண்ட குட்டியை மிருதுவாய் தடவி விட்டாள்.

வீட்டுக்குப் போய் இந்த காயத்துக்கு மருந்து போட்டு விட்டு எப்படியாவது இதை மந்தையோடு சேர்த்து விட்டு விடணும் மனதில் தீர்மானித்தபடி மெல்ல நடந்து... மரத்தடியில் வைத்துச் சென்ற அர்ச்சனைக் கூடையை எடுத்துக் கொண்டு... துரிதமாய் நடக்கலானாள்.

செல் காமிராவினால் அவளை சிறைப் பிடித்துக் கொண்டிருந்த முகில் கிரிதரன் வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டிருந்தான்.

'என்னது இது ரொம்ப ஆச்சரியமாயிருக்கே? இந்தக் காலத்து இளம் பெண்கள், பளிச்சுனு டிரஸ் பண்ணிக்கிட்டா... பெத்தக் குழந்தையைக் கூட வாரித் தூக்கினா.. டிரஸ் கசங்கிடுமோன்னு... தயங்குவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கோம்..



இவ என்னடான்னா.. புதருக்குள்ளே ஒண்டி இருந்த வரையாட்டுக் குட்டியை.. அதுவும் காயம்பட்ட குட்டியை ரொம்பப் பரிவோடு வாரி மார்போடு அணைச்சுக்கிட்டாளே''

தனக்குள் பேசியவன்... ஜீப்பிற்கு மிக அருகில் சங்கமித்திரை வருவதைக் கண்டதும் சட்டென்று செல் கேமிராவை அணைத்தான்




டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்தவன்... தலையை மட்டும் வெளியே நீட்டி ''எக்ஸ்க்யூஸ் மீ...'' என்றதும்.. அவள் திகைத்துப் போய் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''நான் இந்த எஸ்டேட்டுக்குப் புதுசா வந்திருக்கேன். கண்டமனூர் ஜமீன்தார் ராஜமார்த்தாண்டத்துக்கு சொந்தமான பங்களா இங்க இருக்கு. அந்த பங்களாவுக்குப் போறதுக்கான வழியைச் சொல்ல முடியுமா பிளீஸ்...?'' வேண்டுமென்றே பேச்சு கொடுத்தான் முகில் கிரிதரன்.

''ஓ... நேரா கொஞ்ச தூரம் போனா... இடது பக்கமா ஒரு செம்மண் பாதை வரும். அந்தப் பாதை நேரா மேட்டுப் பகுதியில இருக்கிற வெள்ளை நிற பங்களாவுக்குத்தான் போகும்.

நீங்க தேடி வந்த பங்களா அதுதான்'' ஆட்டுக்குட்டியைப் பரிவுடன் தடவியபடி பேசினாள் சங்கமித்திரை.

''ரொம்ப தேங்க்ஸ்ங்க.. அட.... இந்த வரையாட்டுக்குட்டி ரொம்பவே அழகா இருக்கே.. எனக்கு இந்த மாதிரி செல்லப் பிராணிகளைக் கண்டா.. ரொம்பவே பிடிக்கும்.

இந்த மாதிரி வரையாடுகள் குளிர்ச்சியான பிரதேசத்துல தான் வளரும்னு நான் கேள்விப்பட்டிருக்கேன். இன்னிக்குத்தான் முதல் முறையா நேர்லே பார்க்கிறேன்.

அட.... என்னாச்சு? இதோட கால்லே காயம் பட்டிருக்கே? இப்பு
டோன்ட் மைண்ட்... என் கிட்டே பர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் இருக்கு.
காயத்துக்கு நான் மருந்து போட்டு விடலாமா? பார்க்கவே
ரொம்ப பாவமா இருக்கு.. அதான்''
அவனை ஒரு கணம் வியப்புடன் ஏறிட்ட சங்கமித்திரை
''தாராளமா.. மருந்து போட்டு விடுங்க சார்! வீட்டுக்குப் போய் காயத்
துக்கு மருந்து போடணும்னு தான்... நான் வேகமா வந்தேன்.
இந்த வரையாட்டுக் குட்டியை நான் வளர்க்கலை. அதோ அந்தப்
புதருக்குள்ளே கிடந்துச்சு. தூக்கிட்டு வந்தேன்.
கால்லே அடிப்பட்டதால முடங்கிக் கிடக்கு போலிருக்கு மந்
தையை விட்டுப் பிரிஞ்சுடுச்சு. எப்படியாவது அதோட மந்தையில்

இந்தக் குட்டியை சேர்த்து விட்டுடணும்''

அவள் பேசுவதை செவி மடுத்தபடியே ஜீப்பை விட்டு இறங்கி ஆயின்மெண்ட்டை எடுத்து சிரத்தையாய் காயம்பட்ட இடத்தில் தடவினான் முகில் கிரிதரன்.

''உங்க மனித நேயத்தையும் இரக்க சுபாவத்தையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். தேங்க் யூ சார்'' என்று முகம் மலரக் கூறி விட்டு நகரப் போனாள்.

''உங்க பாராட்டுக்கு நன்றி! 'மனித நேயம்னு' சொன்னீங்களே? அது சரியில்லைங்க'' மந்தகாசமாய் முறுவலித்தான் முகில் கிரிதரன்.

நெற்றி மெல்ல சுருங்க... விழிகளில் குழப்பம் மிதக்க... தயக்கத்துடன் அவனை ஏறிட்டாள்.

''மனிதநேயம்னு சொன்னதிலே... என்ன தப்பு இருக்கு சார்? எனக்கு புரியலையே?''

''மனிதநேயம்னு சொல்றதை விட.... 'மிருக நேயம்' இல்லேன்னா 'பிராணி நேயம்னு சொல்லியிருந்தா... சரியா இருக்கும்கிறது என்னோட கருத்து! கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க... நான் சொல்றது சரின்னு உங்களுக்கே தோணும்''

நமட்டுச் சிரிப்புடன் அவன் பேசியதைக் கண்டதும்.. குபீரென்று சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது.

கீழுதட்டை அழுந்தக் கடித்து சிரிப்பை சிரமப்பட்டு அடக்கினாள்.

'யாரிவர்? பல காலம் இவருடன் நெருங்கிப் பழகியதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறதே? இவர் பேசுவதைக் கேட்டால்.. சிரிப்பு பீறிடுகிறதே?

ஒரு அந்நிய இளைஞனுடன் சிரித்துப் பேசுவது... முறை அல்லவே?, உள்ளூர பட்சி எச்சரித்ததும்.. மறுகணமே அவள் தன் முகத்தில் ஒரு இறுக்கத்தை வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டாள்.

''சாரி சார்! எனக்கு அப்படி எதுவும் தோணலை. நன்றி'' என்றபடி நடக்க முனைந்தாள்.

''ஒன் மினிட் பிளீஸ்.. இந்தக் காலத்துல இப்படியொரு பெண்ணைப் பார்க்கிறது... ரொம்ப ரொம்ப அபூர்வம்! என்ன அப்படி பார்க்கிறீங்க? நான் உண்மையைத்தான் சொல்றேன்.

ரோட்டுல யாராவது அடிபட்டுக் கிடந்தா.. கிட்டக்கப்போய் உதவினா நமக்கு ஏதாச்சும் பிரச்சனை வந்துடுமோன்னு பயந்துட்டு கண்டும் காணாதது மாதிரி விலகிப் போயிடறாங்க.

ஆனா நீங்க.. ஒரு காயம்பட்ட வரையாட்டுக் குட்டியை.. ஒரு குழந்தை மாதிரி சுமந்துட்டுப் போறீங்க... வாயில்லா ஜீவன் மேலேயே இவ்வளவு இரக்கம் காட்டறீங்களே? உங்க கருணை உள்ளத்தையும், மனித நேயத்தையும் இரக்க சுபாவத்தையும் பார்த்து ரொம்பவே நான் பிரமிச்சுப் போயிட்டேன். ஐ அப்ரிஷியேட் யூ



உங்களை மகளா அடைஞ்சதுக்கு.. உங்க பேரண்ட்ஸ் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும். அதே மாதிரி உங்களை மனைவியா அடையறதுக்கு... யாருக்கு குடுத்து வச்சிருக்கோ.. தெரியலையே? ரியலிஹீ இஸ் வெரி லக்கின்னு தான் நான் சொல்வேன்..''

முகில் கிரிதரன் வெளிப்படையாய் இப்படிப் பாராட்டுவான் என்று சங்கமித்திரை சற்றும் எதிர்பார்க்கவேஇல்லை. அவளது முகம் குங்குமப் பூவாய் சட்டென்று சிவந்து போனது.

வரையாட்டுக் குட்டியின் தலையை மெல்லப் பரிவுடன் தடவிக் கொடுத்தவள்... தயக்கத்துடன் அவனை ஏறிட்டாள்.

''ந.. நன்றி சார்! நீங்க மட்டும் 'மனிதநேயம்னு சொல்லலாமா?''

''அதானே சாரி! பிராணிநேயம்... 'மிருக நேயம்னு' தான் சொல்லணும். அது தான் சரியான பதம்னு நான் நெனைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க?''

அவளையும் மீறி 'களுக்' என்று சிரித்து விட்டாள் சங்கமித்திரை.

மறுகணமே நிலை மிதித்து விட்டாற்போல் பதறி வேகமாய் நடக்க முயன்றாள்.

''ஹலோ... பார்த்தா படிச்ச பெண் மாதிரி இருக்கீங்க... ஒரு ஆண்கிட்டே சிரிச்சுப் பேசினா.. அதிலென்ன தவறு இருக்கு''...

ஏதோ செய்யக்கூடாத தப்பை செஞ்சுட்ட மாதிரி பதறிப் போய் ஓடறீங்களே? எனக்கு அப்படியே முகத்துல அறைபட்டாப்பல இருக்குங்க... என்னைப் பார்த்தா... அவனோ கெட்டவன் மாதிரியா இருக்கு.?''

அவனது கேள்வி.. அவளை தர்மசங்கடப் படுத்தியது.

''அ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. நான் படிச்சிருந்தாலும்... இந்த மலைக் கிராமத்துல பிறந்து வளர்ந்தவள் தான்.

ஒரு நல்ல கட்டுப்பாடான குடும்பத்தைச் சேர்த்த பொண்ணு நான்... என்னைப்போல இருக்கிற பெண்கள்... இப்படித்தான் நடந்

''ராமசாமியை கொலை செய்யத்தூண்டியது எது?''

''அவர் கையில் இருந்த கத்தை கத்தையான பணம் தான்..!''

-ராஜிராதா, பெங்களூர்.



துப்பாங்க..''

''ஓ... புரியுது! அந்நிய வாலிபர்கள் கிட்ட பேசுவதே தவறுன்னு... மனசுல அழுத்தமா ஒரு எண்ணம் விதைக்கப்பட்டிருக்கு, இல்லையா?''

''ஆ.. ஆமா! சாரி சார்! மழை வேற வலுத்துடும் போலிருக்கு, நான் போகணும்.''

''உண்மையை வெளிப்படையா ஒத்துக்கிட்டீங்களே? குட்! அதிலும் என்னை மாதிரி கொஞ்சம் டிப்டாப்பா... ஜமீன் பணக்கார தோரணையில இருக்கிற இளைஞர்கள் பக்கமே... தலை வச்சுப்படுக்கப் படாதுன்னு... ஒரு தீர்மானத்தோட இருப்பீங்களோ?''

''ஏ... என்னது இது வம்பாய் போச்சு! இப்படி பேச்சை வளர்த்துட்டே போனா... என்ன அர்த்தம் சார்? பாதையை மறைக்காதீங்க.. வழி விடுங்க... நான் போகணும்''

''ஒரே ஒரு நிமிஷம்.. ப்ளீஸ்! ' கண்டமனூர் ஜமீன் தாருக்குச் சொந்தமான மாளிகைக்குப் போக வழி கேட்கிறாளோ? இவன் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவன் போலிருக்குன்னு... நீங்க பயப்படாதீங்க.

ஒரு உண்மையைச் சொல்லிடறேன். என் பேர் முகில் எனக்குன்னு யாருமே இல்ல... கண்டமனூர் ஜமீன்தாரர் ராஜமார்த்தாண்டம் ஐயாவோட தயவுலே படிச்சு வளர்ந்தேன். அந்த நன்றிக்கடனை நான் தீர்க்கணும் இல்லையா? வெளியில வேலைக்குப் போகப் பிடிக்கலை.

ஐயா கிட்டேயே வேலைக்கு சேர்ந்துட்டேன். அவருக்கு தேனி மாவட்டத்தைச் சுத்திலும் நிறைய எஸ்டேட்டுகள், நில புலன்கள், கம்பெனிகள் இருக்கு. அந்தந்த பகுதிகள்லே இருக்கிற மானேஜர்ஸ் சூப்பர் வைசர்ஸ் எல்லாருமே சரிவர வேலை பார்க்கிறாங்களா?ன்னு.. கவனிக்கிற பொறுப்பை.. ஐயா என் கிட்டே கொடுத்திருக்காங்க.. அதனால... நான் ஒரு சாதாரண நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன் தான்... பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவனில்லை. நீங்க பயப்படவும் தேவையில்லை...''

அவள் மீண்டும் திகைத்துப்போய் விழிகள் விரிய அவனை ஏறிட்டாள். அவன் சொன்னதைக் கேட்டதும்... உள்ளூர சிறு நிம்மதி துளிர்த்தது நிஜம்.

''இ...தெல்லாம் எதுக்காக என்கிட்ட சொல்லிட்டிருக்கீங்க..? இ... இதெல்லாம் தேவையில்லாத விஷயம்!

நான் நீங்க நினைக்கிறாப்பல. எதுக்காகவும் பயப்படலை...'' மெல்ல முணுமுணுத்தாள்.

சங்கமித்திரை ஒப்புக்குத்தான் இவ்வாறு முணுமுணுத்தாள் அவளது அடிமனதில் அப்படியொரு எண்ணம் எழும்பியதை... அவளது பளிங்கு போன்ற முகமே.. அப்பட்டமாய் காட்டிக் கொடுத்தது.



''அப்படியா? ஓகே.. இப்போ இதெல்லாம் தேவைப்படாம இருக்கலாம்..ஆனா நீங்க தனிமையில இருக்கும்போது.. இந்த விவரங்கள் உங்களுக்கு நிச்சயமா ஆறுதல் அளிக்கும்.

ஓகே... மீண்டும் சந்திக்கலாம். பை ஸீ யூ அடுத்த சந்திப்புலே கண்டிப்பா நீங்களாவே உங்களைப் பத்தின விவரங்களை.. என் கிட்டே சொல்லிடுங்க... பார்த்துக்கிட்டே இருங்க... நான் சொன்னது பலிக்கும். இது பூர்வ ஜென்ம பந்தம்னு என் மனசுக்குப் படறதால தான் இவ்வளோ உறுதியா சொல்றேன். வரட்டுமா?''

சிரித்த முகத்துடன் அவன் ஜீப்பில் ஏறி அமர... சங்கமித்திரை பார்வையைத் தழைத்தபடியே விடு விடுவென்று நடந்தாள்.

ஜீப்பிலிருந்து தலையை நீட்டி... தன் கண்பார்வையிலிருந்து அவளது உருவம் மறையும் வரை அவள் சென்ற திக்கையே வெறித்துக் கொண்டிருந்து விட்டு.. அரை மனதுடன் ஜீப்பை விருட்டென்று கிளப்பினான்.

'இன்று தான் இந்த தேவதையை சந்தித்திருக்கிறேன். இவளை சந்தித்த பின்பு... இந்த உலகமே எனக்கு துச்சமாகப் படுகின்றதே? வேண்டாம்... எனக்கு எதுவுமே வேண்டாம்.. வாழ்க்கையில் எனக்கு இவள் கிடைத்தால் போதும்..

சகலத்தையும் உதறிவிட்டு.. இவளது மென்கரத்தைப் பற்றிக் கொண்டு.. கண்காணாமல் எங்காவது ஆள் அரவமற்ற தீவுக்குச் சென்று வாழ்வதற்குக் கூட... என் மனம் தயாராகி விட்டதே?

கதைகளிலும் காவியங்களிலும் 'கண்டவுடன் காதலைப் பற்றி நான் படித்திருக்கிறேன்.

அதெல்லாம் நடைமுறைக்கு சற்றும் சாத்தியமில்லை என்று இது வரை எண்ணியிருந்தேனே?

அது எவ்வளது பெரிய முட்டாள் தனம்?

இந்த தேவதை யார் என்றும் தெரியவில்லை. இவளது குடும்பப் பின்னணி பற்றி எள்ளளவும் தெரியாது. ஏன்... சொல்லப் போனால் இவளது பெயர் கூட எனக்குத் தெரியாதே?

அப்படி இருந்தும் என் உள்ளத்தை அவளிடம் நான் பறி கொடுத்து விட்டேனே? இயற்கையை அணு அணுவாய் அவள் ரசித்த விதம்... அவளது மனித நேயம், இரக்க சுபாவம், கருணை, பரிவு, பண்பு... பேரழகியாய் இருந்தும் துளி கூட கர்வம் தலைகாட்டாமல் தன்னடக்கமாய் நடந்து கொண்ட விதம்... எல்லாமாகச் சேர்ந்து என்னை அவளுக்கு அடிமையாக்கி விட்டதே? இவள் எனக்கு வேண்டும். இவளுக்காக நான் எதையும் துறக்கத்தயார்!

கடவுளே! எனக்காக நான் எதையும் உன்னிடம் வேண்டியதே இல்லை. நிம்மதியைத் தவிர... இது வேண்டும், அது வேண்டும் என்று கோரிக்கையை உன் பாதத்தில் நான் வைத்ததே இல்லை.

இறைவா! முதல் முறையா உன்னருளை இறைஞ்சுகின்றேன்.

எனக்கு இந்த தேவதையின் அன்பு கிட்ட வேண்டும். இவளது உள்ளத்தில் நிரந்தரமாக இடம்பெறும் பாக்கியத்தைத் தந்தருள வேண்டும். மானசீகமாக கடவுளிடம் வேண்டிக் கொண்டான் முகில் இரிதரன்.

கோட்டுப் பகுதியிலிருந்த வெள்ளை நிற மாளிகையை வந்தடைந்ததும்... ஜீப் தன் மூச்சை நிறுத்திக் கொண்டது.

ஜீப்பிலிருந்துகுதித்து தனது செல்லை எடுத்து உயிர்ப்பித்து,

''ஹலோ நியாசு! நான் எஸ்டேட் பங்களாவுக்கு வந்து சேர்ந்துட்டேன். உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும். மத்த வேலைகளை எல்லாம் அப்புறமா பார்த்துக்கலாம். நீ சீக்கிரமா புறப்பட்டு வா... சரியா?'' உத்தரவிட்டு விட்டு.. அந்த பிரமாண்டமான வெள்ளை நிற பங்களாவுக்குள்... மெல்ல சீட்டியடித்தபடியே சென்றான் முகில் இரிதரன்.

அவனைக் குரூரமாய் பார்த்தபடியே.. விதியும் பின் தொடர்ந்தது.




பொன் அந்தி மாலைப்பொழுது!

ஜன்னல் வழியாக தூரத்தில் தெரிந்த மலைத் தொடர்களில் பார்வையைப் பதித்திருந்தான் முகில் இரிதரன்.

பனி அதிகமாக இருந்ததில் மரம் செடி, கொடி தூரத்து மலைத்தொடர்கள் எல்லாம்.. யாரோ வேலை மெனக்கெட்டு பாலிதீன் பைகளில் போட்டுக்கட்டின மாதிரி வெள்ளைப் போர்வைக்குள் மங்கலாகத் தெரிந்தன. ''இரி! என்னால நம்பவே முடியலை தெரியுமா? அநாவசியத்துக்கு நீ பொய் சொல்லவே மாட்டியே?

அந்தப் பொண்ணை இன்னிக்குத்தான் முதல் முறையா பார்த்திருக்கே உன் மனசை அவகிட்ட நீ பறி கொடுத்ததுக்கான காரணத்தையும் சொன்னே..

சரி தான்! ஆனா ஒரே ஒரு விஷயம் தான் எனக்கு நெருடலா இருக்கு.

நீ என்னத்துக்கு உன்னைப் பத்தின விவரத்தை மறைக்கணும்? 'முகில்' அப்படின்னு உன்னோட பாதிப் பேரை மட்டும் தான் சொல்லியிருக்கே.. உனக்கு யாருமே இல்லைன்னும்.. கண்டமனூர் ஜமீன்தார் தயவாலே படிச்சு வளர்ந்ததாகவும்.. அந்த நன்றிக் கடனை மறக்காம ஜமீன்தார் கிட்டேயே வேலைக்கு சேர்ந்ததாகவும் சொல்லியிருக்கே...

உண்மையிலே.. ராஜமார்த்தாண்டம் ஐயா என்னைப் படிக்க வைச்சாரு... அந்த நன்றிக் கடனுக்காக ஐயா குடுத்த பொறுப்பை ஏத்து



செய்துகிட்டு வர்றேன்.

நான் பார்த்துட்டு வர்ற வேலையை... நீ பண்ணிட்டிருக்கிறதா அந்தப் பொண்ணு கிட்டே ஏன் சொல்லணும்.

ஆத்மார்த்தமா அந்தப் பொண்ணை நீ நேசிக்கிறியா? இல்ல... ஊரு உலகத்துல பணக்கார வீட்டுப் பசங்க பண்ற மாதிரி.. அந்தப் பொண்ணை நீ வேற மாதிரி..'' தயங்கி நிறுத்தினான் நியாசு.

அது வரை ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த முகில் இரிதரன் சரேலென்று திரும்பினான். ''என்ன நியாசு இது? என்னை தப்பா எடை போட்டுட்டியே? நீ எப்படி இப்படியொரு கேள்வியைக் கேட்கலாம்?

சென்னையிலேர்ந்து.. இல்லேன்னா வெளிநாட்டிலிருந்து நான் புறப்பட்டு இங்கே வர்றப்போ எல்லாம்... நீ தான் எனக்கு கம்பெனி கொடுப்பே... என்னோட ஒண்ணு விட்ட மாமா சோலைமலையோட பையன் நீ! உறவுக்காரனா மட்டுமல்ல நெருங்கின நண்பனாவும் பழகிட்டு வர்றவன் நீ...

சோலைமலை மாமா எங்க குடும்பத்துக்காவே தன்னை அர்ப்பணிச்சுக்கிட்டவரு.. உங்கப்பாவைப் போலவே நீயும் ரொம்ப விசுவாசமானவன்.

எங்கப்பாவோட உத்தரவுப்படி.. என்னை நிழல் போல தொடர்ந்து வர்றவன் நீ... அடிக்கடி நான் இடத்தை மாத்தி வெவ்வேறு எஸ்டேட் பங்களாவுக்குப் போகும் போதெல்லாம்... நீயும் கூடவே வந்து எனக்கு கம்பெனி குடுத்துட்டு வர்றே...

என்னைப் பத்தி உனக்குத் தெரியாதா? நான் இதுவரை எந்தப் பெண்ணையாவது தப்பான கண்ணோட்டத்துல பார்த்திருக்கேனா?

நான் அந்தப் பொண்ணை மனப்பூர்வமா நேசிக்கிறேன். அவளையே கைப்பிடிச்சு காலமெல்லாம் சேர்ந்து வாழணும்னு ஆசைப்படறேன். இது சத்தியம்!''

''உனக்கு என்னப்பா உடம்புக்கு?''

''இப்பக் கொஞ்ச நாளாவே சரியா தூக்கம் வரமாட்டேங்குது டாக்டர்!''

''ஏன் இப்ப ஆபீஸுக்கு லீவ் போட்டிருக்கீங்களா?''

''...?...?...?''

-ஆர்.பிருந்தா, பெங்களூர்



''அவளைப் பார்த்தா... சுமாரான குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணா தெரிஞ்சது..''

''பணக்கார வீட்டுப் பையன்னு தெரிஞ்சா.. என்னை நிராகரிச்சு டுவாளோ'ன்னு ஒரு பயம்! அதான் பொய் சொன்னேன்.

ஒரு நல்ல காரியம் நடக்கணும்னா.. பொய் சொல்றதிலே தப்பு இல்லைன்னு.. பெரியவங்க சொல்வாங்க.. இல்லையா?

அந்த பொண்ணு கிட்டே நெருங்கிப் பழகணும்.. அவ மனசுல நான் இடம் பிடிக்கணும்.

அதுக்கு நீ எதாச்சும் ஐடியா குடுப்பேங்கிற நம்பிக்கையில தான்... முதல் முதலா இந்த விஷயத்தை உன் கிட்டே சொன்னேன். உன்னை என்னோட ஆத்ம நண்பனா மதிக்கிறேன். நீ என்னடான்னா... என்னை இந்த மாதிரி எடை போட்டுட்டியே தியாகு? மனசுக்கு ரொம்பவே கஷ்டமா இருக்குப்பா''

''சாரி! சாரி! நீ திடீர்னு பொய் சொன்னதை வச்சு நான் என்னமோ'ன்னு பயந்து தான்.. அப்படி கேட்டுட்டேன்.

சாரி கிரி! உன்னோட பேரண்ட்ஸ் கிட்டே கூட சொல்லாத விஷயத்தை என்கிட்ட மனசு விட்டுப் பேசியிருக்கே ஆத்ம நண்பனா என்னை நீ மதிக்கிறதுக்கு.. நான் ரொம்பவே குடுத்து வச்சிருக்கணும். ரொம்ப சந்தோஷம் கிரி!

சரி.. விஷயத்துக்கு வருவோம். அந்தப் பொண்ணை உன்னோட செல் கேமிராவில் படம் பிடிச்சேன்னு சொன்னியே?

அதை என் கிட்ட குடு.. இங்க நம்ம எஸ்டேட்டுலே வேலை பார்க்கிற கந்தன் கிட்டே காட்டி விசாரிச்சுட்டு வர்றேன்.

இன்னும் கால்மணி நேரத்துல அந்தப்பெண்ணைப் பத்தின அத்தனை விவரங்களும் உனக்கு அத்துபடி ஆயிரும் சரியா?''

''குட்! இதை.. இதை... இதைத்தான் உன்கிட்ட நான் எதிர்பார்த்தேன்'' சிரித்தான் முகில்கிரிதரன்.

சொன்னபடியே புள்ளி விவரங்களைத் திரட்டிக் கொண்டு வந்து விட்டான் தியாகு.

அனைத்து விவரங்களையும் உன்னிப்பாக கேட்ட பின்பு உற்று நோக்கினான். முகில்!

'இவளது மனதில் எப்படி இடம் பிடிப்பது?' தீவிரமாக மூளையைக் கசக்கினான்.

அதிர்ஷ்டக் காற்று அவன் பக்கம் வீசியது.

மறுநாளே... அப்படியொரு எதிர்பாராத சூழ்நிலை உருவாகும் என்று அவன் கனவிலும் கருதவில்லை.

தூக்கம் வந்தால் தானே.. கனவு வரும்?

அன்றிரவு முழுவதும் முகில் கிரிதரன் ஒரு கணம் கூட தூங்கவில்லை.

மனக் கண்ணில் அந்த அழகு தேவதை வந்துவந்துபோனாள்.



செவிகளில் அவளது தேன் போன்ற இனிய குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது.

'தேன்' என்று ஒரு வார்த்தையில் முடித்து விட முடியாதே? குழல், யாழ், போன்றவற்றை மீட்டினால் கூட இவ்வளவு இனிய ஓசை வராது போலிருக்கிறதே?

குயிலைப் பழித்த குரலல்லவா அது? காற்றில் தேனையும் மதுரத்தையும் கலக்கும் குரல் ஆயிற்றே?

சதா செல் போனைக் குடைந்து செல் கேமிராவில் பதித்து வைத்திருந்த காட்சியைத் திரும்பத் திரும்பப் பார்த்து ரசித்தான்.

'சங்கமித்திரை!.. தியாகு விசாரித்து வந்து சொன்ன பெயர்

'சங்கமித்திரை... ஆஹா! என் தேவதையின் பெயர் சங்கமித்திரையா?

அவளைப் போலவே.. அவளது பெயரும் அழகாகவே இருக்கிறது. அவளை எப்படி சுருக்கமாக அழைப்பது? சங்கு என்று அழைத்தால் நன்றாக இருக்குமா?

சங்கு என்றதும் அவளது சங்குக் கழுத்துதான் ஞாபகத்திற்கு வருகிறது.

அழகான கழுத்தில் கறுப்பு பாசிமணி அணிந்திருந்தாளே? அது அவளது கழுத்திற்குத் தான் எத்தனை எடுப்பாக இருந்தது?

'சங்கு' வேண்டாம்... 'மித்திரா' என்று அழைத்தால் எப்படியிருக்கும்?


மித்ரா.. மித்ரா...மித்ரா - முகில் ஆஹா பெயர் பொருத்தம் பிரமாதமாய் இருக்கிறதே? மித்ரா என்று தான் அழைக்க வேண்டும்.

மித்ரா... நீ எனக்காவே பிறந்தவள்..

இதயத்தில் புகுந்த காதல் ஓசையின்றி சதா வீணை மீட்டியபடியே இருந்ததால்... அவனால் சரியாக சாப்பிட முடியவில்லை. தூங்க முடியவில்லை.

ஆகாயத்தில் மிதப்பதைப் போன்ற இன்ப உணர்வு.. அவனைப் பாடாய் படுத்தியது.

மறுநாள்... அந்த தேவதையின் வீட்டிற்கே செல்லும் சூழ்நிலை உருவானதும்..முகில் கிரிதரனின் இதயம் இன்பப் பரவசத்தில் பல குட்டிக்கரணங்களைப் போட்டது.




பித்தளைக்குடத்தை இடுப்பில் சுமந்து வந்த சங்கமித்திரை அடுக்களைக்குள் நுழைந்து பெரிய அண்டாவில் தண்ணீரை ஊற்றி விட்டு காலிக்குடத்தை இறக்கி வைத்துவிட்டு கூடத்திற்கு வந்தாள்.

வழக்கத்திற்கு மாறாக கூடத்தில் நிசப்தம் நிலவிக் கொண்டிருந்தது.

அப்பா சக்கரவர்த்தி சாய்வு நாற்காலியில் அமர்ந்து விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தார்.

அம்மா தங்கம், முறத்திலிருந்த அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவளது முகத்தில் ஏகத்திற்கும் கோபம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

இருவருக்கும் இடையே ஏதோ வாக்குவாதம் நடந்திருக்க வேண்டும் என்று ஊகித்தபடியே அப்பாவின் அருகில் போய் நின்றாள்.

'' அப்பா என்னப்பா? உங்க முகமே சரியில்லையே? அந்த நேரம் காலம் கூடி வரும் போது நடக்காதா? யாரோ என்னமோ சொன்னாங்கங்கிறதுக்காக... நை நைன்னு நச்சரிக்கலாமா? கல்யாணம்கிறது ஆயிரம் காலத்துப் பயிர். நின்னு நிதானமா யோசிச்சுத் தான் முடிவெடுக்கணும். இல்லேன்னா... அவசரத்துல அள்ளித் தெளிச்ச கோலமாயிடும். '' சக்கரவர்த்தியின் குரலில் கோபமும், எரிச்சலும் எட்டிப் பார்த்தன.

'' யாரு? என்ன சொன்னாங்களாம்? புரியும் படியா சொல்லுங்கப்பா...'' சரக்கைகளை சேலைத் தலைப்பில் துடைத்தபடியே சாய்வு நாற்காலியின் பக்கத்தில் தரையில் அமர்ந்தாள்.

'' அதை என்கிட்ட கேளு... நான் சொல்றேன். அடுத்த வாரம் நம்ம உறவுக்காரங்க வீட்ல கல்யாணம் பெரியகுளத்துக்கு போய் வரணும்.

கல்யாணப் பொண்ணு உன்னை விட மூணு வயசுக்கு இளையவ. பத்திரிகை வைக்க வந்தவங்க 'ஏன் அண்ணி உங்க பொண்ணு என்ஜினீயரிங் படிப்பை முடிச்சுட்டாள்லே? எப்போ கல்யாணம் பண்ணப் போறீங்க? அவளுக்கு வயசாயிட்டே போகுதே? கத்தரிக்காயும் சரி, பொண்ணும் சரி முத்திப்போனா விலை போறது கஷ்டமாச்சே? சட்டு புட்டு நல்ல எடமா பார்த்து முடிச்சிடுங்க. இல்லேன்னா பொண்ணை வேலைக்கு அனுப்பி அவ சம்பாத்தியத்துல நீங்க உட்கார்ந்து சாப்பிடறீங்கன்னு நாலு பேரு மட்டமா பேசிடுவாங்க. உங்க நல்லதுக்குத் தான் சொல்றேன் அண்ணி'ன்னு அவங்க புத்தி சொன்னப்போ எனக்கு முகத்துல அறைபட்டாப்ல அவ்ளோ அவமானமா இருந்துச்சு தெரியுமா? ''

'' நீங்க யாரு எங்களுக்கு புத்தி சொல்றதுக்கு? உங்க வேலையை மட்டும் பார்த்துட்டு இளம்புங்கன்னு' பதிலுக்கு மூஞ்சியில அடிச்சாப்ல பேசியிருக்கணும். அதை விட்டுட்டு என் கிட்ட கோபப்பட்டு சண்டை பிடிச்சா என்ன அர்த்தம்? '' கோபமாய் உற்றுப் பார்த்தார் சக்கரவர்த்தி.

'' அவங்க சொல்றதிலேயும் நியாயம் இருக்கு இல்லையா? காலாகாலத்துல நம்ம கடமையை முடிச்சுட்டா நமக்கு நிம்மதி தானே? அது ஏன் உங்களுக்கு தோண மாட்டேங்குது? இவளை ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுத்துட்டா நம்ம பாரம் இறங்கிடும். இல்லைன்னா நம்ம வயித்துல நெருப்பைக் கட்டிக்கிட்டே இருக்க வேண்டியது தான். கோபப்படாம நின்னு நிதானமா யோசிச்சுப் பாருங்க. உங்களுக்கே நான் சொல்றது நியாயம் தான்னு படும். '' தழுதழுத்தபடி பேசிவிட்டு கண்ணை கசக்கினாள் தங்கம்.

பொங்கிய பாலில் தெளிந்த நீராய் சக்கரவர்த்தியின் கோபம் புஸ்ஸென்று அடங்கியது.

'' சரி சரி கண்ணைக் கசக்காதே தங்கம்! தரகர்கிட்டேயும் தெரிஞ்சவங்க கிட்டேயும் சொல்லி வைப்போம். மித்ராவுக்கு எத்த வரன அமைஞ்சுட்டா முடிச்சுடலாம். சரியா? உம்...! இவ கிளப்பின பிரச்சனையில எனக்கு தலைவலியே வந்துடுச்சு. அம்மாடி மித்ரா கொஞ்சம் சூடா காபி போட்டுத் தர்றியாம்மா? காபி குடிச்சாவாவது தலைவலி மட்டுப்படுதான்னு பார்க்கிறேன்.''

'' இதோ அஞ்சே நிமிசத்துல காபி போட்டுத் தரேன் அப்பா. ''

அடுக்களைக்கு விரைந்தாள் சங்கமித்திரை.

வீட்டில் கல்யாணப்பேச்சை ஆரம்பித்ததும் அவளுக்கு ஏனோ சட்டென்று நேற்று ஜீப்பில் வந்து தன்னுடன் வெகு சகஜமாக பேசிய இளைஞனின் முகம் தான் ஞாபகத்திற்கு வந்தது.

தனது பெயர் 'முகில்' என்று சொன்னாரே? தன்னைப் பற்றிய அத்தனை விபரங்களையும் என்னிடம் ஏன் சொல்ல வேண்டும்?

தனிமையில் இருக்கும் போது இந்த விஷயங்கள் நிச்சயம் உங்களுக்கு ஆறுதல் தரும் என்றாரே? அவர் பணக்காரர் இல்லை. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர் தான் என்று தெரிந்தது. என்னையும் அறியாமல் பெருத்த நிம்மதி. சட்டென்று மனதில் ஜனித்ததே? அவர் கணித்தது போலவே ஆகிவிட்டதே? மகா கெட்டிக்காரர் தான். கடைசியாக ஒன்று கூறினாரே... இது பூர்வ ஜென்ம பந்தம் என்றாரே? அவர்

''டாக்டர் ஏன் ஆபரேஷன் தியேட்டருக்குள்ளே மந்திரவாதியைக் கூட்டிட்டுப் போறாரு?''

''ஆவிகள் தொந்தரவைச் சமாளிக்கத் தான்!''

-ஆர்.பிருந்தா, பெங்களூர்.



கூறியது உண்மையாக இருந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

மனிதநேயம் மிக்கவர் முகில். நிச்சயமாய் கட்டின மனைவியை உள்ளங்கையில் வைத்து தாங்கத் தான் போகிறார். வீட்டில் வேறு வரன் பார்க்கத் தொடங்கி விட்டனர். இந்த நிலையில் நான் அந்த முகிலையே நினைத்துக் கொண்டிருக்கிறேனே? இது எவ்வளவு பெரிய தவறு? என்னையும் அறியாமல் என் மனம் அவரை விரும்பி விட்டதே? எத்தனை கட்டுப்படுத்தியும் என் மனம் சண்டிக் குதிரையாய் தாவி ஓடி... அந்த முகிலிடம் போய் நிற்கிறதே?

ஆஞ்சநேயா? ஐயனே தினமும் உன் வாலில் பொட்டு வைத்து விளக்கேற்றி வருகிறேனே? எனக்கு ஏன் இந்த சோதனை? மனதில் ஒருவரை நினைத்துக் கொண்டு வேறொருவருக்கு நான் கழுத்தை நீட்டப் போகிறேனே? எனக்கு இந்த வேதனை அவசியம் தானா? நேற்று நான் அந்த முகிலை சந்திக்காமலே இருந்திருக்க கூடாதா?

திடீரென்று உள்ளூர அரும்பத் தொடங்கிய காதலை... வேரோடு கிள்ளி எறிந்து விட வேண்டியது தான்! அது தான் நல்ல குடும்பத்தை சேர்ந்த பெண்ணுக்கு அழகு!

அந்த முகிலை முற்றிலும் மறக்கக் கூடிய சக்தியை தாரும் ஐயனே மானசீகமாய் வேண்டிய போது... முகிலின் மந்தகாசம் தவழும் முகம் கண் முன் தோன்றி மறைந்தது.

'மாருதி' என்று விழிகளில் கண்ணீர் குளம் கட்டியது.

பனை வெல்லத்தையும், சுக்குப் பொடியையும் தட்டிப் போட்டு வடிகட்டி காபி தயாரித்துக் கொண்டிருந்த போது வாசலில் ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

"நம் வீட்டிற்கு யார் வருகிறார்கள்? அதுவும் ஜீப்பில்....?" யோசித்து முடிப்பதற்குள்...


"ஹலோ! வீட்டுல யாருங்க?" என்ற பரிச்சயமான குரலை கேட்டதும் தூக்கி வாரிப் போட, சட்டென்று வெளியில் வந்து எட்டிப் பார்த்தாள்.

"அ... அத்தான் என்னாச்சு?" பதறிப் போய் அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

"ஒன்னுமில்லைங்க. சரிவுல இறங்கி வரும் போது கால் வழுக்கி சறுக்கி விழுந்துட்டாரு. முழங்கால் மூட்டு பிசகிடுச்சு போல, வீக்கமா இருக்கு. பெரிசா வேற காயம் ஒன்னும் படலை. நல்ல காலம்! தற்செயலா நான் அந்தப்பக்கமா ஜீப்புல வந்தது நல்லதாப் போச்சு. அவ்வளவு தான்! இங்க வந்ததும் தான் தெரியுது இவரு உங்க அத்தானா?" கடைசியாய் முகில் இந்த கேள்வியை கேட்ட போது அவனது முகம் அனிச்ச மலராய் வாடிக்கிடந்ததைக் கண்ட போது சங்கமித்திரையின் இதழ்க்கடையில் புன்முறுவல் பூத்தது.

"தேங்க்ஸ் சார் டைமிலி ஹெல்ப் பண்ணியிருக்கீங்க. ரொம்ப





நன்றி! செல்வம் அத்தான் எனக்கு உறவுமுறையில் அத்தானா இருந்தாலும் எனக்கு மூத்த சகோதரன் மாதிரி ''

மித்ராவின் பதில் முகில் கிரிதரன் இதயத்தில் பாலை வார்த்தது போலிருந்தது.

சப்தம் கேட்டு வெளியில் வந்து எட்டிப் பார்த்த சக்கரவர்த்தி

'' செல்வம் அடி ஒண்ணும் பலமா படலையே? '' என்று கேட்டார்.

'' சார் மட்டும் தக்க சமயத்துல வரலேன்னா நான் ரொம்ப சிரமப்பட்டிருப்பேன். அடிபட்ட இடத்துல சார் ஏதோ தைலம் தேய்ச்சு விட்டாரு... கைத்தாங்கலா பிடிச்சு ஜீப்பில ஏத்தி இங்க கூட்டிட்டு வந்திருக்காரு. ''

செல்வம் மெல்லிய குரலில் கூறியதும்... நன்றி ததும்பும் விழிகளால் முகிலை ஏறிட்டார் சக்கரவர்த்தி.

'' ரொம்ப ரொம்ப நன்றி தம்பி '' கை கூப்பினார்.

சட்டென்று அவரது கரங்களைப் பற்றினான் முகில்.

'' நான் தான் உங்களை வணங்கணும். மனுஷனுக்கு மனுஷன் இந்த உதவி கூட செய்யலைன்னா நாம்ம பூமியில பிறந்ததுக்கு அர்த்தம் இல்லாம போயிடுமே? ''

'' அது சரி தான் ஆனா இந்தக் காலத்துல உங்களை மாதிரி இளைஞர்களைப் பார்க்கிறதே ரொம்ப அபூர்வம் தம்பி! மன்னிக்கணும் வாசல்ல நிக்க வச்சு பேசிட்டிருக்கேன். உள்ளே வாங்க தம்பி ''

'' வந்துட்டா போச்சு '' அடிக்கண்ணால் மித்ராவை நோட்டமிட்டபடி உள்ளே வந்தான் முகில்.

'' உட்காருங்க தம்பி! ஆமா நான் ஒண்ணு கேட்கணும்னு நினைச்சேன். அம்மாடி! தம்பியை உனக்கு முன்னாடியே தெரியுமா? வாசல்லே நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டிருந்ததை பார்த்தா ஏற்கனவே அறிமுகமானவங்க மாதிரி தெரிஞ்சதே? ''

'' ஆ... ஆமாம்பா நேத்தைக்கு வரையாட்டுக் குட்டிக்கு மருந்து போட்டு விட்டார்னு சொன்னேன்ல அவரு... இவரு தான் ''

'' ஓ அது தானே பார்த்தேன்? தம்பிக்கு ரொம்பவே மனிதநேயம் தான். அம்மாடி நின்னுக்கிட்டே இருக்கியே காபி, டீ ஏதாச்சும் கொண்டா.... '' உத்தரவிட்டார் சக்கரவர்த்தி.

அவர் 'மனிதநேயம்' என்று கூறியபோது முகில், மித்ரா இருவரது விழிகளும் நேசமாய் ஒருகணம் மோதிக் கொண்டன.

மித்ராவுக்கு நேற்று முகில் பிராணி நேயம், மிருக நேயம் என்று கூறியது நினைவுக்கு வந்ததும் பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி அடுக்களைக்குள் அடைக்கலமானாள்.

செல்வத்தை கைத்தாங்கலாக பற்றியபடி அந்த வீட்டு வாசலில் வந்து நின்ற முகில் சங்கமித்திரை உள்ளிருந்து வந்ததும் மகிழ்ச்சிக் கடலில் மிதக்க ஆரம்பித்திருந்தான்.



' கடவுள் என் வேண்டுதலுக்கு செவி சாய்த்து விட்டார். என் காதல் தேவதையின் வீட்டிற்கே என்னை அழைத்து வந்து விட்டாரே? கண்டிப்பாக இந்தக் காதல் கைகூடத்தான் போகிறது. மித்ராவின் கரத்தைப் பிடித்து வாழ்க்கைப் பாதையில் ஜோடியாய் பயணிக்கத் தான் போகிறேன். '

உள்ளூர நம்பிக்கை நங்கூரமிட, சந்தோஷமாய் சக்கரவர்த்தியிடம் அளவளாவினான்.

அவனது நம்பிக்கை கை கூடியது-ஆனால் விதி சதி செய்து உன்னதமான காதலர்களை பிரித்து விடும் என்றோ... சங்கமித்திரையை அந்தக் கால காவியநாயகி சகுந்தலையைப் போன்று அபலையாக்கும் என்றோ முகில் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை என்பது நிஜம்!




ஆஞ்சநேயர் சன்னதிக்கு முன்பாக கரம் குவித்து மனமுருக சேவித்தாள் சங்கமித்திரை.

சற்று முன்பு தான் ஆஞ்சநேயர் வாலில் பொட்டு வைத்து விளக்கேற்றி இருந்தாள்.

செண்பகம், அடுக்குமல்லி, இருவாட்சி, நித்தியமல்லி, செவ்வரளி, சம்பங்கி, சாமந்தி, செம்பருத்தி என தோட்டத்தில் இருந்து பறித்துக் கொண்டு தனது கையாலயே தொடுத்து கதம்ப மாலையாக்கி அதை ஆஞ்சநேயருக்கு சாற்றியிருந்தாள்.

'ஐயனே இதென்ன சோதனை? நான் முகிலைப் பற்றி நினைக்கவே கூடாது, அவரை முற்றிலும் மறக்கக் கூடிய சக்தியைத் தாரும்' என்று வேண்டி முடித்த தருணத்தில் அவரே நேரில் வீடு தேடி வந்து விட்டாரே? இது தற்செயலாக நடந்த ஒன்று தான்! ஒருவேளை முகில்

''ஏன் சார் பூச்செடியைத் தொட்டியோட தூக்கிட்டுப் போறீங்க?''

''பூக்களைப் பறிக்காதீங்கன்னு போர்டு போட்டிருக்கு. அதான்!''

-ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி



கூறியபடி இது பூர்வ ஜென்ம பந்தமோ? அப்பாவுக்கு முகிலை மிக வும் பிடித்துப் போய்விட்டதே! முகிலைப் பற்றி அவரது குடும் பத்தை பற்றி துருவித்துருவி விசாரித்துக் கொண்டிருந்தாரே அப்பா!

பணிவாக, பவ்யமாக, தன்னடக்கத்துடன் நடந்து கொண்டு ஒரே நாளில் அப்பா, அம்மா, செல்வம் அத்தான் ஆகியோர் மனதில் முகில் இடம் பிடித்து விட்டாரே? நடப்பதை எல்லாம் பார்த்தால்... இது பூர்வ ஜென்ம பந்தம் என்று தான் தோன்றுகிறது.

தேற்று பனை வெல்லமும், சுக்கு காபியும் தட்டிப் போட்ட காபியை அருந்தி விட்டு "ஆஹா! காபிகளையும், மணமுமா ரொம்ப அபாரமா இருக்கு. எஸ்டேட் குளிருக்கு இதமா இருக்கே. பனை வெல்லமும், சுக்கும் உடம்புக்கு ரொம்பவே நல்லதுன்னு சொல் வாங்க. அபாரம்! "

இந்த காபிக்காகவே தினமும் உங்க வீட்டுக்கு வரலாம் போலி ருக்கே! தேங்க்ஸ் அம்மா உங்க கைக்கு தங்கக்காப்பு தான் போட ணும். " என்று முகில் வேண்டுமென்றே அம்மா தங்கத்தை வாய் விட்டுப் பாராட்டினாரே?

"அட என்ன தம்பி இது? வெறும் காபிக்கே இப்படி பாராட்டினா எப்படி? ஒரு நாள் அவசியம் சாப்பிட வாஙணும். அதுக்கு அப்புறமா பாராட்டுங்க. நியாயமா நீங்க என் பொண்ணைத் தான் பாராட்டணும். காபி போட்டது அவ தானே. " என்று அம்மா கூறியதும் முகில் கனி வும் காதலுமாய் என்னை நோக்கினாரே?

'ஆஞ்சநேயா ஜயனே! என் மனகல முகில் விஸ்வரூபமெடுத்து வியாபிக்கிறாரே?

அவரைப் பார்த்த இரு தினங்களிலேயே நான் அடியோடு மாறிப் போய்விட்டேனே? '

உமது பாதங்களில் நான் தஞ்சமடைந்து விட்டேன். நல்வழி காட்ட வேண்டும் ஐயனே!

கண்ணீர் மல்க, மனமுருக பிரார்த்தனை செய்து விட்டு அர்ச்ச னைக் கூடையை அவள் கையில் எடுத்த தருணத்தில் ஆஞ்சநேயருக்கு அவள் சாற்றிய கதம்ப மாலையிலிருந்து ஒரு செண்பக மலர் உதிர்ந்து ஸ்வாமியின் பாதத்தில் விழுந்தது.

அதைக் கண்டதும் சங்கமித்திரையின் மனதில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது.

சட்டென்று அந்த செண்பக மலரை எடுத்து கூந்தலில் சூடிக் கொண்டாள்.

ஸ்வாமிக்கு நான் சாற்றிய மாலையிலிருந்து பூ உதிர்கிறதே? இது மிக நல்ல சகுனம்னு பெரியவங்க சொல்வாங்களே? அப்படியென் றால் என் பிரார்த்தனைக்கு பகவான் செவிசாய்த்து விட்டாரா? சந்தோ ஷத்தில் மனம் ஆர்ப்பரிக்க அர்ச்சனைக் கூடையுடன் அவள் சன்ன தியை விட்டு மெல்ல நடந்தவளின் பார்வை இருபதடி தூரத்தில் பிர



மாண்டமாய் இருந்த 'வெண்ணை உருண்டைப் பாறை'யின் மீது பதிந்து அதிர்ந்தது.

கிருஷ்ண பகவானின் கையிலிருக்கும் வெண்ணெய் உருண்டை விஸ்வரூபமெடுத்து வளர்ந்ததைப் போன்ற தோற்றம் பெற்றிருந்த தால் அந்தப் பாறை 'வெண்ணெய் உருண்டைப் பாறை ' என்று பெயர் பெற்றிருந்தது அது!

அந்த பிரமாண்டமான பாறையில் ஆங்காங்கே பள்ளம் போன்று செதுக்கி இருப்பதால் படிக்கட்டில் ஏறுவதைப் போன்று சில துணிச் சல்காரர்கள் ஏறிச் சென்று உச்சியில் சமதளப்பரப்பில் நின்று சிலை வேடிக்கைப் பார்ப்பதும் உண்டு. வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் தவறி விழுந்து மரணத்தை தழுவியதும் உண்டு.

வேண்டுமென்றே அந்தப் பாறையின் மீது ஏறி நின்று தற்கொலை செய்தவர்கள் தான் ஏராளம்.

காதலில் தோல்வியடைந்த இளவட்டாரங்கள் தங்களது இன்னு யிரை மாய்த்துக் கொள்ள அடிக்கடி இந்த இடத்தைத் தான் தேர்வு செய்து தேடி வருவார்கள். இப்போது சங்கமித்திரை.... வெண்ணெய் உருண்டைப் பாறையைக் கண்டதும் அதிர்ச்சியில் அர்ச்சனைக் கூடையை தவற விட்டாள்.

அங்கே அந்த பாறையின் உச்சியில்....

ஒரு இளைஞன் முதுகு காட்டியபடி நின்று கொண்டிருந்தான். மிகத்துணிவுடன் குனிந்து மலைச்சரிவை உற்று நோக்கியபடி இருந் தான். மலைக்காற்று வேகமாக வீசியதில் சன்னதியைச் சுற்றிலும் உள்ள மரங்கள் கிளைகளை அசைத்து பேயாட்டம் போட்டன.

காற்றில் படபடத்த முந்தானையை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டாள்.

உரக்க குரல் கொடுத்து அந்த இளைஞனை அழைத்துப் பார்க்க லாமா?

எவரும் இவனது செய்கையைப் பார்த்தால் தற்கொலைக்கு முயற் சிப்பவனைப் போல தான் தெரிகிறது.

சப்தம் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தால் 'எங்கே நம்மை தடுத்து விடுவார்களோ?' என்ற பயத்தில் வெகு வேகமாய் பாறையி லிருந்து மலைச்சரிவில் குதித்து விடும் அபாயமும் இருக்கிறதே?

கண்முன்னே ஒருவன் உயிரை விடத்துணிந்து விட்டான். அவ னைத் தடுத்து காப்பாற்ற முடியாமல் போய்விட்டால்...?

காலமுச்சூடும் இந்த கொடூரமான காட்சி என் மனக்கண்ணில் வந்து வந்து போகுமே? எனக்கு தூக்கம் வராதே? ' எண்ணியபடி ஓட டமும், நடையுமாய் அந்த வெண்ணெய் உருண்டைப் பாறையை நெருங்கினாள். எங்கிருந்து தான் அவளுக்கு அவ்வளவு வேகமும், துணிச்சலும் வந்ததோ தெரியவில்லை...

சேலைக் கொசுவத்தை சற்றே உயர்த்திப் பிடித்துக் கொண்டு

பாறையில் படிக்கட்டை போன்று செதுக்கிய இடங்களில் கால் வைத்து அசுர வேகத்தில் ஏறிவிட்டாள்.

'ஆபத்துக்கு பாவமில்லை' என்ற நினைப்பில் முதுகு காட்டி நின்ற இளைஞனின் அருகில் நெருங்கி அவனது முழங்கையை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

'' அ... அவசரப்பட்டு தப்பான முடிவை எடுக்காதீங்க ப்ளீஸ்... பகவான் கொடுத்த உயிரை அழிக்கிறதுக்கு நமக்கு எந்த உரிமையுமே இல்லை.'' பார்வையைத் தாழ்த்தபடியே படபடத்துவிட்டு நிமிர்ந்தவளுக்கு திக்கென்றிருந்தது.

'' மு...முகில்! நீங்களா? நீங்க எதுக்கு இங்கே? '' என்றபடி கீழே தெரிந்த அதல பாதாளத்தைக் கண்டவளுக்கு தலைசுற்றுவது போலிருந்தது.

மலைக்காற்று வேறு 'உய்ங்' என்ற சப்தத்துடன் சுழன்று அவளது மலர் மேனியைத் தள்ளி விடுவது போன்ற வேகத்துடன் வீசியதால் சங்கமித்திரையின் கை, கால்கள் பயத்தில் வெடவெடத்தன.

கால்கள் துணியாய் துவள, மெல்ல சரிந்து விழப் போனவளை சட்டென்று இறுக அணைத்துக் கொண்டான்.

சூறாவளிக் காற்றில் சிக்கி அலைக்கழிந்த பூங்கொடி ஒரு கொழு கொம்பு கிடைத்ததும் சட்டென்று படர்வதைப் போல பயத்திலும், திகிலிலும் அவனது பரந்த மார்பில் சாய்ந்து விழிகளை இறுக மூடிக் கொண்டாள் சங்கமித்திரை.

'நானிருக்கேன் உனக்கு' என்பது போல் அவளை இறுக அணைத்து அவளது தலையை ஆதுரமாக வருடினான். அவள் கேட்ட கேள்விக்கு பதில் பேச முகிலுக்கு நா எழவில்லை. பல யுகங்கள் தவமிருந்து கேட்ட வரம் கிடைத்து விட்டாற்போன்று உள்ளம் உவகையில் பொங்கிப் பொங்கிப் பூரித்தது.

கூடை நிறைய பனி மலர்களை வாரி, தலையில் அப்படியே கவிழ்த்தாற்போன்று இருந்தது.

சில கணங்கள் கடந்து, நடுக்கம் நீங்கியதும் தான் சங்கமித்திரைக்கு உலக நினைப்பே வந்தது. அதிலும் தன் உள்ளம் கவர்ந்த முகிலின் பரந்த மார்பில் முகம் புதைத்து அவனது அணைப்பில் ஒண்டிக் கிடந்ததைக் கண்டதும் அவளது முகம் குங்குமப்பூவாய் சிவந்து போனது. நாணத்துடன் பார்வையை தாழ்த்தபடி விலக எத்தனித்தவளை விடாப்பிடியாக இறுகப் பற்றிக் கொண்டிருந்தான் முகில்.

''வேணாம் மித்ரா! காத்து வேற பலமா வீசுது. மறுபடியும், பயத்துல உனக்கு தலைசுத்திடும். பாறையில் இருந்து இறங்கிற வரைக்கும் என் பிடியில் இருந்தா ஒன்னும் தப்பில்லை. ''

'' இ... இப்போ பரவாயில்ல. பயம் தெளிஞ்சிடுச்சு. தேங்க்ஸ் '' கூச்சத்துடன் முணுமுணுத்தவளைக் கண்டு முறுவலித்தபடியே அவளது அணைப்பிலிருந்து அவளை விடுவித்தான்.



'' இருந்தாலும் என் திருப்திக்கு கீழே இறங்கிற வரைக்கும் நான் கையைப் பிடிச்சுக்கலாம் இல்லையா? '' அவளது பதிலுக்குக் கூட காத்திராமல் உரிமையாய் அவன் வலது கரத்தை பற்றிக் கொண்டவிதம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது..

'' நான் கேட்டதுக்கு நீங்க பதிலே சொல்லலையே? '' விழிகள் விரிய அவனை ஏறிட்டாள்.

அகன்ற விழிகளை மேலும் விரித்துப் பார்க்கையில் அழகிய ஓவியம் போன்றே தெரிந்தவளை ரசித்துப் பார்த்த முகில் புன்னகை பூத்தான்.

''நானும் உன்னை மாதிரி தான் இயற்கையை அணு அணுவா ரசிக்கப்பிடிக்கும். கையில பார்த்தியா? மினி காமிரா! இந்தப் பாறையில ஏறி நின்னா ரொம்ப தூரம் வரைக்கும் 'வியூ' நல்லாத் தெரியும்னு சொன்னாங்க.

இங்கே வந்து நின்னு பார்த்தா இயற்கைக் காட்சிகள் ரொம்ப அற்புதமா தெரிஞ்சது. லயிச்சுப் போயி நின்னுட்டேன். கீழே தெரியற அதல பாதாளத்தையும் குனிஞ்சு படம் பிடிச்சேன்.

திடுதிப்புன்னு நீ வந்து நிக்கறே. ஒரு செகண்ட் கீழே பார்த்துட்டு தலைசுத்தி விழப் பார்த்தியே மித்ரா? விழுந்திருந்தா என்னத்துக்கு ஆகும்? இவ்ளோ பயந்த சுபாவம் கொண்ட பொண்ணு. துணிஞ்சு தைரியமா மேலேறி வந்து யாரோ ஒருத்தன் தற்கொலைக்கு முயற்சி பண்றானே? அவனைக் காப்பாத்தணும்னு நெனச்சுப் பதறி மேலேறி வந்தியே? உன் உசுரைக் கூடப் பொருட்படுத்தாம பாறை மேல ஏறி வந்திருக்கே குட்! உன்னோட கருணை உள்ளத்தையும், மனிதநேயத்தையும் பார்த்தா ரொம்ப பிரமிப்பா இருக்கு மித்ரா! பார்த்து மெதுவா கால் வச்சு இறங்கு. இந்த இடத்துக்கு நீ வருவேன்னு நான் நெனச்சுக் கூடப் பார்க்கலை தெரியுமா?'' இருவரும் கவனமாக படிக்கட்டு போன்ற அமைப்பில் கால் வைத்து இறங்கினார்கள்.

''கடல் ஏன் நீலமா இருக்கு?''

''தெரியலையே!''

''ஏன்னா அது ரொம்ப நீளமா இருக்கு அதனால்தான் நீலமா இருக்கு!''

-ப.கோபிபச்சமுத்து. கிருஷ்ணகிரி



'' நான் கூடத்தான் நெனச்சே பார்க்கலை. '' மெல்ல முணுமுணுத்தான்.

'' முதல் நாள் பார்த்தப்பவே சொன்னேனே ஞாபகமிருக்கா? பூர்வ ஜென்ம பந்தம்னு சொல்லியிருந்தேனே? காத்து பலமா வீசறதைப் பார்த்தா சாய்ச்சு விட்டுரும் போலிருக்கே? ஏறும்போது ஏதோவொரு வேகத்துல ஏறிட்டேன். ஆனா இறங்கும் போது ரொம்பவே நடுக்கமா இருக்கே? '' வேண்டுமென்றே பேச்சை மாற்றினாள்.

நாணத்தினால் அவளது கன்னங்களில் செம்மைபடர்ந்திருந்ததைக் கண்டு மெல்ல முறுவலித்தபடி.... அவளைப் பற்றியிருந்த பிடியை மேலும் இறுக்கினான் முகில்.

'' நான் தான் உன் கையைப் பிடிச்சிருக்கேனே? கை விடவே மாட்டேன். தைரியமா இறங்கு மித்ரா. '' இருபொருள்படக் கூறினான்.

'' அதோ சின்னதா ஒரு ஆஞ்சநேயர் சன்னதி இருக்கு. பாருங்க அங்க தான் வந்தேன். சாமிக்கு வாலில் குங்குமப் பொட்டு வச்சுட்டு விளக்கேத்த தினமும் நான் வர்றது வழக்கம்.

இன்னிக்கு பிரார்த்தனையை முடிச்சிட்டு கிளம்பறப்போ தான் வெண்ணெய் உருண்டைப் பாறையில உங்களைப் பார்த்துட்டு பதறிப் போய் வந்தேன். ''


'' அது நான் தான்னு தெரியாமலேயே பதறிப் போய் தானே வந்தேகுட்! இது தெய்வச் செயல் தான்னு என் மனசுக்கு படுது மித்ரா! இதை விட்டா வேற நல்ல சந்தர்ப்பம் வாய்க்கிறது ரொம்பக் கஷ்டம். அதனால துணிஞ்சு என் மனசுல உள்ளதை உன் கிட்ட சொல்லிடறேன். இப்போ எனக்குன்னு யாருமில்லை மித்ரா! வாழ்க்கையே வறண்டு வெறுமையா இருக்கு! நீ கிடைச்சா வறண்ட மனசுல லட்சோப லட்சம் பூ பூத்த மாதிரி இருக்கும். என் வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் கிடைக்கும். எல்லாத்துக்கும் மேல நான் உன்னை மனப்பூர்வமாக நேசிக்கிறேன். எஸ்... ஐ... லவ்... யூ சோ மச்! நீ எனக்காகவே பிறந்தவள், நீ எனக்குக் கிடைப்பேங்கிற நம்பிக்கை நூறு சதவீதம் இருக்கு. நீ இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை மித்ரா!

இருண்டு கிடக்கிற என் இதயத்துல நீ தான் விளக்கேத்தணும். இந்த அனாதைக்கு வாழ்வு தரணும். சொல்லு மித்ரா! இப்பவே உன் மனசுல என்ன இருக்குன்னு வெளிப்படையா சொல்லிடு. எனக்கு பதில் கிடைக்காட்டா நான் உன்னைப் போகவே விட மாட்டேன். '' குரல் பிசிறடிக்க கெஞ்சும் தொனியில் முகில் பேசிய விதம் சொரேல் என்று அவளது அடி மனதில் பரிதாபத்தை சுரக்க வைத்தது.

'' அதோ அந்த ஆஞ்சநேயரை சாட்சியா வச்சு சொல்றேன். இது சத்தியமான வார்த்தை மித்ரா! உன்னை என்னோட கண்ணின் கருமணியா வச்சுப் பாதுகாப்பேன். உன் கண்ணுல ஒரு சொட்டுக் கண்ணீர் வர்றதுக்குக் கூட நான் அனுமதிக்க மாட்டேன். உன்னை உள்ளங்கை



யில வச்சுத் தாங்குவேன். காலத்துக்கு என் இதய சிம்மாசனத்துல உட்கார வச்சு இந்தக் காதல் தேவதையை ஆராதனை செய்துட்டே இருப்பேன். இது சத்தியம் மித்ரா '' ஸ்தம்பித்துப் போய் வாயடைத்து நின்று விட்டாள் சங்கமித்திரை. அவன் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளது இதயத்தை இளக வைத்தன. உருகி மருக வைத்தன. தன் வாழ்வே இருண்டு விடப் போகிறது என்பதை அறியாத சங்கமித்திரை நெஞ்சம் நெகிழ்ந்து போய் முகிலை ஏறிட்டாள்.




அடர்ந்த ஆலமரத்துக்கு அடியில் வந்து நின்றதும் முகில் சங்கமித்திரையை ஊன்றிப் பார்த்தான்.

திடுதிப்பென்று பஞ்சவர்ணக் கிளிக் கூட்டம் 'கீச் கீச்' என்று ஒரு சேர 'கல கலத்வனி' செய்தபடி ஆலமரத்திலிருந்து சொல்லி வைத்தாற்போன்று குபீரென்று பறந்து சென்ற அழகை இருவரும் ரசித்துப் பார்த்தனர்.

'' நான் கேட்டதுக்கு இன்னமும் பதிலே சொல்லலையே மித்ரா? மௌனம் சம்மதத்துக்கு அடையாளம்னு நான் சந்தோஷப்பட்டுக்கலாமா? ''

'' இல்ல நான் என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம திணறிக்கிட்டு இருக்கேன். ''

'' எனக்கு சாதகமான பதில் வரலைன்னா நான் ரொம்ப நொறுங்கிப் போயிடுவேன். வாழுறதை விட என் வாழ்வையே நான் முடிச்சுக்கலாம். ஐ மீன் வெண்ணெய் உருண்டைப் பாறையிலிருந்து குதிச்சு என்னை மாய்ச்சுக்க வேண்டியது தான்... ''

'' மு... முகில்! என்ன வார்த்தை சொல்லிட்டீங்க? நம்ம உயிரை மாய்ச்சுக்கிற உரிமை நமக்கு எப்பவுமே கிடையாதுன்னு உங்களுக்குத் தெரியாதா? இது வாழ்க்கைப் பிரச்சனை! முடிவு எடுக்கிற உரிமையோ இன்னும் சொல்லப் போனால் அந்த தைரியமோ எனக்கு இல்லை முகில்! பொண்ணுங்க எப்பவுமே மனசை இரும்புக் கதவு போட்டு பூட்டி பத்திரமா வச்சுக்கணும்னு சொல்லி சொல்லி வளர்க்கப்பட்டவள் நான். நானும் இதுவரை அப்படித்தான் இருந்தேன். ஆனா என்னையும் அறியாம... என் இதயக் கதவுகள் திறந்துடுச்சு என் உள்ளத்தில் எப்படியோ நீங்க குடி வந்துட்டீங்க. இப்போ என் நிலைமை எப்படி இருக்கு தெரியுமா? அம்மா நச்சரிக்கிறதால எங்கப்பா எனக்கு வரன் தேடத் தொடங்கிட்டாரு. இந்த சமயத்துல நான் என் மனசுல உள்ளதை வெளியில சொல்லவும் முடியலை... சொல்லாம இருக்கவும் முடியலை. இருதலைக்கொள்ளி எறும்பு மாதிரி

தவிச்சிட்டிருக்கேன். உங்களை மறக்க முடியலை... வேறு ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டவும் என்னால முடியாது. அப்பா, அம்மாகிட்ட என் காதலை எடுத்துச் சொல்ற தைரியமும் எனக்கு இல்லை. சொன்னா... அவங்க மனசை உடைச்சுடுவோம்கிற பயம்... என்னை ஆட்டிப் படைக்குது. ஊமை கண்ட கனவு மாதிரி... மனசுக்குள்ளே அரும்பு விட்டு முகிழ்ந்த காதலை அப்படியே போட்டுப் புதைச்சுக்க வேண்டியது தான். எனக்கு வேற வழி தெரியலை முகில்! இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னைக் காப்பாத்து எனக்கு நல்வழி காட்டு' அப்படின்னு தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னே சாமி கிட்ட வேண்டினேன்.

எனக்கு பொய் சொல்லிப் பழக்கமில்ல... என் மனசை உங்ககிட்ட நானும் பறிகொடுத்துட்டேன் முகில்! நானும் உங்களை மனதார நேசிக்கிறேன். ஆனா... எங்க வீட்டுல... பெத்தவங்களோட விருப்பத்தை மீறி நான் எந்த முடிவும் எடுக்கவும் முடியாது முகில்!...

என் நிலைமையை நீங்க புரிஞ்சுப்பீங்கன்னு நம்பறேன்..."

"தேங்க்காட்! இதுபோதும் மித்ரா! சுவர்க்கத்தின் ஒரு பாகத்தைப் பிட்டு... யாரோ என் கையில கொடுத்த மாதிரி இருக்குமா?

மனசுக்குள்ளே சலசலன்னு சப்தத்தோட மகிழ்ச்சி நீரோடை பாய்ஞ்சு பிரவாக மெடுக்குது மித்ரா!

என் தேவதை எனக்குக் கிடைச்சுட்டா.. அவ மனசுல நான் இடம் பிடிச்சுட்டேன்.

இந்த உலகத்திலேயே நான்தான் பெரிய பாக்யெசாலி தெரியுமா?

'ஐ லவ் மித்ரா'ன்னு.. இந்த பிரபஞ்சத்துக்கே கேட்கிற மாதிரி உச்சஸ்தாயியில கத்தணும் போல இருக்கு..

இந்த சந்தோஷத்துல அப்படியே இறக்கை கட்டிப் பறக்கணும் போல இருக்கு...இதே திருப்தியில இப்பவே கூட நான் கண்ணை மூடத் தயாரா இருக்கேன் தெரியுமா மித்ரா?

மனசுல மகிழ்ச்சி ததும்புது... நான் மரணத்தைத் தழுவவும் தயங்க மாட்டேன் மித்ரா!.. இது நிஜம்!"

"ஐயோ! இது என்ன பேச்சு? அபசகுனமாவே பேசறீங்களே?" மனம் தாங்காமல் பதற்றத்தில் சட்டென்று தன் கரத்தால் அவனது இதழைப் பொத்தினாள் சங்கமித்திரை.

"பெரியவங்க யாருமில்லாம தனிமையிலேயே வளர்ந்துட்டீங்க. அதான் இப்படியெல்லாம் பேசறீங்க.. பெரியவங்க பேசறது. தப்புன்னு சொல்லி கண்டிச்சு.. அப்பப்போ திருத்தியிருப்பாங்க... இனிமே தயவு செய்து இப்படிப் பேசாதீங்க முகில்!

நம்ம ரெண்டு பேத்துக்கும் ஒத்த நோக்கு, ரசனைன்னு.. நிறைய விஷயங்கள்லே ஒற்றுமை இருக்கு...!

ஆனா இந்த ஒரு விஷயம் மட்டும் எனக்கு சுத்தமா பிடிக்கவே இல்ல...



எனக்கு பாரதியார் கவிதைகள்னா ரொம்பவும் பிடிக்கும். கண்டிப்பா உங்களுக்கும் பிடிக்கும்னு நம்புறேன்.

'காலா! உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்; என்றன் காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்' அப்படின்னு பாரதி எழுதிய வரிகள் எனக்கு ரொம்பவே பிடிக்கும்.

எத்தனை கஷ்டங்கள், பிரச்சனைகள் வந்தாலும், நாம்ப எதிர்த்து நின்னு பேஸ் பண்ணணும்.

தப்பித்தவறிக் கூட... சாவைப் பத்தின நினைப்பு நமக்கு வரவே கூடாது.

நீங்க படிச்சவர்.. நாலும் தெரிஞ்சவர். இதுக்குமேல நானும் எதுவும் சொல்லத் தேவையில்லைன்னு நினைக்கிறேன்.

சாவு மரணம்கிற வார்த்தை இனிமே தப்பித்தவறி கூட உங்க வாயிலிருந்து வரக்கூடாது முகில்!" தன்னையும் மறந்து படபடத்த சங்கமித்திரை. முகிலின் குறும்பு கூத்தாடும் கண்களைப் பார்த்ததும் தான் தன்னிலை மீண்டாள்.

அவனை நெருங்கி அணைத்து இதழை, தன் வலது கரத்தால் மூடியதை.. அப்போது தான் உணர்ந்தவளாய் நாணி, சட்டென்று விலகினாள்.

"வாரே வா! என்மேல தான் உனக்கு எவ்வளோ அன்பு, அக்கறை? உத்தரவு மகாராணி! உன் வார்த்தையை நான் என்னிக்கும் மீற மாட்டேன்.

இந்த ஆகாயம், பூமி, இந்தப் பிரபஞ்சம் இந்த ஆஞ்சநேயர் சன்னதி, வெண்ணெய் உருண்டைப் பாறை, சாட்சியா வச்சு சொல்றேன்.

சாவைப் பத்தி நான் பேசவே மாட்டேன். உன் அன்பு கிடைச்சதாலே.. என்னை சாவே நெருங்காது போதுமா?

பாரதியார் கவிதைகள்னு சொன்னதுமே... அவரோட காதல் கவிதைகள் தான் ஞாபகத்துக்கு வருது...

"நம்ம மாப்ளே சரியான தீனிப் பண்டாரமா இருப்பார்போல!"

"எப்படி சொல்றீங்க?"

"முதலிரவு அறையில 10 நிமிசத்திலேயே வெளிய வந்து லட்டு, ஜிலேபி, பழம் எல்லாம் இன்னும் வேணுங்குறாரே!"

-பழ.கவிதா சிவமணி
புன்செய்ப்புளியம்பட்டி



காற்று வெளியிடைக் கண்ணம்மா... நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்.''

"என் மித்ரா நீ தான் என் கண்ணம்மா! இந்த ஜென்மம் மட்டுமில்ல... இன்னும் எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் நீதான் என் காதலி! நீ தான் என் அன்பு தேவதையா வரப்போறே...

நம்ம காதலை இன்னிக்கு... இந்த இடத்துல வெளிப்படுத்தி இருக்கோம்... இந்த நினைத்தையும் இந்த அழகான பகுதியையும் என்னால மறக்கவே முடியாது.

உன் அன்பு எனக்கு கிடைச்சிடுச்சு. எனக்கு இது போதும்! நீ எதைப் பத்தியும் கவலைப்படாதே.

நம்ம காதல் நிச்சயமா கை கூடும். உன் வீட்டுக்கே வந்து உன் பேரண்ட்ஸ் கிட்டே நான் பொண்ணு கேட்கப்போறேன்.

ஆயிரம் யானை பலம் எனக்கு வந்தாப்பல... உற்சாக உத்வேகம் பிறந்திருக்கு...

உண்மையான காதல் ஜெயிக்கும்னு பெரியவங்க சொல்வாங்க நம்ம காதல் திருமணத்தில் தான் முடியும். நீ தைரியமா வீட்டுக்குப் போ மத்ததை நான் பார்த்துக்கிறேன். சரியா?''

அவனது ஆணித்தரமான பேச்சைக் கேட்டதும்... சங்கமித்திரைக்கு உள்ளூர நிம்மதி துளிர்த்தது நிஜம்!

தலையாட்டி விடை பெற்றுக் கொண்டு... ஆஞ்சநேயர் சன்னதிக்குப் பக்கத்தில்... தான் கீழே தவறவிட்ட அர்ச்சனைக் கூடையை எடுத்துக் கொண்டு மெல்ல நடந்தாள்.

மறுநாளிலிருந்து... செல்வத்தின் காலில் பட்ட காயத்தை விசாரிக்கும் சாக்கில்... அடிக்கடி சங்கமித்திரையின் வீட்டிற்கு வந்து சென்றான் முகில்.

அவனது அக்கறை பொறுப்புணர்ச்சி பெரியவர்களிடம் காட்டிய மரியாதை, பழகும் விதம்... என்று அனைத்து குணாதிசயங்களைக் கொண்டு... தங்கமும், சக்கரவர்த்தியும் முகிலின் பால் ஈர்க்கப்பட்டு விட்டிருந்தனர்.

மூன்று வாரங்கள் கடந்த நிலையில்... சக்கரவர்த்திக்கு திடீரென்று நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது.

'பெற்ற மகளைக் கரையேற்றாமல் நட்டாற்றில் விட்டு விட்டுப் போய் விடுவோமோ?' என்று மிகவும் பயந்து போய் விட்டார் சக்கரவர்த்தி.

சங்கமித்திரை பதறிப்போய் அருகிலிருந்த வைத்தியரை அழைத்துக் கொண்டு வந்தாள்.

"பயப்படும்படியா ஒன்றுமில்லை... வெறும் வாயுத் தொல்லை தான். இந்த மருந்தை மூனு வேளைக்கு கொடுங்க... அப்புறமா நான் வந்து பார்க்கிறேன்...'' என்று வைத்தியர் கூறியதும் தான்... அவள் நிம்மதியாக மூச்சு விட்டாள்.



ஆனாலும் சக்கரவர்த்திக்கு உள்ளூர நிம்மதியும், கவலையும் ஆட்டிப்படைக்கத் தொடங்கின.

"எதுவேணாலும் எப்ப வேணாலும் நடக்கலாம். நானிருக்கும் போதே... மித்ராவை நல்லவன் கையில ஒப்படைச்சிட்டாத்தான் எனக்கு நிம்மதி!

தங்கம் எழுக்காத படிக்கப் படிச்ச சொல்லணும்னு இப்பத் தானே புரியுது? கூடிய சீக்கிரம் இந்த நல்ல காரியத்தை நடத்திப்புடணும்'' என்று வாய் விட்டுப் புலம்பத் தொடங்கியவரின் மனதில் சட்டென்று வந்து நின்றான் முகில்.

## 9

"மித்ரா! இங்க வாம்மா! முகில் தம்பியைப் பத்தி நீ என்ன நெனைக்கிறே? அந்தத் தம்பியை எங்களுக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு.

படிச்ச பிள்ளை... பண்பா பழகிறா நடக்கிறாரு. இந்தக் காலத்துல இப்படியொரு நல்ல கமான பிள்ளையைப் பார்க்கவே முடியாது.

உன் படிப்புக்கும், குணத்துக்கும், அழகுக்கும் எந்த மாப்பிள்ளை கிடைக்கணுமோ? என்று நான் ரொம்பவே கவலைப்பட்டேன்.

முகில் எல்லா விதத்திலேயும் உனக்கு எத்தவரா பொருத்தமானவரா இருப்பாருன்னு எங்களுக்குப் படுது.

அவருக்கு உன்னைக் கட்டிக் கொடுத்தா... உன்னை நல்லபடியா வச்சுப் பார்த்துப்பாரு... பிக்கல் பிடுங்கல் எதுவும் இல்ல...

தனி மனுஷனா இருக்கிறதால... எந்தப் பிரச்சனையும் வராது. எனக்கும், உங்கம்மாவுக்கும் இதிலே பரிபூரண திருப்தி! நீ சம்மதிச்சாத்தான் நான் பேசிக்கொண்டு அந்தத் தம்பி கிட்டே பேச முடியும். நீ என்னம்மா சொல்றே?''

அவளை அருகில் அழைத்து அப்பா சக்கரவர்த்தி அபிப்ராயம் கேட்ட போது... மகிழ்ச்சி தாளாமல் அவளது இதயம் படபடத்தது.

"நான் என்னப்பா சொல்லப்போறேன்? உங்க வார்த்தையை நான் என்னிக்கும் மீறினதே இல்லையேப்பா...

உங்க மனசுக்குப் பிடிச்சிருந்தா... எனக்கும் சம்மதம் தான் அப்பா''

மகிழ்ச்சி பிடிபடாமல் மனம் மத்தளம் வாசித்தது. சட்டென்று அடுக்களைக்குள் புகுந்தவள்... நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

அன்று மாலையில் செல்வத்திடமிருந்து தனக்கு செல்போனில் அழைப்பு வந்ததும் உடனடியாக சங்கமித்திரையின் வீட்டிற்கு விரைந்தான் முகில்.

'துணிவைத் திரட்டிக் கொண்டு சக்கரவர்த்தியிடம் பெண் கேட்டு விட வேண்டியது தான்' என்று தீர்மானித்துக் கொண்டு சென்றவனுக்கு... பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போலிருந்தது.

''முகில் தம்பி! உங்களை எங்க எல்லாத்துக்கும் ரொம்பவே பிடிச்சுப்போச்சு. நேராவே விஷயத்துக்கு வந்துடறேன்.

எங்க பொண்ணு மித்ராவை உங்களுக்குக் கட்டித் தரணும்னு பிரியப்படறோம். நீங்க என்ன சொல்றீங்க தம்பி? உங்களுக்குன்னு யாருமில்லைன்னு சொன்னீங்க...

அதனால தான்.. இந்த விஷயத்தை உங்க கிட்டேயே நான் பேசறேன். எனக்கு நெஞ்சடைப்பு வந்ததிலிருந்து ஒரு பயம் வந்துடுச்சு.

எனக்குத் தெரிந்த நபர் ஒருத்தருக்கு சமீபத்துல மாரடைப்பு வந்து திடீர்னு இறந்துட்டாரு.. நானிருக்கும் போதே ஒரு நல்லவர் கையில மித்ராவைப் பிடிச்சு கொடுத்துடணும்னு.. பிரியப் படறேன்.. அதான்...!''

''இந்தக் குடும்பத்தையே எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. மித்ராவைக் கட்டிக்கிறது மூலமா... அப்பா அம்மா ஸ்தானத்துல நீங்களும், மச்சான் ஸ்தானத்துல செல்வமும் எனக்குக் கிடைக்கப்போறதை நினைச்சா... ரொம்ப சந்தோஷமா இருக்கு.

எனக்கு பரிபூரண சம்மதம்! இப்படியொரு குடும்பத்துக்கு மருமகனாக... நான் குடுத்து வச்சிருக்கணும்'' சட்டென்று சக்கரவர்த்தியின் பாதங்களைத் தொட்டு வணங்கினான் முகில்.

''நல்லாயிருங்க தம்பி! அப்போ உடனடியா அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை வச்சுக்கலாமா?''

''தாராளமா வச்சுக்கலாம். கல்யாணத்தை எளிமையா கோவில்லே வச்சு நடத்தினா போதும்...


மித்ரா மாதிரி நல்ல குணாதிசயம் கொண்ட பெண்ணை மனைவியா அடையறது நான் செஞ்ச பாக்கியம்!



''எதுக்குங்க உடையாத சத்தியல் வேணும்னு கேட்கிறீங்க?''

''என் மனைவி செஞ்ச மைசூர்பாகை உடைக்கத் தான்!''

-பழ.கவிதா சிவமணி,
புன்செய்ப்புளியம்பட்டி



மித்ரா ஒரு பொக்கிஷம்! எனக்கு அது போதும்... அவளைக் கட்டின புடவையோட அனுப்புங்க... நான் வேற எதையுமே எதிர் பார்க்க மாட்டேன்.

எனக்குன்னு யாருமில்லை. என்னைப் படிக்க வைச்ச ஜமீன்தாரர் ஐயாவும், அம்மாவும் வட நாட்டுக்கு ஆன்மீகச் சுற்றுலா போயிருக்காங்க... எப்போ திரும்பி வருவாங்கன்னு சொல்ல முடியாது.

"அதனால... கல்யாணத்தை உங்க விருப்பப்படியே அடுத்த முகூர்த்தத்துலே வச்சுக்கலாம்..."

"மனசுல இருந்து பெரிய பாரம் இறங்கின மாதிரி இருக்கு தம்பி. எங்க மித்ரா ரொம்ப கொடுத்து வச்சவள்..."

சக்கரவர்த்திக்கு தன் உடல்நிலையைப் பற்றிய பயம்.. அவரை சீக்கிரம் சீக்கிரமாக கண்ணை மூடிக் கொண்டு கல்யாண வேலையில் இறங்க வைத்தது.

கல்யாணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் நன்கு தீர விசாரித்து காரியத்தில் இறங்க வேண்டும் என்ற யோசனை உள்ளுக்குள் உதிக்காமல் போனது... அவரது துரதிர்ஷ்டமே!

கண்மூடித் திறப்பதற்குள் நாட்கள் ஜெட் வேகத்தில் பறந்தன. சுபயோக சுப தினத்தில் மித்ராவுக்கும், முகிலுக்கும் திருமணம் இனிதே நடந்தேறியது.

இஷ்ட தெய்வமான ஆஞ்சநேயர் சன்னதியின் முன்பு... அவள் முகிலின் கழுத்தில் மாலை சூட்டினாள்.

'என் மனதில் இடம் பிடித்தவருக்கு மாலை சூட்டி விடுவேன். நான் வேண்டிய வரத்தை அளித்து... என் வாழ்வை மலரச் செய்து விட்டாய் ஐயனே! உமக்கு கோடான கோடி நன்றி'

சந்தோஷத்தில் அவளது விழிகள் கண்ணீரில் நனைந்தன.

திருமணத்திற்கு முகிலின் சார்பில் தியாகுவும் நான்கைந்து

"தலைவர் ஏன் ரோபோவுக்கெல்லாம் ஓட்டுரிமை இருக்கான்னு கேட்கிறார்?"

"அப்படி இருந்தா அது மாதிரி பல செஞ்சு நாம் ஓட்டு வாங்கிடலாம் இல்ல- அதுக்குத் தான்!"



-பழ.கவிதா சிவமணி,
புன்செய்ப்புளியம்பட்டி



நண்பர்கள் மட்டுமே வருகை தந்திருந்தனர்.

தியாகு தனிமையில் முகிலிடம் புலம்பித் தள்ளினான்.

"கிரி கண்டமனூர் ஜமீன்தாருடைய ஏகபோக வாரிசு நீ! உனக்கு விமரிசையா ஒரு உலகத்தையே திரட்டிக் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஐயாவும் அம்மாவும் மனக்கோட்டை கட்டி வச்சிருக்காங்க...

உன் கல்யாணம் இவ்வோ எளிமையா, அதுவும் அவங்களுக்கு கூடத் தெரியாம நடந்திடுச்சே கிரி! எனக்கு மனசே சரியில்லை. இந்தக் கல்யாணத்துக்கு நான் தானே சாட்சி?

விஷயம் தெரிஞ்சா அவங்க எவ்வோ வருத்தப்படுவாங்க தெரியுமா? அவங்களுக்கு என் மேல தான் கோபம் ஜாஸ்தியா வரும்.

எல்லாத்தையும் விட... எங்கப்பா என்னை உண்டு இல்லைன்னு பண்ணப் போறாரு கிரி! அரண்மனையில ஊரடைக்கப் பந்தல் போட்டு, வச்சு தடபுடலா நடக்க வேண்டிய கல்யாணம்... எஸ்டேட்டுல இந்தச் சின்னக் கோவில்லே வச்சு நடந்திருக்கே?

யாருமே இல்லாத அனாதைன்னு... ஏன் பொய் சொன்னே? எனக்கு மனசே தாங்கலைப்பா...." பரிதாபமாகப் பார்த்தான் தியாகு.

"எத்தனை வாட்டி நான் உனக்கு சொல்லிப் புரிய வைக்கிறது? தியாகு! மித்ராவை நான் விரும்பிட்டேன். அவ இல்லாம என்னால வாழ முடியாது.

அவளை மருமகளா எங்க வீட்டுலே ஏத்துப்பாங்களா? எங்கப்பா ஒருக்காலும் மித்ராவை நான் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு சம்மதிக்கவே மாட்டாரே?

அதனாலதானே இப்படியொரு முடிவுக்கு வந்தேன். விஷயத்தை கேள்விப்பட்டால்... கோபத்துல தாம் தூம்னு அப்பா குதிப்பாரு... கொஞ்ச காலமாச்சுன்னா... கோபமும் கொதிப்பும் தன்னால அடங்கிடும்.

அப்புறமா அவங்களே வலிய வந்து எங்க ரெண்டு பேத்தையும் வற்புறுத்தி வீட்டுக்கு அழைச்சுட்டுப் போயிடுவாங்க... நான் கண்டமனூர் இளைய ஜமீன்தார்னு மித்ராவுக்குத் தெரிஞ்சா கண்டிப்பா அவ மனசுல எனக்கு இடம் குடுத்திருக்கமாட்டா...

என் கிட்ட தன்னோட மனசைப் பறி கொடுத்த விஷயத்தை அவ சொல்லியிருக்கவே மாட்டா.. அப்படியே மூடி மறைச்சிருப்பா தெரியுமா?

வாஸ்தவத்துல... எனக்குன்னு இப்போ யார் இருக்காங்க சொல்லு! பெத்தவங்க கூட நினைவு தெரிஞ்ச நாள்லே இருந்து நான் சேர்ந்து வாழ முடியலை...

அனாதை மாதிரி தானே வாழறேன்? ஆனா... அனாதைங்கிற வார்த்தையை நான் யூஸ் பண்ணலை. எனக்குன்னு யாருமே இல்லைன்னு தான் சொல்லியிருக்கேன்.

பெத்தவங்களோட வாழ்த்து இல்லாம கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அது பெரிய குறை தான்! எனக்கு வேற வழி தெரியல நியாசு!

இப்போ என்னடா? அதான்... நண்பனுக்கு நண்பனா நெருங்கிய உறவுக்காரனா நீ இருக்கியே? உன்னோட ஆத்மார்த்தமான வாழ்த்தும் அன்பும் எங்களை வாழ வைக்கும்.

எல்லாம் கொஞ்சநாளைக்குத் தானே? சீக்கிரமா நிலைமை மாறும். பகிரங்கமா ஜமீன்பங்களாவுலே நானும், மித்ராவும் நிம்மதியா வாழக்கூடிய காலம் வரும்னு... எனக்கு நம்பிக்கை இருக்கு நியாசு''

''சரி இரி! நம்பினோர் கெடுவதில்லை. இது நான்கு மறைத்ீர்ப்பு! உன்னோட நம்பிக்கை வீண் போகக் கூடாது. அது தான் என்னோட பிரார்த்தனையும்...

ஹேப்பி மேரீட் லைப் இரி! நீயும் மித்ராவும் ஒரு குறையும் இல்லாம அமோகமா வாழணும். ஆல் தி பெஸ்ட்'' வாத்சல்யத்துடன் முகிலை அணைத்து, அவனது தோளில் தட்டிக் கொடுத்து விட்டு விடை பெற்றான் நியாசு.




முதலிரவு! மேகவர்ணத்தில் சித்ரா வண்ண பார்டர் போட்ட பட்டுப்புடவையை அணிந்து, தலைநிறைய பூச்சூடி... பால் சொம்பைக் கையிலேந்தி மெட்டி ஒலி சப்திக்க மெல்ல அந்த விஸ்தாரமான அறைக்குள் புகுந்தாள் சங்கமித்திரை.

பூச்சரங்கள் தொங்க விடப்பட்டு அலங்கரிக்கப்பட்ட கட்டிலின் மீது அமர்ந்திருந்த முகில்... இமை கொட்டாமல் மித்ராவையே பார்த்தான்.

நாணத்தால் கால்கள் பின்ன மெல்ல நடந்து வந்து சிறு மேஜையின் மீது பால் சொம்பை வைத்து விட்டு அவனது பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்ட சங்கமித்திரையை வாரித் தூக்கினான் முகில்.

மரியாதை மனசுல இருந்தாப் போதும் மித்ரா! நீ என்னோட மனைவி. என்னில் சரி பாதி... எந்த விதத்திலேயும் நீ எனக்கு குறைந்தவள் கிடையாது சரியா?''

தயக்கமும் வெட்கமுமாய் அவனது விழிகளை ஊடுருவினாள் மித்ரா.

''நீங்க பெண்மைக்கு மதிப்பு தரக்கூடியவர். அதனால தான்



இப்படிப் பேசறீங்க... கேட்கவே சந்தோஷமாத் தானிருக்கு.

ஆனா... கல்யாணமாயிட்டா ஒரு பொண்ணுக்கு கணவர் தானே தெய்வம்? இனிமே எனக்கு சகலமும் நீங்க தானே?

கண் கண்ட தெய்வத்தை வணங்கறதிலே என்ன தப்பு?''

''ஆஹா! கேள்வி கேட்டு என்னை மடக்கிட்டியே? இதுக்கு நான் என்ன பதில் சொல்றது? இந்தக் காலத்துல இப்படியொரு பொண்ணு இருக்காளான்னு ஆச்சரியமா இருக்கு.

படித்தவள். கலா ரசனையும் இலக்கிய ஆர்வமும் கொண்டவள்... மனித நேயமும் கருணை உள்ளமும் உடையவள்.. பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் இருகண்களாகக் கொண்டவள்... அழகே உருவானவள்.. துளி அளவு கூட கர்வப்படத் தெரியாதவள்...

இப்பேர்ப்பட்ட பொண்ணு எனக்கு மனைவியா கிடைச்சிருக்கா ரியலி அயாம் லக்கி!'' சட்டென்று அவனது கன்னத்தில் மிக மென்மையாக தன் இதழ்களால் ஒற்றினாள்.

''நானும் ரொம்ப லக்கி தான்!'' நாசூக்காக மெல்ல விலகி மேஜை மீது வைத்த பால் சொம்பை எடுத்து நீட்டினாள்.

''மித்ரா! புதுமணத்தம்பதிகள் தேனிலவு கொண்டாடறதுக்காக ஊட்டி, கொடைக்கானல் இல்லேன்னா... இந்த மாதிரி எஸ்டேட் மலைப் பிரதேசத்துல இருக்கிற கெஸ்ட் ஹவுஸில் தங்கறதுக்கு பிரயாணப்படுவாங்க...

ஆனா நாம்ப இந்த எஸ்டேட் மலைப்பிரதேசத்துலேயே கல்யாணம் செய்துக்கிட்டு... இங்கேயே வாழ்க்கையைத் தொடங்குகிறோம்.

தேனிலவுக்காக நாம்ப தனியா பிரயாணப் பட வேண்டிய அவசியமே இல்லாம போயிடுச்சு. இல்லையா?'' சொம்பிலிருந்த பாலை, பாதி அருந்தி விட்டு மீதியை அவளிடம் தந்தான்.

மீதிப்பாலைப் பருகி விட்டு நிமிர்ந்த மித்ரா, ''எத்தனையோ வாட்டி தூரத்திலே இருந்து இந்த வெள்ளை நிற பங்களாவைப் பார்த்திருக்கேன்.

இந்த பிரமாண்டமான பங்களாவுல நாம்ப வாழ்க்கையைத் தொடங்கப் போறோம்னு நெனச்சா ரொம்பவே பிரமிப்பா இருக்கு...'' என்றாள் மிரட்சியுடன் சுற்றிலும் பார்த்த படி.

''மிரண்டு போய் பார்க்கிறப்போ... அப்படியே ஒரு பொன்மான் மாதிரியே இருக்கே மித்ரா! ஐ லவ்யூ... இதுக்கே மிரண்டு போனா எப்படி?

கண்டமனூர் ஜமீன் பங்களாவைப் பார்த்தா... நீ மயக்கம் போட்டே விழுந்துடுவே... போலிருக்கே'' பேசியபடியே அவளது மோவாயில் குழி வெட்டினாற் போலிருந்த பள்ளத்தை ஆசையுடன் வருடினான்.

''அவ்ளோ விஸ்தாரமாவா இருக்கும்?'' விழிகளை அகல விரித்தவளின் முகம் சட்டென்று வாடியது.

''எனக்கு என்னமோ தெரியலைங்க... கண்டமனூர் ஜமீன்பங்களாவைப் பத்தி நீங்க பேசினதும், இனம் புரியாத திகிலும் பயமும் உண்டாகுதுங்க....

எனக்கு பணக்காரங்களைப் பார்த்தாலே ஒரு பயம்! பணக்காரங்க கிட்டேயிருந்து பல அடி விலகியே நிக்கணும்னு எங்கப்பா சொல்வாரு..

பணக்காரங்களுக்கு பாம்பு மாதிரி குணமாம். அவங்க கிட்டே பழகறதே ஆபத்து... அதுவும் நம்மைப் போல கஷ்டப்படற குடும்பத்தைச் சேர்ந்தவங்க பணக்காரங்க கிட்டே இருந்து ரொம்ப ஜாக்கிரதையா ஒதுங்கி இருக்கிறது நல்லதுன்னு அப்பா அடிக்கடி சொல்வாரு''

''மைகாட்! இது தப்பான அபிப்பிராயம் மித்ரா! பணக்காரங்கள்லே நல்லவங்களும் இருக்காங்க.. அடிமட்டத்துல இருக்கிறவங்கள்லே கெட்டவங்களும் இருக்காங்க...

யாரோ ஒரு சிலர் கெட்டவங்களா இருக்கிறதைப் பார்த்துட்டு... ஒட்டு மொத்த வர்க்கத்தையே தப்பா எடை போடறது தவறு இல்லையா?

சரி... இப்போ அந்தப் பேச்சு எதுக்கு? உன் முகமே வாடிப்போச்சே? உண்மையான காதல் ஜெயிக்கும்னு நான் சொன்னேனே?

நம்ம காதல் வெற்றியடைஞ்சுடுச்சே... ஐ லவ் யூ ஸோ மச் டார்லிங்!''

''நானும் தான்....'' செக்கர் வானமாய் முகம் சிவந்து தலைகுனிந்தவளின் தாடையைத் தொட்டு நிமிர்த்தினான் முகில்.

''என்னது- மைக்கைப் பிடிச்ச தலைவர் பேசாமல் உட்கார்ந்திருக்கிறார்?''

'''திடீர்னு தலைவரின் மனைவி வந்து முன் வரிசையில் உட்கார்ந்துட்டாங்களே- எப்படி தலைவரால் வாயைத் திறக்க முடியுமாம்?''

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி





''இப்படி அரைகுறையா மொட்டையா சொன்னா... என்ன அர்த்தமாம்?''

''அதே அர்த்தம்னு அர்த்தம்'' முல்லைப் பல் வரிசை தெரிய அவள் சிரித்த போது அவனது அழகு பன்மடங்கானதை கவனித்தான்.

''அதான் என்ன அர்த்தம்னு கேட்கிறேன். முழுசா சொல்ற வரைக்கும் விட மாட்டேனாக்கும்''

''அன்னிக்கே என் மனசுல உள்ளதை சொல்லிட்டேனே? இன்னமும் எத்தனை வாட்டி சொல்றதாம்? சரி.. ஐ லவ் யூ ஸோ மச்'' வெண்டைப் பிஞ்சு போன்ற விரல்களால் தன் அழகு முகத்தை மூடிய படி சட்டென்று அவனுக்கு முதுகு காட்டி நின்றாள்.

''எனக்கு இப்பவே வெண்ணெய் உருண்டைப் பாறைக்குப் போய்... நல்லா காத்தடிக்கிற நேரத்துல அதன் மேல நிக்கணும் போலிருக்கு...''

''இந்த ராத்திரியிலா? ஏன்? எதுக்கு?'' மெல்லத் திரும்பி அப்பாவியாய் அவனை ஏறிட்டாள் மித்ரா.

''ஆமாம் இப்படி விலகி முதுகுகாட்டி நின்னா...? காத்தடிக்கிற நேரத்துல பாறையில ஏறி அன்னிக்கு வந்தியே?


பயத்துல என் கிட்டே ஒண்டிக்கிட்டே... நானும் இறுக்கமா கட்டிண்டேன். அதுக்குத் தான் அங்கே போகணும்னு பிரியப்பட்டேன்'' சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டு அவன் பேசியதும் கலீர் என்று சிரித்து விட்டாள் சங்கமித்திரை.

''இரு... இரு... நீ இப்படி விலகி நின்னு வேடிக்கை காட்டறியே? உனக்கு நான் கூடிய விரைவில் ஒரு அதிர்ச்சி தரப்போறேன் பாரு. நீ அப்படியே அதிர்ந்து போகப் போறே''

''தாராளமா கொடுங்களேன். அது இன்ப அதிர்ச்சிதான்னு எனக்குத் தெரியுமே?

போதும் முகில்! நீங்க முகத்தை சோகமா வச்சுக்காதீங்க. ப்ளீஸ்! ஐ லவ் யூ ஸோ மச்... போதுமா?'' கள்ளங்கபடமின்றி சிரித்தவளின் தளிர்க்கரங்கள் இரண்டும் அவன் கழுத்தில் மாலையாயின.

மிகப்பெரிய அதிர்ச்சி அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அவளது வாழ்வை சூனியமாக்கி... அவளை கண்ணீர்க் கடலில் தள்ளி விட தருணம் பார்த்துக் கொண்டிருந்தது.




ஒரு மாதம் ஓடி மறைந்தது.

முகிலுக்கு வர வர மனசாட்சி அறுத்தது.

''தியாகு! கண்டமனூருக்குப் போயி அப்பா அம்மா கிட்டே.. நடந்த

உண்மையை சொல்லிடப் போறேன். சொன்னா... புயல் வீசத்தான் செய்யும்.

அதுக்கு அப்புறம் கண்டிப்பா மித்ராவை அழைச்சுட்டு வரச் சொல்லுவாங்க... நம்ம ஜமீன் பங்களாவுலே மித்ரா விளக்கேத்தணும்.

மித்ரா பாசமழை பொழிஞ்சு பெரியவங்க மனசைக் குளிரப்படுத்திடுவான்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. வா! உடனே கிளம்ப வேண்டியது தான்''

'' நீ எடுத்த முடிவு சரி தான் கிரி'' தியாகுவுக்கு பூரண திருப்தி!

மித்ராவிடம், கண்டமனூர் ஜமீன்தாரர் சுற்றுலா முடித்து விட்டு வந்து விட்டதாகவும்... தான் முதலில் போய் பார்த்து விஷயத்தைச் சொல்லி... அதன் பின்பு மித்ராவை அழைத்துச் செல்வதாகவும் வாக்களித்து விட்டுக் கிளம்பினான் முகில்.

''வர்றதுக்கு எப்படியும் ஒரு வாரத்துக்கு மேலே கூட ஆகலாம். முன்னே பின்னே ஆனாலும் வேலையை முடிச்சுட்டு வந்துடுவேன். பயப்படாம இருக்கணும் சரியா? தினமும் போன் பண்ணிடறேன். ஓகே வா?''

அன்பு மனைவியின் கன்னத்தில் செல்லமாய் தட்டி விட்டு ஜீப்பில் ஏறி அமர்ந்தான்.

''எவ்ளோ சீக்கிரம் முடியுமோ... அவ்ளோ சீக்கிரம் வந்துடுங்க'' மெல்லக் கையை அசைத்தாள் மித்ரா.

முதல் மூன்று நாட்கள் அவனிடமிருந்து போன் வந்து கொண்டிருந்தது.

அதன் பின்பு எந்தத் தகவலும் இல்லை. இவள் போன் செய்து செய்து ஓய்ந்து போனாள்.

'ஸ்விட்ச் ஆப்' என்ற அறிவிப்பு தான் திரும்ப திரும்ப வந்து கழுத்தை அறுத்தது.

'என்னவாக இருக்கும்? ஏதாக இருக்கும்?' என்ற கவலையில் துடித்துப் போனாள் மித்ரா.

வெள்ளை நிற பங்களாவில் தனியாக தங்கியிருக்க பயந்து கொண்டு அம்மா வீட்டிற்கு வந்திருந்தாள்.

நாட்கள் நகர நகர இவளது கவலையும் சோகமும் பெரியவர்களை வாட்டியெடுத்தன.

''என்னம்மா இது? மாப்பிள்ளை போய் கிட்டத்தட்ட மூணு வாரம் ஆகப் போகுது.. ஒரு தகவலும் இல்லையே?''

''ஜமீன்தாரர் மிகப்பெரிய பொறுப்பு அவருக்கு கொடுத்திருக்காரே அப்பா? ஜமீனுக்கு சொந்தமான மத்த எஸ்டேட்டுகள் நிறுவனங்கள் எல்லாத்தையும் இவர் தானே கவனிக்கணும்?

வேலை மும்முரத்துல அப்படியே இருக்கிறாரோ என்னவோ?



ஆனா எப்படியும் சீக்கிரமா வந்துருவாருப்பா...'' சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு அழுகை பொங்கி வந்தது.

''சில ஆம்பிளைங்க அப்படித்தான்... வேலை மும்முரத்துல வீட்டு ஞாபகமே வராது...'' மெல்ல முணுமுணுத்தாள் அம்மா தங்கம்.

''ஊகூம்! மித்ரா! உன் முகமே பார்க்க சகிக்கலைம்மா... சதா கவலைப்பட்டு களையிழந்து போச்சு. வா... ஒரு நடை கண்டமனூர் வரைக்கும் போயி பார்த்துட்டு வந்துடலாம்.

அப்படியே நேத்தைக்கு உனக்கு தேனியில பெரிய கம்பெனியிலிருந்து வேலைக்குச் சேரச் சொல்லி அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் வந்ததே?

அதையும் எடுத்துட்டு வா! பெரிய கம்பெனியில பெரிய பதவியில சேரச் சொல்லி வந்திருக்கு.. உன்னோட திறமைக்கு கிடைச்ச அங்கீகாரம் அது!

அதைப் பார்த்துக் கூட நீ சந்தோஷப்படலை. இதுக்காக முன்னே நீ எவ்ளோ ஆசையா காத்திருந்தே? மாப்பிள்ளையைப் பத்தின கவலை உன்னை வாட்டுது இல்லையா?''

''ஆமா அப்பா! அவருகிட்டேயிருந்து ஒரு போன் வந்தாக் கூட நிம்மதியாயிடும். இந்த அப்பாயின்ட்மெண்ட் ஆர்டரை அவருகிட்டே காட்டணும்.

அவர் என்ன முடிவு எடுக்கிறாரோ? அதன்படி தானேப்பா நான் நடக்கணும். இந்த வேலைக்கு அனுப்ப அவர் சம்மதிக்க மாட்டாருன்னு தான்... எனக்குத் தோணுது''

முகிலை நேரில் காணப் போகிறோம் என்றதும் அவளது முகம் பூவாய் மலர்ந்தது.

''கிளம்பு சீக்கிரம்! நேரமாகுதுல்ல?'' துண்டை உதறித் தோளில் போட்டபடி அப்பா அதட்டினார்.

''இதோ.... ஒரே நிமிஷத்துல வந்துடறேன் அப்பா'' அவசரமாய் உள்ளே விரைந்தாள்.

## 12

கண்டமனூர் ஜமீன் மாளிகையைப் பார்த்த போது பயம் கலந்த பிரமிப்பு தான் ஏற்பட்டது.

''ஜமீன்தாரர் ஐயாவைப் பார்க்கணும்'' இவர்களை ஏற இறங்கப் பார்த்து விட்டு வேலையாள் உள்ளே விரைந்தான்.

பத்து நிமிடங்கள் பொறுத்து நிதானமாக வாசலுக்கு வந்து ''ஐயா.. உங்களை உள்ளே வரச் சொன்னாங்க'' என்றான்.

பிரமாண்டமான ஹாலில் கம்பீரமாய் அமர்ந்திருந்தார் ராஜமார்த்தாண்டம்.

இருவரும் வணக்கம் தெரிவித்த போது... அலட்சியமாய் ஏறிட்டார்.

அதே நேரத்தில் மாடிப்படியிலிருந்து வேகமாய் இறங்கி வந்த தியாகு இவர்களைக் கண்டதும்... சட்டென்று வெலவெலத்துப்போய் நின்று விட்டான்.

''அட... தியாகு தம்பி? என்ன தம்பி இது? மாப்பிள்ளை கிட்டேயிருந்து போனும் வரலை... எந்தத்தகவலும் தெரியல...

ஒரு வாரத்துல வரேன்னு சொன்னவரு... மூணு வாரமாகப் போகுது... மித்ரா சதா கவலைப்பட்டு அழுதுக்கிட்டே இருந்தா... அதான் ஒரு நடை நேரில் பார்த்து விசாரிச்சுட்டுப் போகலாம்னு வந்தோம்..'' படபடத்தார் சக்கரவர்த்தி.

தியாகு பதிலொன்றும் பேசாமல்... ராஜமார்த்தாண்டத்தை பயத்துடன் வெறித்தான்.

''யார் நீங்க? என்ன வேணும்? யாரைப் பார்க்க வந்தீங்க?''

''ஐயா! முகில் தம்பிக்குத் தான் எங்க பொண்ணைக் குடுத்தோம். மாப்பிள்ளையை நீங்க தான் படிக்க வச்சீங்கன்னு கேள்விப் பட்டோம். நன்றிங்க ஐயா!

மூணு வாரமா மாப்பிள்ளைகிட்டேயிருந்து எந்தத் தகவலும் இல்ல.... அதான் பதறிப் போய் வந்தோம். இவ என் பொண்ணு மித்ரா! முகில் தம்பியோட சம்சாரம் இவதான்... புருஷனைப் பிரிஞ்சு சதா அழுது சோகமா இருக்குதுங்க ஐயா... அதனால தான் கையோட கூட்டியாந்துட்டேன்'' சக்கரவர்த்தி பவ்யமாகப் பேசினார்.

''முகிலை நான் படிக்க வைச்சேன்னு கேள்விப்பட்டீங்களா? நல்ல கதையா இருக்கே? முகிலை யாருன்னு நெனச்சீங்க? அவன் என்னோட பிள்ளை.. இந்த ஜமீனுக்கு ஏகபோக வாரிசா! முகில் கிரி

''மன்னர் மாதிரியே டூப்ளிகேட் ஒருவரை மன்னர் வளர்க்கிறாரே ஏன்?''

''தப்பி ஓடும்போது எதிரி மன்னரைக் குழப்ப ரெண்டு மன்னர்கள் ஓடுவது மாதிரி கன்பியூஸ் பண்ணுவதற்காகத்தான்!''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி





தரன் உங்க வீட்டு மாப்பிள்ளையா? யாருகிட்டே கதை விடறீங்க? பணக்கார வீட்டுப்பிள்ளை... அதுவும் ஒரே வாரிசு இருந்தால் போதுமே? பணத்துக்கு ஆசைப்பட்டு பொண்ணைக் காட்டி வலை வீசப் போட கிளம்பி வந்துடுவீங்களோ? இப்படி வந்து பேசறதுக்கு வெட்கமா இல்லை? போ! வெளியில... நான் நெனச்சா போலீஸ்ல புகார் குடுத்து உன்னோட ஒட்டுமொத்தக் குடும்பத்தையும் உள்ளே தள்ளிடுவேன்...''

''ஐயோ கடவுளே! என்னய்யா சொல்றீங்க? முகில் உங்க மகனா? இந்த விவரத்தை எல்லாம் உங்க மகன் எங்ககிட்டே மறைச்ச மோசம் பண்ணிட்டாரே? ஆனா... என் பொண்ணை அவருக்கு நாங்க கட்டிக் கொடுத்தது சத்தியம் ஐயா! இதோ... இந்தத் தம்பி கூட கல்யாணத்துக்கு வந்து வாழ்த்துச்சே? கேட்டுப் பாருங்க தியாகு தம்பி! சொல்லுங்க... நடந்த உண்மையைச் சொல்லுங்க... எங்க மேல இவரு அபாண்டம் சுமத்துறாரே...?'' கதறினார் சக்கரவர்த்தி.

முகத்தில் எந்தவித உணர்ச்சிகளுமின்றி... கல் சிலையாய் நின்றிருந்தான் தியாகு.

சங்கமித்திரைக்கு தலையில் இடியே இறங்கினாற் போலிருந்தது.

'ஐயோ' எப்பேர்ப்பட்ட மோசடி இது? முகில் இந்த ஜமீன்தாரின் மகனா? ஏன் அதை எங்களிடம் மறைத்தார்? ஆத்மார்த்தமாக என்னைக் காதலிப்பதாக சொன்னாரே? நீ கிடைக்காவிட்டால் என் உயிரை மாய்க்கக் கூட நான் தயங்கமாட்டேன்' என்று முகில் கூறினாரே?

'எனக்குன்னு யாருமே இல்லை. நீ கிடைத்தால் போதும். உனக்காக நான் எதையும் துறக்கத் தயார்' என்றாரே? அடிக்கடி வீட்டிற்கு வந்து கண்ணியமாகப் பணிவாகப் பேசி நடந்து கொண்டு... பெரியவர்களின் மனதைக் கவர்ந்தாரே?

'என் உயிருக்கும் மேலாக உன்னை நேசிக்கிறேன்' என்றாரே? அவ்வாறு சொல்லும் போது... அந்த விழிகளில் கள்ளம் கபடம் தெரிந்ததே இல்லையே? இவ்வளவு பெரிய ஜமீனுக்கு முகில் தான் வாரிசா? அதை ஏன் மறைக்க வேண்டும்? பெற்றவர்கள் உயிருடன் இருக்கும் போது. 'எனக்குன்னு யாருமே இல்லை' என்று ஏன் கூற வேண்டும்? முகில் ஒரு பணக்காரர் என்று தெரிந்தால்... நான் பயந்து விலகி விடுவேன் என்று நினைத்து தான் பொய் சொல்லியிருக்கிறார் போலும். பொய் சொல்லி ஏமாற்றிக் கைப்பிடித்து விட்டார். இப்போது மூன்று வாரங்களாகப் பாராமுகமாய் இருப்பதைப் பார்த்தால்... என்னைக் கை கழுவி விட்டாரோ?

அப்படியென்றால்.... கதைகளிலும் திரைப்படங்களிலும் வருவதைப் போல்... பணக்கார இளைஞன், ஏழை அபலைப் பெண்ணை ஏமாற்றி வலையில் விழ வைத்து... கடைசியில் கைவிட்டு வஞ்சித்து விடுவானே? அதே போல்... முகிலும் என்னை வஞ்சித்து விட்டாரா?

இல்லையில்லை... என்னை முகில் உயிருக்கு உயிராக நேசித்தார். நானும் நேசித்தேன். இது உண்மையான காதல் தான்! ஒன்று சேர்ந்த அன்பு மாறவே மாறாது. என் முகில் மனிதநேயம் மிக்கவர். கருணை உள்ளம் படைத்தவர். சத்தியமாய் எனக்கு அவர் துரோகம் இழைக்க வே மாட்டார். இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது. சதி நடந்திருக்கிறது.

என் முகில் நல்லவர் உத்தமர். என்னை ஒருக்காலும் கைவிடவே மாட்டார். எங்களைப் பிரிக்க சதி செய்கிறார்கள். அவரைப் பார்க்காமல்... அவரிடம் பேசாமல் இங்கிருந்து நான் போகக்கூடாது. இப்படி அபாண்டம் சுமத்தி கேவலமாகப் பேசிவிட்டார்களே? அவர் இதைக் கேள்விப்பட்டால்.... நிச்சயமாகத் தாங்க மாட்டார். அவரைப் பார்த்து விட வேண்டும். ஆபத்பாந்தவனாக அவர் இங்கு வர வேண்டுமே?''

பயத்திலும் அவமானத்திலும் சங்கமித்திரை தொப்பலாக வியர்த்துப் போனாள். உடம்பெங்கும் உதறல் எடுத்தது. கைகள் இரண்டும் பனிக்கட்டியாய் சில்லிட்டன. புயல் காற்றில் சிக்குண்ட பூவிதழ்களாய்... கை விரல்கள் நடுங்கின.

நடுங்கிய விரல்களால்... கை கூப்பி தியாகுவை வணங்கினாள்.

''தியாகு அண்ணா! எவ்ளோ பெரிய அபாண்டத்தை சுமத்தறாங்க.... பார்த்தீங்களா அண்ணா! எல்லாத்தையும் கேட்டுக்கிட்டு வேடிக்கை பார்த்துட்டு நிக்கிறீங்களே? எஸ்டேட்டுல ஆஞ்சநேயர் சன்னதிக்கு முன்பு.. அவர் என் கழுத்துல தாலி கட்டினாரே? அட்சதை தூவி நீங்க ஆசீர்வாதம் பண்ணினீங்களே? மறந்துட்டீங்களா? சொல்லுங்க அண்ணா! நான் முகிலோட மனைவின்னு... எடுத்துச் சொல்லுங்க... கல்யாணத்தை கண்ணால பார்த்த சாட்சி நீங்கதானே? உங்க மனசு கல்லாயிடுச்சா? பேசுங்க அண்ணா! ஏன் மவுனமா இருந்து எங்க மனசுல நெருப்பை அள்ளிக் கொட்டறீங்க? உங்க பிரண்ட் எங்கே? தயவு செய்து அவரைக் கூப்பிடுங்க... நீங்க எதுவும் சொல்லாட்டியும் பரவாயில்லை... அவரைக் கூப்பிடுங்க.. அவரைப் பார்த்துட்டா.. இந்தப் பிரச்சினை தீர்ந்திடும் அண்ணா!'' முகத்தில் அறைந்து கொண்டு கதறி அழுதாள் சங்கமித்திரை.

''தியாகு! உனக்கு ஆயிரம் வேலைங்க இருக்கு. இங்க நின்னு நேரத்தை வீணாக்காதே.. கிளம்பு! இவங்களை நான் 'டீல்' பண்ணிக்கிறேன் போ'' ராஜமார்த்தாண்டம் கோபமாய் உறுமியதும்.. வேறு வழியின்றி சங்கமித்திரையை பரிதாபமாய் பார்த்தபடியே வெளியேறினான் தியாகு.

ராஜமார்த்தாண்டம் சங்கமித்திரையை உறுத்துப் பார்த்தார். ''இந்த நாட்டிய நாடகமெல்லாம் இங்க வேணாம். உன்னோட மாய்மாலத்தை வேற எங்கேயாச்சும் வச்சுக்க... இப்போ என்ன சொல்ல வர்றே? என் புள்ளையை நீ பார்க்கணும். அவ்ளோ தானே? கூட்



டிட்டு வர்றேன். தாராளமா பாரு! அவன் உன்னைப் பார்த்துட்டு... என்ன தான் சொல்றான்னு.. நானும் பார்க்கிறேன். அவன் உன்னை தன்னோட மனைவின்னு ஒத்துக்கிட்டா.. நான் இந்த ஜமீன் பங்களாவுலே, விளக்கேத்தற உரிமையை உனக்குத் தர்றேன். ஊரறிய மருமகளா ஏத்துக்கிடறேன். ஒரு வேளை, என்னோட மகன்.. உன்னைத் தன்னோட மனைவின்னு ஒத்துக்கிடலைன்னா... மறுகணமே நீங்க ரெண்டு பேரும் வெளிநடப்பு செய்யணும். மறுத்தா.. நான் போலீசுக்கு கம்ப்ளைன்ட் பண்ணுவேன். 'பிராத்தல் கேஸ்' வீடு தேடி வந்து பணத்துக்காக என் மகனைக்குறிவச்சு... கண்டதையும் பேசி கலாட்டா பண்றான்னு... நான் சொல்லுவேன். காலத்துக்கும் நீ ஜெயில்லே கிடக்கும்படி பண்ணிடுவேன். பார்த்தா படிச்ச பொண்ணாட்டம் தெரியுது. பெரியமலையோட மோத நினைச்சா.... உன் மண்டை தான் உடையும். புத்திசாலித்தனமா பிழைக்கிற வழியைப் பாரு.. புரிஞ்சுதா? ஜாக்கிரதை''

சுட்டுவிரலை நீட்டி எச்சரித்து விட்டு நிதானமாக மாடியேறிச் சென்றார் ராஜமார்த்தாண்டம். தன்னை யாரோ பலவந்தமாக நெருப்பு ஆற்றில் தள்ளி விட்டதைப் போன்று... அவமானத்தில் துடிதுடித்துப் போனாள் சங்கமித்திரை. தீப்பிடித்துக் கொண்டாற்போல்..... உடம்பும் மனமும் திகுதிகுவென்று எரிந்தன. கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்தது. நெஞ்சம் பதைக்க.. மனம் குமுற... திகிலுடன் மகளையே பார்த்தார் சக்கரவர்த்தி.

பத்து நிமிடங்களில் முகில் கிரிதரன் மாடியிலிருந்து இறங்கி வந்தான். அவனது வலது நெற்றியில் பெரிய பிளாஸ்திரி போடப்பட்டு இருந்தது.

''முகில்! எ... என்னாச்சு? எப்படி காயம் பட்டது? எனக்குத் தெரியும். உங்களுக்கு ஏதோ ஆகியிருக்கு.. அதனால தான் என்னைப் பார்க்க வரலையா?'' தேம்பியபடி அவனருகில் சென்றாள் மித்ரா.

''யார் நீங்க? எதுக்காக இப்படி அழுதுட்டிருக்கீங்க?'' மித்ராவைப் புதிதாய் பார்ப்பவனைப் போல் பார்த்துவிட்டு... ஒன்றும் புரியாதவனைப் போல் சக்கரவர்த்தியை ஏறிட்டான். சங்கமித்திரைக்கு இந்த உலகமே தட்டாமாலையாகச் சுழல்வது போலிருந்தது. காலடியில் தரை தடாலென்று நகர்ந்து செல்வதைப் போன்றிருந்தது.




விழிகளில் நீர்த்திரையிட்டு... பார்வையை மறைத்தது. திகிலிலும் அவமானத்திலும் நாக்கு மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டது.

புறங்கையால் விழிகளை அழுந்தத் துடைத்துவிட்டு முகிலை ஊன்றிப் பார்த்தாள் சங்கமித்திரை.

''இது முகில் தானா? என் முகிலா... இப்படியொரு கேள்வியைக் கேட்டு விட்டார்? இது கனவா? இல்லை நிஜம் தானா?

ஒருவேளை... நடப்பதெல்லாம் ஒரு கெட்ட கனவாக இருக்கக் கூடாதா?

முகிலிடமிருந்து இப்படியொரு கேள்வி வரும் என்று நான் கனவிலும் கருதவில்லையே? முகிலின் பின்னால் வந்து நிற்கும் ஜமீன்தாரர்.. என்னை இளக்காரமாகப் பார்க்கிறாரே?

மோசமான பெண் என்று கேவலமாய் வெறுப்பாய் நோக்குகிறாரே?

இந்த அவமானத்திற்கு பதிலாக... பூமி இரண்டாகப் பிளந்து அப்படியே என்னை விழுங்கி விடக்கூடாதா? என்று மனம் பரிதவிக்கிறதே? கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. பொங்கி வந்த விசும்பலை அடக்கியபடி.. மீண்டும் முகிலை ஊன்றிப் பார்த்தாள். உலர்ந்த உதட்டை நாவால் ஈரப்படுத்தியபடி.. கையெடுத்து கும்பிட்டாள்.

''முகில்! வி.. விளையாடாதீங்க முகில்! கல்யாணத்தன்னிக்கு நீங்க சொன்னது எனக்கு ஞாபகமிருக்கு. உனக்கு மிகப்பெரிய அதிர்ச்சி தர்றேன் பாரேன்னு சொன்னீங்களே? வேணாம் முகில்! இப்படியொரு அதிர்ச்சியை என்னால தாங்க முடியலை முகில்! கஷ்டப்பட்ட குடும்பமா இருந்தாலும்... மான அவமானத்துக்கு அஞ்சி கவுரவமா கண்ணியமா வாழ்ந்தவங்க நாங்க.... எ... எங்கப்பா நெஞ்சு வலிக்காரர்னு உங்களுக்கே தெரியுமே? அவரால இதைத் தாங்க முடியாது முகில்! விளையாடாம சொல்லுங்க முகில்! உங்கப்பா எனக்கு விபச்சாரி பட்டம் கட்டறாரு முகில்! இவ்ளோ நேரம் நான் உயிரோட இருக்கிறது.... எனக்கே ஆச்சரியமா இருக்கு. நமக்கு ஆஞ்சநேயர் சன்னதியில நடந்த கல்யாணத்தைப் பத்தி... அவரு கிட்ட சொல்லுங்க.

''மித்ரா தான் என் மனைவின்னு சத்தமா சொல்லுங்க 'உயிருக்கு உயிரா இவளை நேசிச்சேன்னு.. உங்கப்பாகிட்டே சொல்லுங்க முகில்'' தழுதழுத்த குரலில் கெஞ்சினாள். ''யார் நீங்க? நீங்க யாருன்னே எனக்குத் தெரியல... யாரு? என்னன்னு கேட்டுட்டிருக்கேன். என்னென்னவோ சொல்றீங்களே? முன்னே பின்னே தெரியாதவங்ககிட்டே நான் ஏங்க விளையாடணும்? ஏதேதோ பேசறீங்க... கல்யாணம் நடந்ததுன்னு சொல்றீங்க? எனக்கு தலையும் புரியலை வாலும் புரியலை... உங்களையும் இதோ நிக்கிறாரே இந்தப் பெரியவரையும்... இன்னிக்குத் தான் நான் முதல் முறையா பார்க்கிறேன். எனக்கு ஒண்ணுமே புரியலை...''

''முகில்! கடைசியில பணக்கார புத்தியைக் காட்டிட்டீங்களா? ஆஞ்சநேயர் சன்னதியில நடந்த கல்யாணத்தை மறந்துட்டீங்களா?



என்னை நேசிச்சதையும் மறந்துட்டீங்களா? வேணாம் முகில்! நெஞ்சுல நெருப்பை அள்ளிக் கொட்டாதீங்க. இந்த பாவம் உங்களை சும்மா விடாது. மித்ரா! நீ இல்லாம என்னால வாழவே முடியாதுன்னு சொன்னீங்களே? இப்போ என்னைப் பார்த்து 'நீ யாரு'ன்னு கேட்கறீங்களே? இப்படியொரு கேள்வியைக் கேட்கிறதுக்கு பதிலா..... நீங்க என் இதயத்துல கத்தியால குத்தியிருக்கலாம். குத்தீட்டியால நெஞ்சுல சொருகி இழுத்தாப்பல... வலியில துடிக்க வைக்கிறீங்களே முகில்?

நீங்க பணக்காரர்... என் கூட வாழ விருப்பமில்லாட்டி பரவாயில்லை... நானே ஒதுங்கிப் போயிடறேன். என்னோட உரிமையை நிலைநாட்ட நான் போராடவே மாட்டேன். உங்க வாழ்க்கையிலே இருந்தே விலகிப் போயிடறேன்.

ஆனா.. உங்கப்பா முன்னாடி ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்க முகில்! 'மித்ராவை நான் கல்யாணம் செய்துக்கிட்டது உண்மை... அவ என் மனைவி தான்னு மட்டும் நீங்க சொன்னாப் போதும்... எனக்கு வேற எதுவும் வேணாம். நாங்க ஏழைங்க தான்... ஆனா மானத்தோட வாழுறவங்க உங்கப்பா என் நடத்தையில் களங்கம் சுமத்திப் பேசிட்டாரு. அதை என்னால தாங்கவே முடியலை. நீங்க அவருக்கு மகனா மட்டும் இருங்க... என்னால எந்தவிதமான இடைஞ்சலும் உங்களுக்கு இருக்காது. நீங்க சொல்லப் போற பதில் தான்... என்னை உத்தமி களங்கம் இல்லாதவன்னு நிரூபிக்க வைக்கும். எனக்கு அது ஒண்ணு போதும் முகில்!... சொல்லுங்க தயவு செய்து உண்மையைச் சொல்லுங்க.. ப்ளீஸ்!'' கதறினாள் சங்கமித்திரை.

''நீங்க எத்தனை வாட்டி கேட்டாலும் என் பதில் இது தான். நீங்க யாருன்னே எனக்குத் தெரியல... அதோ பாருங்க சுவத்துல ஆளுயரத்துல ஒரு படம்... சந்தனமாலை சாத்தப்பட்டிருக்கே... அதுல இருக்கிற சிறுமி வெண்ணிலா... எங்க அக்கா தான். நாலு வயசுல எதிர்பா

''புலவரே உமது பாட்டில் பிழை உள்ளது புலவரே?''

''மன்னிக்கவும் மன்னா வழக்கம் போல் நீங்கள் 'மப்'பில் இருப்பீர்கள் என்று கருதி விட்டேன் மன்னா!''

-எம்.அசோக்ராஜா.
அரவக்குறிச்சிப்பட்டி



நாம இறந்துட்டா. இந்த ஜமீன் பங்களாவைப் பொறுத்தவரை... இவ தான் பெண் தெய்வம். எங்கப்பாவும், அம்மாவும் குல தெய்வத்தை வணங்குறாங்களோ இல்லையோ... இவளைத் தான் தெய்வமா நினைச்சு கும்பிடறாங்க... அந்த தெய்வத்து மேல ஆணையிட்டு சொல்றேன். உங்களையும் இந்த பெரியவரையும் இப்போதான் பார்க்கிறேன். உங்களைப் பத்தி எதுவும், எனக்கு தெரியாது. இது சத்தியம்''

''அடப் பாவிங்களா? நீங்க நல்லாயிருப்பீங்களா? என் பொண்ணோட வாழ்க்கையில விளையாடிட்டீங்களே? எங்க வயித்தெரிச்சல் உங்களை சும்மா விடாது'' தலையில் அடித்துக் கொண்டு கதறினார் சக்கரவர்த்தி.

''அப்பா வேணாம்! இனிமே இங்க நாம நிக்க வேணாம். முகிலை மனிதநேயம் மிக்கவர்... கருணை உள்ளம் படைச்சவர்னு.. நாம நம்பி ஏமாந்துட்டோம். மனிதாபிமானம் கொஞ்சம் கூட இல்லாத இந்த வீட்டுல... நாம நிக்கவே கூடாது. வாங்க போகலாம்'' தந்தையின் கரத்தைப் பிடித்து இழுத்தாள்.

''போகலாம் மித்ரா! ஊருக்குப் போய் சில பெரிய மனுஷங்களைக் கூட்டிட்டு வந்து நியாயம் கேட்கலாம். கல்யாணத்துக்கு வந்து ஆசீர்வாதம் பண்ணினவங்க... இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டா... கொதிக்கப் போறாங்க. இவங்க ரெண்டு பேரும் அவங்களுக்கும், என்ன பதில் சொல்றாங்கன்னு பார்ப்போம்...''

''தேவையில்லைப்பா... இவங்ககிட்டே பணம் செல்வாக்கு இருக்கு... அதை வச்சு இவங்க நம்மளை என்ன வேணும்னாலும் பண்ணுவாங்க... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஜமீன்தாரர் மிரட்டினாரே? மறந்துட்டீங்களா? எதுவும் தேவையில்ல அப்பா! விட்டிருங்க... ஏழைச் சொல் அம்பலம் ஏறாதும்மான்னு நீங்க அடிக்கடி சொல்வீங்களே? ஆஞ்சநேயர் சன்னதிக்கு முன்னால நடந்த கல்யாணம்.... பகவான் இருக்காருப்பா... அவரு நியாயம் கேட்பாரு. நாம மவுனமா வெளியேறிடலாம். கடைசியா இந்த ஜமீன்தாருக்கு ஒன்னு சொல்லிக்க விரும்பறேன்.

உங்க பிள்ளை பெண் தெய்வத்தின் மேல் பொய் சத்தியம் பண்ணினாரு! அதே பெண் தெய்வம்... என்னிக்காவது ஒரு நாள் நான் களங்கமில்லாதவள், உத்தமின்னு உங்களுக்கு எடுத்துச் சொல்லும். உங்களுக்குத் தக்க தண்டனையையும் தரும். உண்மையைக் குழி தோண்டி நீங்க புதைச்சுட்டீங்க உண்மைக்கு சக்தி உண்டு. என்னிக்காவது ஒரு நாள் வெடிச்சுக்கிட்டு வெளியில வரும். அப்போ உங்க மனசாட்சியே உங்களைக் கொன்னுடும். பெண்பாவம் பொல்லாதது. அது இந்த ஜென்மத்துக்கு மட்டுமல்ல... ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் பின் தொடர்ந்து வந்தே தீரும்.... அப்பா! வாங்க போகலாம்'' சக்கரவர்த்தியின் கையைப் பிடித்துக் கொண்டு வெளியேறினாள் சங்கமித்திரை.



## 14

உடம்பிலிருந்த ஜீவன் வெளியேறி விட்டதைப் போலவும், உடம்பே தக்கையாகிப் போனது போலவும் இருந்தது.

எப்படி பஸ் ஏறினோம்? எப்படி வீடு வந்து சேர்ந்தோம் என்பதே தெரியவில்லை.

வீட்டிற்குள் நுழைந்ததுமே கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. வீடே கிர்ரென்று சுழல்வது போலிருந்தது.

வயிறு புரட்டிப் புரட்டி எடுத்ததில் குமட்டிக் கொண்டு வந்தது. கம்பி போட்ட முற்றத்தில் நின்றிருந்த சங்கமித்திரை குபீரென்று வாந்தி எடுத்தாள். கண்கள் சொருக மயங்கிச் சரிந்தாள்.

''சளப்.. சளப்'' என்று சொம்பு நிறைய தண்ணீர் கொண்டு வந்து அவளது முகத்தில் தெளித்தாள் தங்கம்.

''அம்மாடி மித்ரா! என்னடா பண்ணுது?'' பதறினார்.

''தங்கமான மாப்பிள்ளைன்னு ஒருத்தனை நம்பி... அவன் கையில பொண்ணைப் புடிச்சுக் குடுத்தோமே? அவன் நம்மையெல்லாம் மோசம் பண்ணிட்டான். அவனும் அவனோட அப்பனும் சேர்ந்து தலையில கல்லைத் தூக்கிப் போட்டுட்டாங்க தங்கம்'' சோகத்தில் வெடித்தார் சக்கரவர்த்தி.

''அப்பா! தயவு செய்து எதையும் பேச வேணாம். எனக்கு உடம்பெல்லாம் கிடுகிடுவென்னு மறுபடியும் நடுங்குது. என் முன்னாடி எதையுமே சொல்லாதீங்கப்பா... நம்ம விதி! என் தலையெழுத்து ஏமாந்துட்டோம். இனி ஆக வேண்டியதைப் பார்ப்போம்.

இப்படியொரு கதிக்கு ஆளாயிட்டோமே? நம்ம வாழ்க்கையே முடிஞ்சு போச்சுன்னு... நெனச்சுப் பதறினேன். கடவுள் ஒரு கதவை மூடினா... இன்னொரு கதவைத் திறப்பாருன்னு சொல்வாங்க... இப்படியெல்லாம் ஆகும்னு தெரிஞ்சோ என்னவோ.... ஏற்கனவே என்னோட திறமைக்கு ஒரு நல்ல வேலை தேடி வந்திருக்கு. முகிலை நான் மலை போல நம்பியிருந்தேன். அந்த வேலையைக் கூட துச்சமா நெனச்சிருந்தேன். எவ்வளவு பெரிய முட்டாள் தனம் அது? நாளை மறுநாள் வேலையில ஜாயின் பண்ணனும் அப்பா! பெரிய பதவிங்கிறதால எனக்கு தங்கறதுக்கு குவார்ட்டர்ஸ் தருவாங்கன்னும் போட்டிருக்குப்பா...

நான் கிளம்பறதுக்கான ஏற்பாடுகளைப் பண்ணனும். அந்த ஜமீன்தாரர் என்னவெல்லாம் பேசினாரு? முகில், நம்மை நம்ப வச்சுக் கழுத்தை அறுத்தாரே? என் வாழ்வு இதோட அஸ்தமனமாகலை அப்பா! நான் சொந்தக் கால்லே நின்னு வாழ்ந்து காட்டப்போறேன். நீங்க தைரியமா இருங்க... அம்மா! எனக்கு ஒன்னுமே இல்

லைம்மா... கவலை, அதிர்ச்சி, ஏமாற்றம் எல்லாமா சேர்ந்து.. .என்னைத் தடுமாற வக்கடுக்க அவ்வளவு தான். முகில்னு ஒருத்தர் என் வாழ்க்கையில வந்து போனதையே நான் மனசுல இருந்து தூக்கியெறிஞ்சுட்டுப் போறேன். என்னை நல்லாப் படிக்கவச்சீங்க.. படிப்பு தான் இனி என் ஊன்றுகோல்! புறப்படறதுக்கான ஏற்பாடுகளைப் பண்ணணும் அம்மா''

கீழுதட்டை அழுந்தக் கடித்து... உள்ளே பொங்கி வந்த அழுகையை சிரமப்பட்டு அடக்கினாள்.

''அம்மாடி! வயசுப் பொண்ணை தன்னந்தனியா அனுப்பிட்டு.. இங்கே எங்களுக்கு என்ன வேலை வேண்டிக்கிடக்கு?

உனக்குத் துணையா நானும் அம்மாவும் வர்றோம். வாழ்க்கைத் துணை தான் உனக்கு சரியா அமையலே... நாங்க உயிரோட இருக்கிறவரை.... உன் கூடத்தான் இருப்போம்''

''செல்வம் அத்தானுக்கு யார் சமைச்சுப் போடுவாங்க? பாவம் அப்பா!'' மேற்கொண்டு அவள் பேசி முடிப்பதற்குள் சட்டென்று இடை புகுந்தாள் தங்கம். ''செல்வம் ஆம்பளை! அவன் சமாளிச்சுக்குவான் பக்கத்துத் தெருவுல மலையாளத்தான் மெஸ் இருக்கே? அப்புறமென்ன? உனக்குத் தான் துணை தேவை. மறுத்து எதுவும் பேசாதே எங்களால தாங்க முடியாது''

''சரிம்மா..'' ஒரு கணம் விழிகளை மூடி ஆஞ்சநேயரை தியானித்தாள். மறுகணமே பலத்தைத் திரட்டிக் கொண்டு எழுந்து நடந்து தன் அறைக்குச் சென்றாள். தனக்கு வேண்டிய துணிமணிகளை எடுத்து அடுக்கி வைத்தாள். படிப்புச் சான்றிதழ்களையும் வேலை நியமன உத்தரவையும் ஹேண்ட் பாக்கில் பத்திரப்படுத்தியபோது... உள்ளூர மீண்டும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

'நான் என்ன பாவம் செய்தேன்? முகில் என்னை நேசித்தார். நானும் அவரை நேசித்தேன். நான் அவரை நேசித்தாலும்.... பெற்றவர்களின் விருப்பத்தை மீறி எதுவும் செய்ய மாட்டேன்' என்று வைராக்கியமாக இருந்தேனே?

விரும்பியவரையே கைப்பிடிக்கும் பாக்கியமும் கிடைத்தது? மனம் போல வாழ்வு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தேனே? அந்த சந்தோஷம் கானல்நீராய் மறைந்து விட்டதே? முகில் இவ்வளவு பெரிய துரோகத்தை இழைத்திருந்தும்.... என் மனம் முழுமையாக அவரை வெறுக்கவில்லையே?

இங்கே சற்றுமுன்... ஜம்பமாக முகிலைப் பற்றிய நினைப்பைத் தூக்கியெறிந்து விட்டேன் என்று வீறாப்பாக கூறினேனே? அது எவ்வளவு பெரிய பொய்? முகிலின் நெற்றியில் பெரிய பிளாஸ்திரி இருந்ததே? அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டிருக்குமோ தெரியவில்லையே?

முகில்! நீங்கள் பொய்யாக நடித்து என்னை வஞ்சித்து விட்டீர்



கள். ஆனால்.... என் அன்பு.. என் காதல் உண்மையானது. தகாத மனிதர் மீது அப்பழுக்கற்ற அன்பு வைத்து ஏமாந்து விட்டேன். ஆஞ்சநேயா! ஐயனே! அவரை மறக்கக்கூடிய சக்தியை எனக்குத் தாரும். நான் மறந்து தான் ஆகவேண்டும். என்னது இது? நான் இன்னமும் பேதையாக இருக்கிறேனே? அந்த ஜமீன்தார் என்னை மோசமான பெண் என்று எண்ணினாரோ? நான் கதறித் துடித்தும்... முகில் உண்மையைச் சொல்லாமல் வேடிக்கை பார்த்தாரோ? முகில் ஒரு பச்சை துரோகி! மனிதநேயமில்லாத ஒரு மிருகம்... பசுத்தோல் போர்த்திய புலி! இனி அந்த மனிதரை நினைத்தாலே... அது பெண்மைக்கே கேவலம்... என் வாழ்நாளில் அந்த மனிதரின் முகத்திலேயே நான் முழிக்கவே கூடாது....

உள்ளூர டன் டன்னாய் வெறுப்பு மண்டிக் கொண்டு வந்தது. சட்டென்று சூட்கேஸை மூடி வைத்தாள். அவளது வலது கை மோதிர விரலிலிருந்த நீலக்கல் மோதிரம் விளக்கொளியில் பளிச்சென்று கண் சிமிட்டியது.

'ஓ... இது முகில் பரிசளித்த மோதிரம் அல்லவா? உன் பிஞ்சு விரல்லே இந்த மோதிரத்தைப் போட்டு விட்டதும். எவ்ளோ அழகா இருக்கு பார் மித்ரா! என்ற படி மிக மென்மையாக புறங்கையில் முத்தமிட்டாரே முகில்?

சற்று முன் வைராக்கியமாக வெறுத்து இறுகிப் போயிருந்த மனம்... 'மளுக்' என்று உடைந்து நெகிழ்ந்தது.

'முகில்' நீங்களா? நீங்களா இப்படி மாறிவிட்டீர்கள்? ஏன்? எதற்காக?'

சே! என்ன பெண் நான்? முகில் ஒரு கயவன். முகில் ஒரு பணக்கார பாம்பு! என்னைக் கொத்தி பழி தீர்த்த பாம்பு. என் வாழ்வை இருட்டாக்கிய நய வஞ்சக மனிதரைப் போய்... என்னையும் அறியாமல் எண்ணி எண்ணி உருகி மருகுகிறேன்.

கடலளவு அவர் மீது நான் வைத்த அன்பு முழுவதும்... வெறுப்

''ரிடையரான பிறகு தான் எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு வேலை செய்ய''

''வேலையே செய்யாம இருந்துட்டு இப்ப செஞ்சா கஷ்டமா தான் இருக்கும்.''

பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்




பாக மாற்ற வேண்டும்... இல்லை நான் மாற்ற வேண்டும்... மாற்றி விட்டு தலைநிமிர்ந்து நான் வாழ்ந்து காட்ட வேண்டும்.

கோபாவேசமாய் மோதிரத்தைக் கழற்றி... தனது பீரோவைத் திறந்து உள்ளே கடாசினாள். முகில் தனக்குப் பரிசாக கொடுத்த புடவைகள் ஏதும் சூட்கேஸில் இருக்கிறதா? என்று ஆராய்ந்தாள்.

'நல்ல வேளையாக.. அந்தப்புடவைகளை சூட்கேஸில் அடுக்கவில்லை. என் கண்ணில் படவே கூடாது' உள்ளூர உறுதி பூண்டாள் மித்ரா.

ஆனால்.. விதி வேறு விதமாய் விளையாடியிருந்தது. இவளை எண்ணிக் கை கொட்டி சிரித்ததை.. சங்கமித்திரை எவ்விதம் அறிவாள்?




சங்கமித்திரை வேலைக்குச் சேர்ந்து.... ஒரு வாரம் ஆகியிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை!

''மித்ரா! உனக்கு பிடிச்ச உருண்டை வடைக் குழம்பு வச்சிருக்கேன். வேலைக்குப் போற பொண்ணு. நல்லா தெம்பா சாப்பிட்டாத்தானே.. உழைக்கிறதுக்கு பலமிருக்கும்? '' அன்பாய் அதட்டியபடியே சாதத்தில் குழம்பை ஊற்றினாள் தங்கம்.

சாதத்தைக் குழம்புடன் சேர்த்து பிசைந்து வாயில் வைக்கப் போன போது.. .மித்ராவுக்கு குமட்டிக் கொண்டு வந்தது. அவசரமாய் எழுந்து பாத்ரூமுக்குச் சென்று விட்டு திரும்பி வந்தாள்.

''முகில் பண்ணின துரோகத்தை நெனச்சு மனசே கசந்து கிடக்கும்மா.. எதையும் சாப்பிடப் பிடிக்கலை.. நாக்கு சதா கசக்குது. பிடிச்சதை சாப்பிட்டாக் கூட குமட்டுது. நாக்கு கசக்கிறதால சதா விபூதியை தான் எடுத்து வாயில போட்டுக்கிறேன். ஆபீசுக்குப் போகும்போது கூட பொட்டலத்துல கொஞ்சம் விபூதி எடுத்துட்டுப் போறேன்'' சோர்வாய் கூறியபடி சாமி படத்துக்கு அருகிலிருந்த கிண்ணத்திலிருந்து ஒரு சிட்டிகை விபூதியை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

''மித்ரா! இது சாதாரண விஷயமில்லைடா... டாக்டர்கிட்டே கண்டிப்பா உன்னைக் காட்டணும். விபூதி வாசம் புடிக்குதுன்னு சொல்றியே? ஆமா... உனக்கு 'நாள்' எதுவும் தவறிப் போயிருக்கா? பரபரப்பாய் கேட்டாள் தங்கம்.

அட.... ஆமாம்! நடந்த களேபரத்தில்... சோகத்தில் இந்த விஷயத்தை சுத்தமாய் நான்மறந்து விட்டேனே? கிட்டத்தட்ட அறுபது நாள் ஆகியிருக்கும் போலிருக்கே? கண்ணீரும் கம்பலையுமாய் கவ



லையுடன் வளைய வந்ததில்.... இதைப் பற்றிய ஞாபகமே இல்லாமல் போய் விட்டதே? நான் கர்ப்பமாக இருக்கிறேனா? அதனால் தான் விபூதி வாசம் பிடிக்கிறதா? என் வாழ்வே பட்ட மரமாகிவிட்டது என்று நினைத்தேனே? பட்டமரத்தின் ஓரத்தில் தளிர் துளிர்க்கத் தொடங்கிவிட்டதே? தளிர் துளிர்க்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லையே?

முகிலின் ஞாபகமே எனக்கு வரக்கூடாது என்று நான் வைராக்கியமாக இருக்கும் தருணத்தில்... முகிலின் வாரிசு என் வயிற்றில் வளர்ந்து வருகிறதே? என் வாழ்வில்... எனக்கு ஒரு பிடிப்பு வேண்டும் என்பதற்காக பகவான் இந்த வரப் பிரசாதத்தை எனக்கு தந்தருளி இருக்கிறாரோ? அப்படித்தான் இருக்க வேண்டும். அன்னைக்கு அன்னையாய் தந்தைக்கு தந்தையாய் நானிருந்து.. என் குழந்தையை வளர்த்து ஆளாக்குவேன். குழந்தை தான் என் உலகம்! வாழ்வின் ஜீவாதாரமே என் குழந்தை தான்...

பொங்கி வந்த கண்ணீரை.. கண்களைச் சிமிட்டி உள்ளிழுத்துக் கொண்டபடி.. தனது மென்வயிற்றை இதமாகத் தடவிக் கொண்டாள்.

''ஆமா அம்மா! கிட்டத்தட்ட அறுபது நாளிருக்கும் போலிருக்கு... டாக்டர்கிட்டே போய் தான் ஆகணும்....''

''மித்ரா! கடவுள் நம்ம பக்கம் தானிருக்காரு. எங்க காலத்துக்கு அப்புறம்... நீ தனியா கிடந்து தவிப்பியோன்னு உள்ளூர புழுவாய் துடிச்சோம்... உனக்குன்னு ஒரு பிடிப்பு வந்திடுச்சு... பார்த்தியா? உன் குழந்தை உன்னைப் பார்த்துக்கும். உன் நல்ல மனசுக்கு எல்லாமே நல்லபடியா நடக்கும் ராஜாத்தி''

கண்ணீர் மல்க நா தழுதழுக்கப் பேசியபடி மகளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் தங்கம்.

''ஆனா... என் குழந்தைக்கு தன் அப்பாவோட பாசமும் பாதுகாப்பும் இல்லாமலேயே வளரணும்னு... விதி இருக்கே அம்மா! குழந்

''அந்த சாமியார் ஞானம் வந்த பிறகு தான் சாமியார் ஆனார்''

''நல்லது தானே!''

''நீங்க வேற நான் சொல்றது அவர் மனைவி ஞானம் வந்த பிறகு.''

-பி.பாலாஜிகணேஷ்,
சிதம்பரம்



தைக்கு விவரம் வந்ததும்... தன்னோட அப்பாவைப் பத்திக் கேள்வி கேட்டு... என்னைத் துளைக்க எடுக்குமே அம்மா? அப்பாவோட பாச மழையில நனையறதுக்கு... என் குழந்தைக்கு குடுத்து வைக்கலையே அம்மா'' முதுகு குலுங்க குமுறியவளை மெல்லத் தட்டிக் கொடுத் தாள் தங்கம்.

''இதோ பாரும்மா... நீ இந்த மாதிரி சமயத்துல கவலைப் படவே கூடாது. அது வயித்துல இருக்கிற குழந்தையை பாதிக்கும். கடவுள் மேலே பாரத்தைப் போடு! தியானம் பண்ணி மனசை இலேசா வச்சுக்கணும். இப்படித்தான் நடக்கணும்னு விதி இருந்தா... அதை யாரால மாத்த முடியும்? அம்மாவுக்கு அம்மாவா அப்பாவுக்கு அப்பாவா... நீ இருந்து பாசம் காட்டப் போறே? நாங்க வேற இருக்கோம். அப்புறம் என்ன? நடக்கிறது நடக்கட்டும்... கட வுள் இருக்காரு. இதுக்கு மேலேயும் உன்னை சோதிக்க மாட்டா ருன்னு...எனக்கு நம்பிக்கை இருக்கு. ரெண்டு பேரும் தயாரா இருங்க... ஆட்டோ புடிச்சுட்டு வர்றேன். ஆஸ்பத்திரிக்குப் போக லாம்'' துண்டை உதறித் தோளில் போட்ட படி... தளர்வாய் நடந்தார் சக்கரவர்த்தி.

''ஆஸ்பத்திரியில்... டாக்டர் பரிசோதித்து முடித்து விட்டு கர்ப் பத்தை உறுதிப் படுத்தியதும்... சங்கமித்திரைக்கு ஒரு பக்கம் உள் ளூர மகிழ்ச்சி ஊற்றெடுத்தது... மறுபக்கம் துக்கம் பந்தாய் உருண் டது.

''எந்தவொரு பெண்ணும்... தான் தாய்மையடைந்திருப்பது தெரிந்ததும்... அந்த விஷயத்தைத் தனிமையில் கணவனிடம் சொல்லி மகிழ்வாள். எனக்கு மட்டும் ஏன் இந்த நிலைமை ஏற்பட் டது? நான் யாருக்கும் எந்தக் கெடுதலும் மனதார நினைத்ததே இல் லையே?

யாரையும் நான் ஏறெடுத்துப் பார்த்ததே இல்லையே? இருக்கும் இடமே தெரியாமல்... அடக்க ஒடுக்கமாக கன்னியமாய் நடந்து கொண்டும் எனக்கு... நடத்தை கெட்டவள் என்ற பட்டம் கட்டி விட் டாரே அந்த ஜமீன் தார்? அவமானப்பட்டு நெருப்பில் இடப்பட்ட புழுவாய் துடித்தேனே? அத்தனையையும் முகில் வேடிக்கை பார்த் தது போதாதென்று... யார் நீங்க? என்று என்னைப் பார்த்து கேட்டு விட்டாரே?

என்னை ஒரு மட்டரகப் பெண் என்று ஏசிய ஜமீன்தாருக்கு இந்த விஷயம் தெரிந்தால்... என்ன வென்று சொல்வார்? முறை தவறி நடந்து உருவான குழந்தை என்று தானே கூறுவார்? ஆஞ்சநேயா! ஐயனே அந்த ஜமீன்தார் கூறிய வார்த்தை இன்னமும் என் செவிக ளில் எதிரொலிக்கிறதே? என் இதயத்தில் குருதி கசிகிறதே? என் வாழ் நாளில் என்றாவது ஒருநாள் நான் பரிசுத்தமானவள் என்று நிரூபித் தாக வேண்டும்.





நிரூபித்து விட்டுத் தான் நான் கண்ணை மூட வேண்டும். அந்த மகா பாதகம் செய்தவர்களிடம் நிரூபித்து... எதை நான் நிலைநாட்டப் போகிறேன்?


நிரூபித்து என்ன பிரயோசனம்?

வாழ்க்கையை இழந்தது இழந்து விட்டேன். வேண்டாம்... எதுவுமே வேண்டாம்.

அவர்களின் முகத்தில் நான் எந்தக் காரணத்தைக் கொண்டும் முழிக்கவே கூடாது...

அவளது கன்னங்களில் தண்ணீர்... வாய்க்கால் போட்டுக் கொண்டு இறங்கியது.

ஆனால் விதி விடாப்பிடியாக அவளைத் துரத்தியது அவளை, முகிலின் முகத்தில் விழிக்க வைத்தது.




முகில் கிரிதரனின் தலைக்குள் வண்டு குடைந்தது. யோசிக்க யோசிக்க அவனுக்குள் குழப்பம் அலை மோதியது. நெற்றியிலிருந்த காயத்தை மெல்லத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

''நான் மிகப் பெரிய விபத்தில் மாட்டிக் கொண்டேன் என்று அனைவரும் கூறுகிறார்கள்.

நான் ஓட்டிச் சென்ற ஜீப்பில் பிரேக் பெயிலியராகி பெரிய விபத்து நடந்து விட்டதாகத் தெரிகின்றது. எதுவுமே எனக்கு நினைவில் வரமாட்டேன்கிறது. ஆஸ்பத்திரியில் பலத்த கட்டுடன் நான் கண் விழித்துப் பார்த்த போது... என்னைச் சுற்றிலும் இருந்தவர்களை எனக்கு அடையாளமே தெரியவில்லை.

பெத்த அம்மா அப்பாவைக் கூட எனக்கு நினைவில்லை. ஏன் என்னைப் பற்றியே எனக்கு மறந்து விட்டதே?

நான் சுத்தமாக பழைய நினைவை இழந்து விட்டேன்'' என்று டாக்டர் கூறிய போது... எவ்வளவு வேதனையாக இருந்தது?

''கிரி! நீ எதுக்காகவும் வருத்தப்படாவே கூடாது. டாக்டர் சொன்ன மாதிரி நீ நடந்துக்கணும் தலையில அடிபட்டதால பழைய நினைவை நீ இழந்திருக்கே... நல்ல காலம்! இந்த மட்டுமாவது பிழைச்சு வந்திருக்கியே?

அதுவே எங்களுக்குப் போதும் கிரி! பழசை ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன்னு.... அதிகமாக யோசிச்சு ஸ்ட்ரெயின் பண்ணாதே... தலையில பலமா அடிபட்டிருக்கு... ஜாக்கிரதை! நீ எங்களுக்கு ஒரே பிள்ளை... நம்ம ஜமீனுக்கு ஏக போக வாரிசு''... என்று ராஜ மார்த்தாண்டம் என்னைப் பற்றிய விவரங்களை எடுத்துச் சொல்லியிருந்தாரே?



''வீட்டுக்குத் திரும்பியதும்... இந்த ஜமீன் பங்களாவின் எல்லா அறைகளிலும் மூலை முடுக்குகளிலும் உற்று உற்று நோக்கி... ஏதாவது ஞாபகத்திற்கு வருகிறதா? என்று மனதில் நினைவு ஏடுகளைப் புரட்டிப் பார்க்கிறேன்.

''சுத்தம்....!

''அக்கா வெண்ணிலாவின் பிரமாண்ட படத்தை மாட்டி இவர்கள் பெண் தெய்வமாக வணங்கி வருகிறார்கள்.

நண்பன் தியாகுவைக் கூட... எனக்கு ஞாபகம் இல்லையே? அம்மா ரத்தினம் சதா என்னைப் பார்த்து அழுது விடுகிறாளே? அப்பா ராஜ மார்த்தாண்டமும், தியாகுவும் ஏதோவொரு விஷயத்தை... என்னிடமிருந்து மூடி மறைக்கிறார்கள் என்று என் உள்ளுணர்வு சொல்கிறதே?

அது என்ன விஷயமாய் இருக்கும்?

எதற்காக என்னிடம் மூடி மறைக்க வேண்டும்? இந்த ஜமீனில் ஏதோ சதி நடக்கிறது. இந்த விபத்து கூட சாதாரணமாக நடந்ததில்லை... இதில் ஏதோவொரு சூது இருக்கிறது என்றும் சதிகாரர்கள் செய்த நாசகாரியம் என்றும் என்னிடம் வெளிப்படையாய் சொல்லி விட்டார்களே?

இதைத் தவிர வேறு ஏதோ ஒரு உண்மை இருக்கிறது. அது எனக்குத் தெரிந்து விடக் கூடாது என்று அப்பா மிகவும் பிரயாசைப்படுவது... எனக்கு அப்பட்டமாகத் தெரிகிறதே?

என்னால் லேப்டாப், கணினி... இவற்றைப் பயன் படுத்த முடியும் போலிருக்கிறது.

''என் புராஜெக்ட்டைக் கூட என்னால் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அடி மனதில்... படித்த படிப்பின் மூலம் கிடைத்த திறமையும் அறிவும் என்னை விட்டு நீங்க வில்லையே?

ஆனால்... என்னிடம் முன்பு நெருங்கிப் பழகியவர்களைப் பற்

''தலைவருக்கு பிடிச்சது கமிஷன் தான்''

''அப்புறம் ஏன் விசாரணை கமிஷனை பார்த்து பயப்படுறாரு!''

பி.பாலாஜிகணேஷ்,
சிதம்பரம்




நிவ நினைப்பு தான் தொலைந்து விட்டது போலும்! தியாகுவை தனிமையில் அழைத்து விசாரித்துப் பார்த்தும் பிரயோஜனம் இல்லை. தியாகு அழுத்தக் காரனாய் இருக்கிறான்.

''இல்ல கிரி! நீயா எதையும் கற்பனை பண்ணிக்காதே! நாங்க எந்த முக்கியமான விஷயத்தையும்... உன் கிட்டேயிருந்து மூடி மறைக்கலை. மறைக்கணும்கிற அவசியமும் எங்களுக்கு இல்லை. நம்பு! மனசைக் குழப்பிக்காதே கிரி பிளீஸ்!'' என்று என் முகத்தைக்கூட ஏறிட்டுப் பார்க்காமல்... எங்கேயோ வெறித்தபடி தியாகு பேசுகிறானே?''

''எனது விழிகளை நேருக்கு நேர் சந்திப்பதையே தவிர்க்கிறானே?

இதிலிருந்தே அவன் பொய் பேசுகிறான் என்று தெள்ளத் தெளிவாய் தெரிகின்றதே?



''நீங்க அடுத்த பிறவியில கழுதையா பிறப்பீங்க!''

''எப்படி சொல்றீங்க!''

''உங்க ஜாதகத்துல நிறைய கிரகரங்கள் உதைக்குதே!''

பி.பாலாஜிகணேஷ்,
சிதம்பரம்

''சமீபத்தில் ஒரு இளம் பெண்ணும் முதியவரும் கண்ணீரும் கம்பலையுமாய் இங்கு வந்து ஏதோ விவாதித்தார்களே? அந்தப் பெண் கூட.... ''மித்ராவின் கழுத்தில் நான் தாலி கட்டினேன். மித்ரா. என் மனைவி!''ன்னு சொல்லுங்க முகில்னு கதறினாளே?

''அப்பா என்னிடம் தனிமையில்... ஜமீன் சொத்திற்கு ஆசைப்பட்டு உன் மேல அபாண்டம் சுமத்தி... இந்த ஜமீனுக்கே மருமகளா வரணும்னு அந்தப் பொண்ணு நாடகமாடறா.... அப்பனும் மகளுமா சேர்ந்து ஜமீன் சொத்துக்கு குறி வச்சு வலை விரிக்கிறாங்க... உனக்கும் அவளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை... அவ இருக்கிற எஸ்டேட் பக்கம்... நீ தலை வச்சுப் படுத்ததே இல்லை. இது தான் நிஜம்!

உன் அப்பா மேல உனக்கு நம்பிக்கை இருக்குல்ல...? நான் உனக்கு நல்லதைத் தான் செய்வேன். வா! வந்து அவங்களைப் பார்த்துப் பேசு! மத்ததை நான் பார்த்துக்கிறேன் கிரி!'' என்று அப்பா கூறினாரே?

''பெத்த தகப்பனார் எதற்காக என்னிடம் பொய் சொல்லப் போகிறார் என்ற நம்பிக்கையில்... மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து



அவர்களைப் பார்த்துப் பேசி விட்டேனே?

''அப்போது அந்தப் பெண்... பெயர் கூட மித்ராவாமே? ஆம் மித்ரா கதறித் துடித்தாளே?

மித்ரா என்ற பெண் துடித்த துடிப்பையும் தவித்த தவிப்பையும் பார்த்து விட்டு... இனம் புரியாமல் என் அடி மனதில் பதற்றமும் கலக்கமும் ஏற்பட்டனவே?

மித்ராவையும் அந்தப் பெரியவரையும் பார்த்தால்... சொத்து சுகத்திற்கு ஆசைப்பட்டு நாடகமாடு பவர்களைப் போலவா தெரிகிறது? அப்பாவிகள் போல் அல்லவா தெரிகிறது? அந்தக் கண்ணீரிலும் கதறிய கதறலிலும் நடிப்பு வெளிப்பட வில்லையே?

அவர்கள் இந்த ஜமீன் பங்களாவை விட்டு வெளியேறும் போது என்னுள் பரிதாபம் 'சொரேல்' என்று சுரந்ததே? இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போலிருந்ததே? என்ன காரணம்? நான் கடந்த கால நினைவை இழந்து தொலைத்து விட்டேனே? உண்மையில் அவளுக்கும் எனக்கும் எஸ்டேட்டில் ஆஞ்சநேயர் சன்னதியில் திருமணம் நடந்திருக்குமோ? ஏழை வீட்டில் பிறந்த பெண்ணை நான் திருமணம் செய்து கொண்டது பிடிக்காமல்.... நான் நினைவு இழந்ததை சாக்காக வைத்துக் கொண்டு.. அப்பா தரித்தனமாய் நடந்த உண்மையை மறைத்து விட்டாரோ?

''தியாகுவும் அப்பாவுக்கு உடந்தையாக இருக்கிறான் போலும்!

''நான் ஊகிப்பது மட்டும் உண்மையாக இருந்து விட்டால்...?

''ஐயோ! எவ்வளவு பெரிய பாவத்தை என்னையும் அறியாமல் செய்திருக்கிறேன்?''

''பெண் பாவம் பொல்லாதது அது சும்மா விடாது' என்று அழுதபடி மித்ரா கூறினாளே?

''போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேனோ? விபத்தில் மாட்டி நினைவை இழந்து தவிக்கிறேன். தெரிந்து செய்தாலும் சரி... தெரியாமல் செய்தாலும் சரி... பாவத்திற்கு தகுந்த தண்டனை உண்டல்லவா?

''உண்மையை மட்டும் கூறி விடுங்கள் முகில்! அது போதும்! உங்களிடம் எந்த உரிமையையும் எதிர்பார்க்காமல்.... உங்களை விட்டு நிரந்தரமாக விலகி விடுகிறேன் முகில்' என்று மித்ரா கூறினாளே? அவள் சொத்து சுகத்திற்கு ஆசைப் படுபவளாய் இருந்திருந்தால்... இந்த வார்த்தையை அவள் கூறுவாளா?''

''ஆம்! மித்ரா கூறியது தான் உண்மை போலும்! அவள் உண்மையில் பரிசுத்தமானவள் தான்.... உத்தமிதான்! நடந்த உண்மையை முழுவதுமாய் அறிந்தவன் தியாகு தான். அவன் தானே என்னை நிழலாய் தொடர்ந்திருக்கிறான்? அப்பாவிற்கு பயந்து அவன் வாயைத் திறக்கப் போதில்லை.''

''அந்த உண்மையை நான் தான் கண்டறிய வேண்டும். அதை எப்

படி கண்டறிவது? ''

''விபத்தில் நான் மாட்டுவதற்கு முன்பு... எனக்கு டைரி எழுதும் பழக்கம் இருந்ததா என்று தெரியவில்லையே? அவளை நான் மன தார நேசித்து திருமணம் செய்து கொண்டதாக... மித்ரா கூறினாளே? அவளுடன் ஏதாவது போட்டோ எடுத்துக் கொண்டேனா? ஏதாவது ஆதாரங்கள் கிடைத்தால் நன்றாயிருக்குமே? ''

''ஐயோ கடவுளே! இப்படியோ நான் ஒட்டு மொத்தமாக வா நினைவை இழக்க வேண்டும்? ஒரு வேளை.... மித்ரா கூறியது அத்த னையும் உண்மையாக இருந்தால்... நான் அவளைப் பார்த்து 'யார் நீங்க?' என்று கேட்டதைப் பற்றி... அவள் என்னை மோசமானவன் என்று முடிவு கட்டியிருப்பாளே?''

''எனக்கு யாருமில்லை' என்று கூறி உண்மையை மறைத்து அவ ளைத் திருமணம் செய்து கொண்டேன்... என்றாளே? நான் எதற்கு பொய் சொல்ல வேண்டும்? ஒரு வேளை... நினைவை நான் இழப்ப தற்கு முன்பு... கெட்டவனாக இருந்திருப்பேனா? அப்படியிருக்க சாத் தியமில்லை. எனக்கு மனசாட்சி இருக்கப் போய் தானே... பாவ காரி யத்திற்கு அச்சப்படுகிறேன்?''

''என் காதலுக்கு அப்பா எதிர்ப்பு தெரிவிப்பார் என்று பயந்து...இல்லையென்றால்... மித்ராவின் அன்பிற்கு பாத்திரமாவ தற்காக... வேண்டுமென்றே உண்மையை நான் மறைத்திருக்க வேண் டும். அது தான் சாத்தியம்!''

''சரி...டைரி போட்டோக்கள் இருக்கின்றனவா என்று தேடிப் பார்க்க வேண்டியது தான்''

''தனக்குள் தீர்மானித்த முகில் கிரிதரன் தனது சூட்கேஸ்கள், அல மாரிகள், பீரோக்களைத் திறந்து குடைய ஆரம்பித்தான்.

அவனது தேடலுக்கான விடை...உடனடியாக கிடைத்துவிடப் போடவில்லை. அதற்காக அவன் சில வருடங்கள் காத்திருக்க வேண் டும் என்பதை அறிந்த விதி... எகத்தாளமாக சிரித்தது.

## 17

அடுத்த மாதமே... கண்டமனூர் ஜமீன் பங்களா விழாக் கோலம் பூண்டிருந் தது.

''கிரி! இத்தன வருஷமா நம்ம கண் ணுல மண்ணைத் தூவிட்டு வந்த சதிகாரன் அகப்பட்டுட்டான்.

உங்கக்கா வெண்ணிலாவை கொன்னவ னும் உனக்கு விபத்தை ஏற்படுத்தி சாகடிக் கப் பார்த்தவனும்.... ஒரே நபர் தான்!''

''இந்தப் பாவிக்கு பயந்து தானே உன்னை எங்க கூட வச்சு வளர்க்க பயந்துட்டே பிள்ளைச் செல்வம் இருந்தும் அது கூட வாழக் கொடுத்து வைக்காம... நாங்க துடிச்ச துடிப்பு இருக்கே?''

''இனிமே தலைமறைவா இருக்கத் தேவையில்லை...உன்னோட ஜீப்பு ஆக்ஸிடெண்ட் ஆக்கல? அதுலே இருந்து துப்பு துலக்கி எப் படியோ கொலையாளியை மோப்பம் பிடிச்சுட்டாங்க....''

''கொலையாளி யார் தெரியுமா? எங்க அத்தான் ஜனார்த்தனன் தான்... அதாவது எங்க அக்கா வீட்டுக்காரரு.

''எங்க அக்காவை பாளையம் மிராசுதாரர் குடும்பத்துல கட்டிக் குடுத்தோம். எங்கத்தானுக்கு எல்லா கெட்டப் பழக்கங்களும் இருக் கிறதால.... பெரியவங்க சேர்த்து வைச்ச சொத்து கரைய ஆரம்பிச்சி ருக்கு. அப்பவே எங்க அத்தானுக்கு இந்த ஜமீன் சொத்தை அடைய ணும்னு ஆசை வந்திருக்கு.''

''ரொம்ப நாள் கழிச்சு பிறந்த வெண்ணிலா... குட்டி இளவரசியா இந்த ஜமீன் பங்களாவுல வளைய வந்தா... எங்க அத்தான் சமையல் காரனையும் நம்ம வீட்டு டிரைவரையும் கைக்குள்ளே போட்டுக் கிட்டு... சதித்திட்டம் தீட்டியிருக்காரு.... வெண்ணிலாவோட சாப் பாட்டுல விஷம் கலந்து வச்சு குழந்தையை அநியாயமா சாகடிச்சுட் டாங்க...

''நம்ம பேமிலி டாக்டர் அவ சாவுல மர்மம் இருக்குன்னு சொன் னதுமே நாங்க உஷாராயிட்டோம். நாங்களும் துப்பு துலக்கினோம். சாமர்த்தியமா தப்பிச்சுட்டாங்க.... அப்படியிருந்தும் எங்க முயற்சி யைக் கை விடாம மறைமுகமா ஆராய்ஞ்சுட்டு தான் இருந்தோம்.''

''அப்புறம் நீ பிறந்ததும்... எங்களுக்கு உன்னை இழந்துடுவோ மோன்னு பயம் வந்தது. யாருக்கும் தெரியாம கொஞ்சம் காலம் சென் னையில குடியிருந்தோம். உனக்கு பள்ளிக்குப் போற பருவம் வந்த துமே... பாசத்தை மூட்டை கட்டி வச்சுட்டு தீர்தாட்சண்யமா... உன்னை ஹாஸ்டல்லே சேர்த்து விட்டுட்டோம்.''

''ஜனார்த்தனன் மகாபாவி! அநியாயமா வெண்ணிலாவை கொன்

''போஸ்ட் மேன் லெட்டரை இப்படி தூக்கி வீசி அடிச்சிட்டுப் போறார்.''

''கேட்டதுக்கு ஸ்பீடு போஸ்ட்ன்னு சொல்லிட்டு போறார்''

-பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்.



விருக்கான். இந்த ஜமீனுக்கு வாரிசு இல்லாம பண்ணி சொத்தை ஆளலாம்னு திட்டம் போட்டானே... சண்டாளன்? எங்க அக்காவுக் கும் அவனுக்கும் நாங்க ஒரு குறையும் வைக்கலையே? இங்க வர் றப்போ எல்லாம் சீர் செனத்தி செஞ்சு நிறைய பணம் கொடுத்து அனுப்புவோமே?''

''காய்கறி மார்க்கெட், பிளாஸ்டிக் தொழிற்சாலை, மாட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை, அரிசி மண்டின்னு எத்தனையோ வச் சுக் குடுத்திருக்கேன். எதையுமே உருப்படியா நடத்தாம குடிச்சு கூத் தாடி நஷ்டப்பட்டுட்டு... இங்க வந்து நிப்பான் பாவி! முகம் சுளிக் காம நம்ம அத்தானாச்சே?ன்னு தாராளமா அள்ளி அள்ளிக் குடுத் தேனே?''

''நன்றி கெட்ட பாவி! என் குடியையே கெடுத்திருக்கானே? எங்க அக்காவுக்கு ஒரே புள்ளை... படிக்க வச்சு சீரும் சிறப்புமா ஊரே மெச்சும் படி, கட்டிக் குடுத்தேனே? எதையுமே நெனச்சுப் பார்க்காம.... இப்படி பண்ணிட்டானே? அவனுக்கு நம்ம சமை யல்கா ரனும் டிரைவரும் உடந்தையா இருந்திருக்காங்க. பாரேன்? ஒழியட்டும்... அவங்க செஞ்ச பாவத்துக்கு இப்போ மாட்டிக்கிட் டாங்கல்ல?''

''கிரி இனி நீ 'அஞ்ஞாத வாசம்' இருக்கத் தேவையே இல்ல... தாராளமா சுதந்திரமா வெளியில நடமாடலாம். எங்க கூடவே இருக்கலாம். தேனி மாவட்டத்துல ஆங்காங்கே நீ தொடங்கின சாப்ட் வேர் நிறுவனங்களை கவனிச்சுக்கிட்டு.... எங்களை விட் டுப் பிரியாம... இங்கேயே இருக்கணும். கடைசி காலத்திலேயா வது எங்களுக்கு நிம்மதி பிறந்துச்சே? இத்தனை வருஷமா பயத்தி லும் திகிலிலும் நாங்க செத்து செத்துப் பிழைச்சோம்.''

''இன்னிக்கு நம்ம ஜமீன் பங்களாவுல கணபதி ஹோமமும் ஆயுஷ்ய ஹோமமும் பண்றதுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன் கெட்டது எல்லாமே விலகிடுச்சு. இல்லையோ? எல்லோருக்கும் விருந்து வைக்கச் சொல்லியிருக்கேன்.''

''வாசுதேவநல்லூர்' ஜமீன் தாரருக்கு ஒரே பொண்ணாம். அவ ஜாதகத்தையும் போட்டோவையும் அனுப்பி இருக்காங்க பொண்ணு பார்க்க லட்சணமா கிளி மாதிரி இருக்கா.... நீ 'சரி'ன்னு ஒரு வார்த்தை சொல்லு! தடபுடலா அடுத்த முகூர்த்தத்திலேயே கல் யாணத்தை நடத்திடலாம்...

மகிழ்ச்சி தாளாமல் முகில் கிரிதரனின் புஜத்தில் தட்டினார் ராஜ மார்த்தாண்டம்.

''அ.... அப்பா! எ... என்னை மன்னிச்சுடுங்க அப்பா!

நீங்க சொன்ன மாதிரியே நம்ம வர்த்தக நிறுவனங்களை நான் கவனிச்சுக்கிறேன்.

உங்களை விட்டுப் பிரியவும் போறதில்ல... ஆனா... கல்யா



ணம் பண்ணிக்கச் சொல்லி... தயவு செய்து வற்புறுத்தாதீங்கப் பா..

எனக்குப் பழைய நினைவு திரும்பணும்.

நான் விபத்துல மாட்டறதுக்கு முன்னே... என்னென்ன சம்ப வங்கள் நடந்திருக்குன்னு... தெரிஞ்சுக்கணும்பா... இன்னும் சொல்லப் போனா என்னைப் பத்தி முழுமையா நான் தெரிஞ்சுக்க ணும் நான் நல்லவனா? கெட்டவனா?ன்னு தெரியணும் அதுக்கு பழைய ஞாபகம் வரணும். ஞாபகம் திரும்பி வராட்டியும் பரவா யில்லை... நான் யார் மூலமாகாவது... என்னோட கடந்த காலத் தைப் பத்தித் தெரிஞ்சுக்கணும். அப்போ தான் எனக்கு நிம்மதி கிடைக்கும்.

''உள்ளூர எனக்கு ஒரு உணர்வு இருந்துட்டே, இருக்குப்பா... எனக்கு ரொம்ப நெருக்கமானவங்களை ஆத்மார்த்தமா நேசிச்சவங் களை விட்டு விலகிட்டேன்னு ஒரு ஃபீலிங் இருக்கு. அது என்ன?ன்னு தான் புரியலை. அந்த உறுத்தலோட நான் கல்யாணம் பண்ணிக்க முடியாதுப்பா...''

''என்னப்பா கிரி? என்ன பெரிய கடந்த காலம்? நான் சொல்ற துலே உனக்கு நம்பிக்கை இல்லையா? நீ ரொம்ப நல்லவன் தான்டா....''

''அப்பா! இதுக்கு மேல நீங்க வற்புறுத்தாதீங்க அப்பா! எனக்கு இஷ்டமில்ல... குழம்பி இருக்கிற என் மனசு ஒரு தெளிவுக்கு வர ணும். வந்ததும் நானே உங்க கிட்டே சொல்றேன். அதுக்கு அப்பு றமா கல்யாண ஏற்பாட்டை பண்ணுங்க...''

''நீங்களும் அம்மாவும் இதுக்கு மேல வற்புறுத்தினா... சொல் லாம கொள்ளாம எங்கேயாவது நான் போயிடுவேன் இது சத்தி யம்'' விருட்டென்று வெளியேறினான் முகில்.

ராஜ மார்த்தாண்டத்தின் முகம் பேயறைந்தாற் போலாகி விட் டது. முகில் கிரிதரனுக்கு விபத்து நடப்பதற்கு... இரு நாட்களுக்கு முன்பு தான் தனக்கும் மித்ராவுக்கும் கோவிலில் எளிய முறையில் திருமணம் நடந்ததை தனது அப்பாவிடம் கூறி விட்டிருந்தான்.

கோபத்தில் கொதித்துப் போய் தாம் தூம் என்று குதித்து விட்டு... இரு நாட்களாக முகம் கொடுத்துப் பேசாமல் இருந்தார். ராஜ மார்த்தாண்டம்.

மூன்றாவது நாளே முகில் விபத்தில் மாட்டி விட்டிருந்தான். விபத்தில் அவன் தனது கடந்த கால நினைவை இழந்து விட்டான் என்று டாக்டர் கூறியதும்.... ராஜமார்த்தாண்டத்தின் மனதில் பளிச் சென்று மின்னல் மின்னியதைப் போல்.... ஒரு எண்ணம் உதித்தது.

தியாகுவை அழைத்து மிரட்டி எக்காரணத்தைக் கொண்டும் முகிலிடம் பழைய சம்பவங்களைப் பற்றி எதுவும் சொல்லக் கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டது..! இப்போது ஞாப

சுத்திற்கு வந்தது.

குற்ற உணர்வு மனதைப் புழுவாய் குடைய ஆரம்பித்தது. உண்மை தெரிந்து விட்டால்... முகிலுக்கு என் மீது வெறுப்பு வருமோ? வெறுப்பில் மனம் கசந்து போய்.... எங்களை விட்டுப் பிரிந்து போய் விட்டால்...?

அடி வயிற்றில் திகில் ஊறத் தொடங்கியது.

## 18

காலச் சக்கரம் வெகு வேகமாய் சுழன்றதில்... அந்த சக்கரத்தின் அடியில் நான்கு வருடங்கள் நசுங்கியிருந்தன.

''அம்மாடி இனியா கண்ணு! இத் தாம்மா... இன்னும் ஒரே ஒரு வாய் வாங்கிக்க ராஜாத்தி... என் பட்டு என் ராஜாத்தி யில்ல?''

பருப்பு சாதத்தில் நெய் விட்டுப் பிசைந்து பேத்திக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள் அம்மா தங்கம்.

வாயில் சாதத்தை அடக்கிய படி.... குடுகுடுவென்று அடுத்த அறைக்குள் புகுந்து கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள் இனியா.

''தாத்தா! என்னைக் கண்டு பிடிக்க பாட்டி கிட்ட கூட்டிட்டுப்போ பார்க்கலாம்'' மழலையில் மிழற்றினாள்.

''ஒரு நிமிஷம் கூட நிக்காம சும்மா வண்டு சுத்தினமாதிரி ஓடி வேடிக்கை காட்டறியே இனியா? தாத்தாவுக்கு வயசாயிப் போச்சு மூட்டு முழங்கால் நோவுதே? உன் வேகத்துக்கு நான் ஈடு குடுக்க முடியாம அல்லாடறேனே? என்ன செய்ய?'' புலம்பினார் சக்ரவர்த்தி.

''என்னப்பா? உங்க பேத்தி உங்களை ரொம்ப அலைக்கழிக்கிறாளா?'' என்று கேட்டபடியே உள்ளே நுழைந்தாள் சங்கமித்திரை.

தோளில் தொங்கிய ஹேண்ட் பேக்கை... சுவற்றிலிருந்த ஆணியில் மாட்டிவிட்டு அப்பாவின் அருகில் வந்து நின்றாள்.

''எல்லாம் நீங்க குடுக்கிற செல்லம்! ரொம்ப சேட்டை பண்ணினா ரெண்டு அடி முதுகுல வைக்கப்பா... அப்போதான் சொன்ன பேச்சைக் கேட்கும்'' சிரித்த மகளை மெல்ல ஊன்றிப் பார்த்தார் சக்ரவர்த்தி.

''குழந்தைன்னா....சுட்டித் தனமும் விஷமத்தனமும் பண்ணத் தான் செய்யும். அதுக்குப் போய் அடிக்கலாமா? நாம தான் பொறுமையா அது போக்கிலேயே போய்... நம்ம வழிக்குக் கொண்டு வரணும். அதுவும் தவிர... இனியாவுக்கு அப்பா இல்லாத குறையை... நாம தானே ஈடுகட்டியாகணும் பாவம் இனியா! அந்த பச்சை மண்ணு மேல கோபப்படாதே மித்ரா!''



அப்பா பேசியதைக் கேட்டதும் மித்ராவுக்கு 'மளுக்' என்று விழிகளில் நீர் திரண்டது.

சட்டென்று கர்ச்சீப்பால் விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

''அப்பா! ஆபீசுக்கு ஒரு பத்து நாள் லீவு போட்டுட்டு ஊருக்குப் போயிட்டு வரலாமா அப்பா?

எஸ்டேட்டுக்குப் போய் பல காலம் ஆச்சு. நம்ம வீட்டுல பத்து நாள் நிம்மதியா தங்கிட்டு வரலாம்.

நீங்களும் அம்மாவும் ரொம்பவும் சோர்வா தெரியறீங்க ஊருக்குப் போயி எஸ்டேட்டை ஒரு நாள் சுத்திப் பார்த்துட்டு வந்தா.. கொஞ்சம் மனசுக்கும் உடம்புக்கும் ரிலாக்ஸ்டா இருக்குமே அப்பா

இதை விட முக்கியமான காரணம் ஒன்னு இருக்கு அப்பா போனவே கல்யாணப் பேச்சை எடுத்தாலே... செல்வம் அத்தான் பிடி கொடுக்காம நழுவுறாரு இல்ல?

அதான்... நாம்ப நேரிலே போயி அவரை உட்கார வச்சு பேசி சம்மதிக்க வைக்கலாம் இல்லியா?

''சரிதான்! உனக்கு ரொம்ப நல்ல மனசு தாயி! நீ இப்படி தனிமரமா இருக்கியேன்னு எங்க எல்லாருக்கும் கவலையா இருக்கு.

நீ, செல்வத்துக்கு கல்யாணம் பண்ணி வச்சு, அவனை குடியும், குடித்தனமுமா பார்க்க ஆசைப்படறே.. உன்னை நெனச்சா பெருமிதமா இருக்குதும்மா!''

தனது புன்னகையை அவருக்கு பதிலாக்கி விட்டு நடந்தாள்.

அறைக்கதவின் பின்னால் ஒளிந்திருந்த மகளை வாரி அணைத்துத் தூக்கினாள்.

குறும்பு கூத்தாடும் பெரிய விழிகள், சுருண்ட கேசம், பிறை நெற்றி, எடுப்பான நாசி, மாம்பழக் கன்னங்கள், பால் வடியும் முகம்...

ஆகாய வெண்ணிலாவிற்கு கை, கால்கள் முளைத்து தரையில்

''போர்க்கு சென்று வந்த நம்ம மன்னருக்கு புறமுதுகில் காயமில்லாமல் இரண்டு கால்களிலும் ரத்தம் கசிந்து வருதே!''

''ஏன்? தெரியலை.''

''காடு முரடான பாதைகளில் ஓடி வந்திருப்பார் போலிருக்கு.''

-தென்கரை, சி.சங்கர், வந்தவாசி.



இறங்கி வந்தாற் போன்ற பேரழகு..!

சங்கமித்திரைக்கு தன் மகளைப் பார்க்கும் போதெல்லாம் முகி லின் ஞாபகம் தான் வரும்.

முகில், ஒரு குட்டி பாப்பாவின் ரூபத்தில் வந்து விட்டாற் போன்று அச்சு அசலாய் அவனது ஜாடையை உரித்துக் கொண்டு வந் திருந்தாள் இனியா.

கடவுளே! அவரோட ஞாபகமே எனக்கு வரக்கூடாதுன்னு சதா உன்னை வேண்டிக் கிட்டிருந்தேனே?

சதா சர்வ காலமும் அவரோட ஞாபகம் வர்றாப்பல.. இந்தக் குழந்தை அவரையே உரிச்சிக்கிட்டு வந்திருக்கே?

இதென்ன சோதனை?

தினமும் இரவில் மகளை அணைத்தபடி வேதனையில் மனம் குமுற இரகசியமாய் தலையணை நனையும் வண்ணம் கண்ணீர் உகுப் பாள் சங்கமித்திரை.

குழந்தை இனியா பெரிய மனித தோரணையில் அவளை 'மித்ரா' என்று தான் அழைப்பது வழக்கம்!

''மித்ரா! தாத்தாகிட்ட என்னவோ சொன்னியே? நாம்ப ஊருக்குப் போறோமா? அந்த எஸ்டேட்டுல என்னவெல்லாம் இருக்காம்?'' ஆர்வம் ததும்ப இனியா, அவளை ஊன்றிப் பார்த்தாள்.

''செடி, கொடி, மரம், பூக்கள்னு நிறைய இருக்கு. வேடிக்கை பார்த்துட்டே இருக்கலாம். அங்கே சில்லுன்னு காத்து வீசும். ரொம் பவே குளிரும். அதனால இனியா குட்டி எப்பவும் ஸ்வெட்டர் போட் டுக்கிட்டுத்தான் இருக்கணும். இல்லேன்னா சளி பிடிச்சுக்கும் சரியா? அங்கே நாரைகள், பஞ்ச வர்ணக்கிளிகள், மைனாக்கள் எல்லாம் நிறைய இருக்கு. அப்புறம் சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர் சன்னதி இருக்கு. அதுக்குப் பக்கத்துல வெண்ணெய் உருண்டைப் பாறைன்னு... பிரம்மாண்டமான பாறை இருக்கு..அப்புறமா... நம்ம வீட்டுக்குப் பின்னால சரிவுல இறங்கிப் போனா.. சிலுசிலுன்னு ஒரு நீரோடையைப் பார்க்கலாம்...''

''எல்லாத்தையும் எனக்கு நீ காட்டுவியா மித்ரா?'' குழந்தை ஏக் கமாய் கேட்டது.

''ஓ. தாராளமா! இந்தப் பத்து நாளும் உன் கிட்டவே இருந்து... தூங்கு மூஞ்சி மரம், தொட்டாச்சிணுங்கி செடி, வானவில் எல்லாத் தையும் காட்டறேன்.

செண்டு செண்டா பூத்திருக்கிற ரோஜாக்களைப் பறிச்சுத் தர்றேன். குரங்குகள், சாம்பல் நிற அணில்கள், வரையாடுகளையும் உனக்கு நான் காமிக்கிறேன்...''

''ஹைய்யா.. மித்ரா! உன்னை எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு'' என்று கூறியபடி தனது ஈரமான இதழ்களால் இவளது கன்னத்தில் இச் பதித்தாள்.



''ஸ்கூல்லே என்கூட படிக்கிற பசங்க எல்லாரும் அவங்கவங்க டாடிகூட வர்றாங்க.. ப்ளீஸ் மித்ரா! என் டாடியை ஒரே ஒரு வாட்டி எனக்கு காமிச்சு குடுக்கிறியா?

ஒன்லி ஒன்டைம் காமிச்சா போதும். அதுக்கு அப்புறமா நான் உன் னைத் தொந்தரவே பண்ண மாட்டேன். சரியா?'' பரிதாபமாய் கேட்ட குழந்தையைப் பார்த்து.. அனிச்ச மலராய் முகம் வாடிப் போனாள் மித்ரா.

''இனியா கண்ணு! உங்கப்பாவைப் பத்தின பேச்சை நீ எடுக்கவே படாதுன்னு.. நான் சொல்லியிருக்கேனே? பெரியவங்க பேச்சை மீற லாமா? செல்லம்? அம்மாவுக்கு மனசு வருத்தமா இருக்கும்னு.. எத் தனை வாட்டி உன்கிட்ட நான் சொல்லியிருக்கேன்? மறந்துட்டியா?'' அதட்டினாள் தங்கம்.

''சா... சாரி மித்ரா! இனிமே நான் டாடி பேச்சை எடுக்கவே மாட் டேன். தப்பு... தப்பு...தப்பு'' பிஞ்சுக் கைகளால் தன் கன்னங்களில் போட்டுக் கொண்டே இனியா, தன்னை விடுவித்துக் கொண்டு இறங் கிச் சென்றுவிட்டாள்.

அடுத்த இரு தினங்களில்.. எஸ்டேட்டில் முகிலை சந்திப்போம் என்று அவள் கனவிலும் கருதவில்லை.




''கடந்த நாலு வருஷமா நம்ம திரு வணங்கள் அபரிமிதமான வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் கண்டிருக்கு. இதுக்கு காரணம் நம்ம கிரிதான்.

சாதனை இளைஞர்னு எல்லோரும் பாராட்டறாங்க...ஆனா.. கிரி உள்ளூர கவ லைப்பட்டு வர வர ரொம்ப மெலிஞ்சு போயிட்டான். அவனைப் பார்க்கவே எனக்குப் பாவமா இருக்கு மாமா!

மனசாட்சி வேற அறுக்குது. தனிமையில இருக்கும்போது சதா என்னைத் துருவித் துருவி கேள்வி கேட்கிறான். என்னால எத்தனை நாளைக்கு மூடி மறைக்க முடியும்னு தெரியல...மனசுக்கு விரக்தியா சலிப்பா இருக்கு... கொஞ்ச நாளைக்கு எஸ்டேட்களுக்குப் போயி ரெஸ்ட் எடுத்துட்டு வரலாம்னு சொல்றான்'' தியாகு ஜமீன்தாரி டம் புலம்பினான்.

''தாராளமா அவன் கூட போயிட்டு வா! எந்தக் காரணத்தைக் கொண்டும் உன் வாயிலிருந்து அந்த எண்ணம் வந்துடாம பார்த் துக்கோ.. கொஞ்ச காலத்துக்கு சமாளிப்போம். தன்னால அவன் நம்ம வழிக்கு வந்துடுவான். எப்படியும் பழைய நினைவு அவனுக்

குத் திரும்பப் போறதில்லை... நாமளா சொல்லாத வரைக்கும்... அவளுக்கு எதுவும் தெரியாது. சரியா?'' அவர் அதட்டியதும் வேறு வழியின்றி தலையாட்டினான் தியாகு.

மாடியிலிருந்து இறங்கி வர எத்தனித்த முகில்... சட்டென்று தன்னை மறைத்துக் கொண்டு.. அவர்களது சம்பாஷணையை செவி மடுத்தான்.

மறுநாள் தியாகு அவனிடம் வந்து, ''ஜீப் ரெடியாயிருக்கு? எந்த எஸ்டேட்டுக்குப் போகணும்னு சொல்லு..'' என்றான்.

''தேவாரம் எஸ்டேட்டுக்கு..'' முகில் கூறியபோது திடுக்கிட்டு நிமிர்ந்தான் தியாகு.

''அங்கதான் அந்த ஆஞ்சநேயர் சன்னதி இருக்காம்.. சில பேருகிட்டே விசாரிச்சு தெரிஞ்சுகிட்டேன். நீ தான் வாயையே திறக்க மாட்டியே? நான் அந்தக் கோவிலை அவசியம் பார்க்கணும். ஜெம்ப்! கொஞ்ச காலத்துக்கு அந்த எஸ்டேட்டிலேயே தங்கலாம்னு இருக்கேன்..'' ஜீப்பை நோக்கி நடந்தான் முகில்.

யோசனையுடன் நிதானித்த தியாகு ராஜமார்த்தாண்டத்தை நெருங்கி அவரது காதருகே மெல்ல கிசுகிசுத்து விட்டு.. ஜீப்பை நோக்கி விரைந்தான்.

ராஜமார்த்தாண்டத்தின் முகம் சட்டென்று இருண்டது.

ஜீப்பை நிதானமாக ஓட்டினான் தியாகு.

சாலையின் இருமருங்கும் ஏலச்செடிகள் ஆளுயரத்திற்கு வளர்ந்திருந்தன.

''தியாகு! இந்த இடத்தைப் பார்க்கப் பார்க்க... இனம் புரியாத சந்தோஷத்திலே.. என் மனசு தத்தளிக்குது.

இமே பஸ் ஸ்டாப்பை கடந்ததும் ஒரு டீக்கடை இருக்கணுமே?..ன்னு எனக்கும் நம்பிக்கை இருக்கு கிரி'' முறுவலித்தான்

''வீட்டுக்கு வேலைக்காரி வேணாம்னு சொல்லியும் வேணும்னு அடம்புடிச்சா என் பொஞ்சாதி.''

''அப்புறம்''

''வேலைக்காரி பொஞ்சாதியா யிட்டா பொஞ்சாதி வேலைக்காரி யாயிட்டா''

-தென்கரை. சி.சங்கர், வந்தவாசி.





தியாகு.

''தியாகு! அதோ பாரேன்.. அந்தப் பலா மரத்துக் கிளையில கயித்துல ஊஞ்சல் கட்டியிருக்கே? அதுலே ஒரு குட்டிப் பாப்பா எவ்ளோ சந்தோஷமா ஊஞ்சலாடுது.. பாரேன் ஜீப்பை ஓரங்கட்டு நிறுத்து! யாரிந்த பாப்பா? சினிமாவுல வர்ற குட்டி தேவதை மாதிரி கொழு கொழுன்னு எவ்ளோ அழகு-பாரேன்.. பாப்பாவை நான் ஒரு போட்டோ எடுக்கணும்...'' செல் கேமிராவை எடுத்துக் கொண்டு ஜீப்பை விட்டு இறங்கி பலா மரத்தை நெருங்கினான் முகில்.

கிட்டத்தில் நெருங்கி அந்தக் குழந்தையைப் பார்த்தவனுக்கு குபீர் என்று தூக்கி வாரிப் போட்டது.

''இவ... இந்தப் பாப்பா..! கை காட்.. தியாகு இங்க வாயேன்'' உரத்துக்குரல் கொடுத்தான்.

''பாப்பா உன் பேரென்ன?'' கேட்ட படியே செல் கேமிராவில் அவளை சிறைப் பிடித்தான்.

''இனியா'' பச்சரிசி பற்கள் மின்னப் பூவாய் சிரித்தாள்.

''தி...தியாகு! இந்த அதிசயத்தைப் பார்த்தியா? எங்கக்கா வெண்ணிலா மாதிரியே இந்தக் குழந்தை இருக்குல்ல?

கிட்டத்தட்ட இதே வயசுல தான் வெண்ணிலா இறந்து போனா... நம்ம பங்களாவுல ஆளுயரத்தில அவ போட்டோ இருக்கே? அச்சு அசலா ஜெராக்ஸ் எடுத்த மாதிரியில்ல.. இந்தக் குழந்தை இருக்கு?'' திகைப்புடன் கேட்டான்.

''ஆ..ஆமாம் கிரி! கொஞ்சம் கூட மாற்றமில்ல.. அதிசயமா இருக்கே?'' அதிர்ச்சியுடன் முணுமுணுத்தான் தியாகு.

''பாப்பா! உன் கூட யாரும் வரலையா? நீ மட்டும் தனியா ஊஞ்சலாடிக்கிட்டு இருக்கியே?'' அவளது குண்டு கன்னத்தை வருடிய படியே கேட்டான் முகில்.

''அதோ வர்றாங்களே எங்க மம்மி! அவங்க கூடத்தான் நான் வந்தேன். எனக்காக காட்டு ரோஜாக்களைப் பறிச்சுட்டு வர்றதை பாருங்க.. ஹைய்யா!'' மகிழ்ச்சியுடன் சிரித்தாள் இனியா. ஆர்வமாய் திரும்பிப் பார்த்தான் முகில்.




சென்று சென்டாய் பூத்திருந்த ஆரஞ்சு வண்ணக் காட்டு ரோஜாக்களைப் பறித்துக் கொண்டு.. பக்கவாட்டிலிருந்து வந்து கொண்டிருந்த முகிலைப் பார்த்ததும் திக்கென்று மித்ரா அதிர்ந்து போனாள்.

கோபத்தால் நாடை இறுக.. அவனை உறுத்துப் பார்த்துவிட்டு வேகமாய் இனி

யாவை நெருங்கி அவளது கரங்களில் பூக்களைத் திணித்தாள்.

அவளை ஊஞ்சலிலிருந்து இறக்கி ''முன் பின் தெரியாதவங்க கிட்டே பேசக்கூடாது பாப்பா! வா போகலாம்'' என்று சொல்லி விட்டு அவளைத் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

''ஒரு நிமிஷம் நில்லுங்க ப்ளீஸ்! உங்க கிட்டே மனசு விட்டுப் பேசி சில விஷயங்களைத் தெளிவு படுத்திக்க விரும்பறேன்.

இவ உங்க குழந்தை தானா? இதை நான் ஏன் கேட்கிறேன்னா இவ, இறந்து போன எங்க அக்கா வெண்ணிலாவை.. அப்படியே உரிச்சுட்டு வந்திருக்கா.. ப்ளீஸ் சொல்லுங்க''

கெஞ்சும் தொனியில் பேசியபடி இடைமறித்தான் முகில்.

தீப்பொறி பறக்கும் விழிகளால் அவனை முறைத்தாள் மித்ரா.

மறுகணமே விலகி நடக்க முற்பட்டாள்.

''ப்ளீஸ் மித்ரா! கொஞ்சம் நிதானிச்சு நான் சொல்றதை முழுசா கேளுங்க நடந்தது என்னன்னு தெரிஞ்சா என் மேல எந்தத் தப்பும் இல்லைன்னு நீங்களே தெரிஞ்சுப்பீங்க''

''என் லைப்லே தப்பித்தவறி கூட உங்க முகத்திலேயே முழிக்கக் கூடாதுன்னு நெனச்சுட்டிருந்தேன். திரும்பத் திரும்ப பகவான் என்னை ரொம்பவே சோதிக்கிறாரு நீங்க பெரிய பணக்காரங்க நிமிஷத்துக்கு ஒரு தரம் பச்சோந்தி மாதிரி குணத்தை மாத்திப்பீங்க

''யார் நீங்க?ன்னு என்னைப் பார்த்து அப்படியொரு கேள்வியை உங்கப்பா முன்னாடி கேட்டு என் நெஞ்சுல நெருப்பை அள்ளிக் கொட்டினீங்களே? உங்கப்பா எனக்கு நடத்தை கெட்டவள்னு பட்டம் கட்டினாரே?

அதையும் நீங்க வேடிக்கை பார்த்துட்டு நின்னீங்களே? எனக்கு எதுவுமே தெரியாதுன்னு உங்க வீட்டு பெண் தெய்வத்தின் மேல சத்தியம் பண்ணினீங்களே? ஞாபகம் இருக்கா?

ஒரு பெண்ணுக்கு இழைக்கப் பட்ட அநீதியை துரோகத்தைப் பார்த்துட்டு எந்தப் பெண் தெய்வமாவது சும்மாயிருக்குமா? அதான் நான் 'களங்கமில்லாதவள்..உத்தமி'ன்னு இந்த உலகத்துக்கே வெளிச்சம் போட்டுக் காட்டற விதமா உங்க வீட்டுப் பெண் தெய்வமே எனக்கு மகளா வந்து



உணவு எதுவும் உட்கொள்ளாமல் வெறும் வயிற்றில் மாத்திரைகளை விழுங்குவது வயிற்றில் புண்களை ஏற்படுத்திவிடும்.

-சி.விஜயாம்பாள்,
கிருஷ்ணகிரி



பிறந்துட்டா அச்சு அசலா உங்க வீட்டுப் பெண் தெய்வத்தை இவ உரிச்சுட்டு வந்திருக்காளே? போங்க சொல்லுங்க உங்கப்பாகிட்ட போய் சொல்லுங்க இந்த அதிசயத்தைப் பார்த்துட்டு நிக் பிரமை பிடிச்சு நீங்க நிக்கிறீங்களே? அதைச் சொல்லுங்க. உங்க வீட்டுப் பெண் தெய்வமே நடந்த உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும். உங்களுக்கு தகுந்த தண்டனையைத் தரும்'னு நான் அன்னிக்கு சவால் விட்டுட்டு வந்தேனே, ஞாபகம் இருக்கா?

அதையும் அந்த ஜமீன்தார் கிட்டே சொல்லுங்க. இனிமே உங்க மூச்சுக்காத்து கூட என் குழந்தை மேல படக்கூடாது. விலகி வழி விடுங்க நான் போகணும்''

''நடந்தது என்னன்னு நான் சொல்லிடறேன். அதைக் கேட்டுட்டு'' சட்டென்று கையமர்த்தினான் மித்ரா.

''நீங்க எதுவும் இப்போ சொல்ல வேணாம். கேட்கிற நிலைமையில நானில்லை. அன்னிக்கு அந்த ஜமீன்தார் முன்னாடி உங்க கிட்டே எவ்ளோ கெஞ்சினேன்? கதறினேன்? ''முகில்! தயவுசெஞ்சு நடந்த உண்மையைச் சொல்லுங்க முகில்'னு கதறித் துடிச்சேனே? மறந்துட்டீங்களே சார்?

உங்களுக்கு எப்படி ஞாபகம் இருக்கும்? நீங்க இளைய ஜமீன்தாரர் ஆச்சே? உங்களுக்கு நடந்த கல்யாணமும் மறந்து போகும்? கட்டின மனைவியைக் கூட யாருன்னு தெரியாம போயிடுமே?''

''மித்ரா ப்ளீஸ்! நான் அதைத்தான் சொல்ல வர்றேன்''

''நீங்க எதையும் இப்போ சொல்ல வேணாம் சார்! அன்னிக்கு சொல்லச் சொல்லி நான் கதறினேன். இன்னிக்கு நீங்க சொல்றதை நான் கேட்கத் தயாரா இல்ல சார்''

''மித்ரா தயவு செய்து''

''நிறுத்துங்க ஜமீன்தாரர் சார்! உங்க வாயிலிருந்து எப்பவும் உண்மையே வராதுன்னு நான் நல்லாவே புரிஞ்சுக்கிட்டேன்.

''எனக்குன்னு யாருமே இல்லை'ன்னு அப்பட்டமா ஒரு பொய்யை சொன்னீங்களே?

குத்துக் கல்லாட்டம் பெத்தவங்க உயிரோட இருக்கும் போது அப்படியொரு பொய்யை எங்க எல்லார்கிட்டேயும் சொல்லி, அனுதாபத்தை சம்பாதிச்சீங்களே? காரியம் ஆகணும்னா நீங்க எதை வேணும்னாலும் சொல்வீங்கன்னு நான் அன்னிக்கு நல்லாவே புரிஞ்சுக்கிட்டேன்''

''மி..மித்ரா! சந்தர்ப்பமும், சூழ்நிலையும் எனக்கு எதிரா அமைஞ்சு போச்சு கண்ணைக் கட்டி காட்டுல விட்டாப்ல இருக்கு எப்படி என்னை நிரூபிக்கிறதுன்னே தெரியல'' தழுதழுத்தான் முகில்.

''இப்படித் தானே அன்னிக்கு நானும் தவிச்சிருப்பேன். உங்கப்பாகிட்டே எப்படி நிரூபிக்கிறதுன்னு தெரியாம கதறித் துடிச்சேனே? இருக்கிற இடமே தெரியாம கண்ணியமா வாழ்ந்துட்டு வர்ற ஒரு

பொண்ணு மேல நடத்தை கெட்டவள்னு பழி சுமத்தினா எப்படியி ருக்கும்னு தெரியுமா?

அந்த வலியும் வேதனையும் அனுபவிச்சாதான் தெரியும். இன்ன மும் கூட நாராசமா அந்த வார்த்தைகள் எதிரொலிச்சுட்டே தானிருக்கு. அவமானத்தால உடம்பே தீப்பற்றி எரிஞ்சாப்பல திகு திகுன்னு காந் துது தெரியுமா? ஆயிரம் தேள்கள் ஒரு சேரக் கொட்டினாப்பல இத யத்தில் 'விண் விண்' அப்படின்னு அப்படியொரு நரக வேதனை! இப்படிப்பட்ட வேதனையைத் தர்றதுக்கு பதிலா நீங்க என்னை ஒரே யடியா கொன்னிருக்கலாமே? இத்தனை வருஷமா நான் பட்ட அவ மானத்தை நெனச்சு அணு அணுவா செத்துட்டிருக்கேன்.

நான் மட்டுமா? என் வாழ்க்கை இப்படி பட்ட மரமா ஆயிடுச் சேன்னு எங்கப்பாவும் அம்மாவும் உள்ளூர தினம் தினம் புழுங்கிட் டிருக்காங்க இத்தனை காலமா நான் தெருப்புல நின்னு தவமிருக்காத குறையா பகவானை மனமுருக வேண்டிட்டிருந்தேன். என் வேண்டு தல் பலிச்சுடுச்சு நான் சாகறதுக்குள்ளே என்னை நிரூபிக்கணும்னு பிரி யப்பட்டேன். என் பொண்ணு மூலமா பகவான் உங்களுக்கு நிரூபிச் சுக் காட்டிட்டாரு. எனக்கு இதுவே போதும்!

அப்பாடா! மனசுல இருந்த மலையளவு பாரமும் ரண வேதனை யும் சட்டுன்னு இறங்கிடுச்சு.

மனசு இப்போ இறகு போல லேசாயிடுச்சு.

நான் ஜெயிச்சிட்டேன். நீதியும் நியாயமும் ஜெயிச்சுடுச்சு இல்ல யில்ல. நான் தப்பா சொல்லிட்டேன். என் தவக்கொழுந்து, என் வஜ் ரம், என் தங்கம், என் இனியா என்னை ஜெயிக்க வச்சிருக்கா. இனியா குட்டி பிறந்த அன்னிக்கு நான் சந்தோஷப் பட்டதை விட இன்னிக் குத் தான் பன்மடங்கு சந்தோஷப் படறேன்.

நா வர்றேன். எல்லாத்தையும் கொட்டித் தீர்த்துட்டேன். இனிமே என்னைப் பார்த்துப் பேச முயற்சிக்க வேணாம். உங்க முகத்துலே முழிச்சா எனக்கு அன்னிக்கு நான்பட்ட அவமானம் தான் ஞாபகத் துக்கு வருது. அந்த ஞாபகம் வந்தா ஆஸிட் உடம்பு முழுதும் பட்

''பொண்ணு ரொம்ப மார்டன் டைப்''
''சரி அதுக்காக கூட்ட பெருக்க கால்குலேட்டர் வாங்கி கொடுத்தா எப்படி!''
-பி.பாலாஜிகணேஷ், சிதம்பரம்





டாப்ல எரிச்சலா இருக்கு. புரியுதா சார்? குட் பை பார் எவர்!''

அவள் அவனைக் கடக்க முற்பட்ட போது அவனையும் அறியா மல் குழந்தை இனியாவின் பிஞ்சுக் கரத்தைத் தொட்டான். சட்டென்று அவனது கையைத் தட்டி விட்டாள் சங்கமித்திரை

''இவளுக்கு அம்மா, அப்பா சகலமும் நான்தான்! என் இனியா வைத் தொடறதுக்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஜாக்கி ரதை!''

ஏமாற்றமும் வருத்தமுமாய் கண்கள் கலங்க. தியாகுவை ஏறிட் டான் முகில்.

''இனியாவை வாரித் தூக்கி அணைக்க கொஞ்சணும்னு என் மனசு பரபரக்குது தெரியுமா?

மித்ரா சொன்ன மாதிரி வெண்ணிலா அக்காவே மகளா வந்து பொறந்திருக்காடா தியாகு!

தெய்வக்குழந்தை மாதிரி எவ்வோ தேஜஸ் பாரேன்'' சட்டென்று தனது செல்லை உயிர்ப்பித்து 'புளூ டூத்' பட்டனை அழுத்தினான்.

இனியாவுக்கு பதிலாக வேறொரு காட்சி தெரிய ஆரம்பித்ததும். விழிகளை அகல விரித்தான் முகில்.

'பன்னீர் மரத்தடியில் மழைக்கு ஒதுங்கி நின்ற மித்ரா கிளைகளை அசைத்தும் பன்னீர் புஷ்பங்கள் பூ மாரி சொரிந்த காட்சி! புதரில் கிடந்த வரையாட்டை மித்ரா தூக்கி நெஞ்சோடு அணைத்துக் கொஞ் சிய காட்சி!

ஆஞ்சநேயர் சன்னதிக்கு அருகிலிருந்த வெண்ணெய் உருண்டைப் பாறை! அதன் பக்கவாட்டிலிருந்த அதல பாதாளம்! பரந்த ஆலமரத் தின் அடியில் இருவருமாய் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம்!

''மைகாட்! இதை இத்தனை நாட்களாய் நான் கவனிக்காமல் இருந்து விட்டேனே?

என்கிட்டே ரெண்டு மூணு செல் போன்ஸ் இருக்கு. புளூ டூத் பட்டனை ஆன் பண்ணி ஆராய்ஞ்சு பார்க்காம இருந்துட்டேனே? சாரல்லே நனைஞ்சுட்டு வர்ற மித்ராவை வித விதமான கோணங் கள்லே குளோசப்புலே நான் படம் பிடிச்சிருக்கிற விதத்தைப் பார்த் தாலே நான் அவளை உருகி மருகி காதலிச்சிருப்பேன்னு தெரியுது.

என்கிட்ட ஆதாரம் கிடைச்சாச்சு தியாகு! இதுக்கு மேலேயும் எங் கப்பாவுக்கு பயந்து என்கிட்டே உண்மையைச் சொல்லாம மறைக் கப் போறியா?

மித்ரா பேசும்போது அவ கண்ணுல இருந்து கண்ணீர் பொங்கிப் பொங்கி வந்ததே? நீ கவனிச்சேயில்ல உனக்கு எங்களைப் பார்த்தா பாவமா இல்லையா? நீ என்ன கல் நெஞ்சக்காரனா?'' முகிலின் விழி கள் வெறுப்பை உமிழ்ந்தன.

''சாரி கிரி! நான் எல்லாத்தையும் சொல்லிடறேன். நீ இளைய ஜமீன்தாரர்னு தெரிஞ்சா மித்ராவோட அன்பு உனக்கு கிடைக்கா

துன்னு நெனக்க தான். மித்ராகிட்ட நீ உண்மையை மறைச்சே கல்யாண மும் நடந்துச்சு கல்யாணம் பண்ணிக் கிட்டு கொஞ்ச நாள் கழிச்சு விஷ யத்தை உங்கப்பா கிட்ட சொல்லி அவரு மனசை மாத்தி மித்ராவை ஜமீன் பங்களாவுக்கு அழைச்சுட்டுப் போகலாம்னு திட்டம் போட்டு ஊருக்குப் போனே''

என்று நடந்த விவரங்களை ஒன் றுவிடாமல் கூறினான் தியாகு.

''உனக்கு கடந்த கால ஞாபகமில் லாம போனதும் உங்கப்பா அதைத் தனக்கு சாதகமா பயன்படுத்தி உங்க ரெண்டு பேத்தையும் பிரிச்சுட்டாரு'' மிடறு விழுங்கினான் தியாகு.



பொன்மொழி

தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி மனக்கதவை பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறது.

-மகாத்மா காந்தி

ஆர்.பிரகாசம்,
கோவிலூர்.

''அடப்பாவி! உனக்கு மனசாட் சியே இல்லையாடா? இதுதான் நட் புக்கு அழகா? என் குடும்பத்தையே சிதறடிச்சுட்டியே?

இத்தன காலமா மித்ரா அணு அணுவா வேதனையில் புழு மாதிரி துடிச்சிருக்காளே? தெரிஞ்சோ தெரியாமலோ நான் பெரிய பாவத்தைப் பண்ணிட்டேனே?

என் மித்ரா இனிமே என்னை ஒத்துக்கவே மாட்டாளா? ஊகூம்! என் மித்ராவும் என் குழந்தையும் எனக்கு வேணும். இனி அவங்க இல்லாம என்னால வாழவே முடியாது'' புலம்பினான் முகில்.

வெள்ளை நிற பங்களாவை அடைந்ததும், படுக்கையில் சரிந்து படுத்தவனுக்கு சற்று நேரத்தில் காய்ச்சல் அனலாய் கொதித்தது. தியாகு பயந்து போய் ஜமீன்தாரருக்கு போன் செய்தான். மறுக ணமே ராஜ மார்த்தாண்டமும், ரத்தினமும் காரிலேறி விரைந்து வந் தனர்.




''வந்து நாலு நாள் கூட ஆகலை. அதுக்குள்ளே தேனிக்குப் புறப்படலாம்னு சொல்றியேம்மா? என்ன காரணம்?'' மித் ராவை ஏறிட்டார் சக்கரவர்த்தி.

''என்னை எதுவும் கேட்காதீங்கப்பா மனசு சரியில்லை கிளம்பலாம்'' விட்டால் கோவென்று அழுதுவிடுவாள் போலிருந் தது.

''சரி! உன் இஷ்டம்'' என்ற தருணத்தில் ''நாங்க உள்ளே வர லாமா?'' என்ற குரல் கேட்டு இருவரும் திரும்பினர்.

ராஜமார்த்தண்டம், ரத்தினம், தியாகு ஆகியோர் கூப்பிய கரங்க ளுடன் நின்றிருந்தனர்.

''அம்மாடி மித்ரா! இந்தப் பாவியை தயவு செய்து மன்னிச்சு டும்மா நடந்த தப்புக்கெல்லாம் நான் தான் காரணம்! இனிமேல எந் தத் தப்பும் இல்ல''

''நான் அவமானப்பட்டு நின்னப்போ உண்மையைச் சொல்லாம வேடிக்கை பார்த்துட்டு நின்னாரே? அது மகா தப்பு இல்லையா?'' அழுகையும் ஆத்திரமுமாய் கேட்டாள்.

''அதுக்கு காரணம் இருக்கும்மா! உங்களுக்கு நடந்த கல்யாணத் தைப் பத்தி என்கிட்ட சொன்னான். சொன்ன ரெண்டாவது நாளே விபத்துல மாட்டி கடந்த கால ஞாபகத்தை அவன் இழந்துட்டான் தெரியுமா?

இது சத்தியம் மித்ரா! எங்க வீட்டுப் பெண் தெய்வமே உனக்கு மகளா பிறந்திருக்காமே? அந்தஸ்து, கௌரவத்தைப் பெரிசா மதிக்க உன்கிட்ட ரொம்ப தரம் தாழ்ந்து நடந்துகிட்டேன் என்னை மன்னிச் சுடும்மா. கிரி ரொம்ப நல்லவன்மா உன் மனசுல இடம் பிடிக்கிற துக்காக தனக்கு யாருமில்லைன்னு பொய் சொல்லிட்டான். அவ்வள வுதான்!

கடந்த கால ஞாபகத்தை இழந்தாலும் அவனாவே யூகமா சில விஷயங்களைப் புரிஞ்சுகிட்டான். இத்தனை வருஷமா அவன் கல் யாணத்துக்கே சம்மதிக்கலை தெரியுமா?

நீ மகாலட்சுமி! உத்தமமான குணம் கொண்ட பத்தரை மாத்துத் தங்கம்! அதை எனக்கு, எங்க வீட்டுப் பெண் தெய்வம் உணர்த்திடுச்சு மித்ரா! இது உன் கையில்லே காலா நெனச்சுக்கிறேன். இந்தப் பாவியை மன்னிப்பியா? முகில் காய்ச்சல்லே விழுந்து அனத்திக்கிட் டிருக்கான். டாக்டர் என்னென்னவோ சொல்றாரு மித்ரா! நீயும் குழந் தையும் வந்தாத்தான். அவனைக் காப்பாத்த முடியும். வேணும்மா

''நம்ம மன்னர் பாவம்னு ஏன்? சொல்றே''

''எதிரிநாட்டு மன்னன்கிட்டயும் அடிவாங்குறார், வீட்ல மகாராணிகிட்டயும் அடிவாங்குறார்''

-தென்கரை, சி.சங்கர்
வந்தவாசி.





மணத்தக்காளி கீரையின் இலையை சாறு பிழிந்து குடித்தால் வாய்ப்புண் குணமாகும்.

முகம் பார்க்கும் கண்ணாடியை விபூதி கொண்டு துடைத்தால் 'பளிச்' சென்று ஆகிவிடும்!

-சி.விஜயாம்பாள்,
கிருஷ்ணகிரி

நாங்க உன் கால்லே'' நா தழுதழுத்தார் ராஜமார்த்தாண்டம்.

''மாமா! போதும். பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க அப்பா! வாங்க போகலாம்.'' என்றபடி இனியாவை வாரித் தூக்கினான். ''வெண்ணிலாவே உனக்கு மகளாப் பிறந்து என் புத்தியை செருப்பாலடிச்சட்டா உன்னோட பெருந்தன்மையான மனசு யாருக்கு வரும்? குழந்தையை என் கிட்டே குடும்மா'' பேத்தியை அணைத்து உச்சி முகர்ந்தார்.

''என் மருமகளும் பேத்தியும் வந்தாச்சு. நாம்ப வெளியே இருக்கலாம். முகில் கண்டிப்பா பிழைச்சுப்பான்'' என்றபடி நாசூக்காய் வெளியேறினார் ராஜமார்த்தாண்டம்.

''முகில்! முகில்! நான் மித்ரா வந்திருக்கேன். இதோ நம்ம குழந்தை இனியா வந்திருக்கா. கண் முழிச்சுப் பாருங்க முகில்!''

அவனது கரத்தை எடுத்து தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டு நம்பிக்கையைத் தளர விடாமல், இடைவிடாமல் அழைத்தாள் மித்ரா.

அவளது நம்பிக்கை வீண் போகவில்லை. முகில் மெல்ல விழிகளை மலர்த்தினான்.

''மி.. மித்ரா! வந்துட்டியா? நான் எனக்கு எனக்கு''

''மாமா எல்லாத்தையும் சொல்லிட்டாரு முகில்! நான் உங்களைத் தப்பா நெனைச்சுட்டேன். சாரி''

''நம்ம அன்பு... காதல்.. உண்மையானது மித்ரா! அதான் கடந்த கால ஞாபகத்தை இழந்தாலும் அடிமனசுல ஏதோ நெருடிக்கிட்டு இருந்ததால'' மறுகரத்தால் இனியாவை அணைத்துக் கொண்டான்

''புரியுது முகில்! கல்யாணத்துக்கு நீங்க சம்மதிக்கலை. ஒன்று சேர்ந்த அன்பு என்னிக்கும் மாறாதுன்னு நானும் புரிஞ்சுகிட்டேன்''


''ஸ்கூல்லே மத்த பசங்களுக்கு டாடி இருக்காங்க. எனக்கு இல்லையேன்னு ஏங்கினேன். டாடி கிடைச்சுட்டாரு''

குழந்தை இனியாவின் மகிழ்ச்சியில் அனைவரும் நிறைவாக சிரித்தனர்.

**முற்றும்**



# மார்கழி கோலங்கள்



13 புள்ளி- 13 வரிசை
லக்ஷ்மி ஸந்தானம்
ஸ்ரீரங்கம்



நேர்ப்புள்ளி
9 முதல் 1 வரை
அல்லி ஆனந்த்
அம்பத்தூர்